DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1405 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 10, 2023

# Ontario Government Helps More Students Enter the Skilled Trades Faster - *Premier Doug Ford*




## ஒன்றாறியோ அரசாங்கம் 11 ஆம் வகுப்பு மாணவர்களை தொழிற்பயிற்சித் திட்டத்தின் மூலம் நல்ல ஊதியம் பெறும் தொழிலுக்கு தயார்படுத்த முன்வந்துள்ளது – ஒன்றாரியோ மாகாண முதல்வர் தெரிவிப்பு

கனடாவின் ஒன்றாறியோ அரசாங்கம் 11 ஆம் வகுப்பு மாணவர்களை முழுநேர, திறமையான தொழிற்பயிற்சித் திட்டத்தின் மூலம் அவர்களை தொழிலின் அவசியம் மற்றும் நல்ல ஊதியம் பெறும் தொழிலுக்கு தயார்படுத்தும் வகையில் உதவ முன்வந்துள்ளது. தொழிற்பயிற்சிக்கான சான்றிதழைப் பெற்றவுடன், இந்த இளம் தொழிலாளர்கள் முதிர்ந்த மாணவர்களாக தங்கள் ஒன்றாரியோ மேல்நிலைப் பாடசாலை டிப்ளோமாவிற்கு விண்ணப்பிக்கலாம். இந்த மாகாணம் வரலாற்றில் இல்லாத வகையில் தொழிலாளர் பற்றாக்குறையை தொடர்ந்து எதிர்கொள்ளும் நேரத்தில், இந்த மாற்றத்தின் அர்த்தம், ஒன்றாறியோவைக் கட்டியெழுப்புவதற்கு முன்பை விட அதிகமான மாணவர்கள் தொழிற்சந்தையில் வேகமாக நுழைய முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக்போர்ட் அவர்கள். ரொறன்ரோ மாநகருக்கு அருகில் உள்ள பாடசாலை ஒன்றில் நடைபெற்ற அரச வைபவம் ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(உள்ளே தொடர்ச்சி 8ம் பக்கத்தில்)

# Women are Trailblazers, Leaders and so much more - International Women's Day message from the Hon. Mary Ng

## எமது பெண்கள் புதிய பாதைவகுப்பவர்கள், தலைவர்கள் மற்றும் பல ஆற்றல் கொண்டவர்கள். – *சர்வதேச பெண்கள் தினச் செய்தியில் அமைச்சர் மேரி இங் தெரிவிப்பு*

எமது பெண்கள் புதிய பாதைவகுப்பவர்கள், தலைவர்கள் மற்றும் பல ஆற்றல் கொண்டவர்கள். சர்வதேச மகளிர் மாதத்தின் போது, கனடாவில் பெண்களின் பல பங்களிப்பை அங்கீகரிக்கும் வாய்ப்பைப் பயன்படுத்துவது முக்கியம். கனேடியப் பெண்கள் மற்றும்



அவர்களின் சாதனைகளைக் கொண்டாடுவதோடு, சமத்துவம் மற்றும் நீதியைப் பின்தொடர்வதில் பெண்கள் எதிர்கொண்ட மற்றும் தொடர்ந்து எதிர்கொள்ளும் தடைகள் மற்றும் தடைகளையும் நாம் ஒப்புக்கொண்டு அவற்றை தகர்க்க முன்வர வேண்டும் என்று நான் அறைகூவல் விடுக்கின்றென.

(உள்ளே 8ம் பக்கத்தில் தொடர்ச்சி)

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED
ROYAL LEPAGE ignite

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI


HONOURING OUR HEROES
A COVID-19 COMMEMORATION CONCERT & FAIR!
Celebrating our brave frontline workers. Come out to support our local small businesses and artists!
Hosted By
FRONTLINE COMMUNITY CENTRE
March 25th & 26th, 2023
10 am - 10 pm
MARKHAM FAIRGROUNDS
10801 McCowan Rd, Markham, ON L3P 3J3
JOIN US FOR
MULTICULTURAL LIVE MUSIC AND DANCE SHOW
GUEST SPEAKERS & AWARD CEREMONY
VENDOR AND FOOD BOOTHS
FREE ADMISSION & PARKING
DOOR PRIZES
Funded by the Government of Canada
Canada
FRONTLINE COMMUNITY CENTRE
3031 Markham Rd, Unit 27, Scarborough, ON M1X 1L9
events@fcccanada.org
www.fcccanada.org
GET IN TOUCH 416-840-4425

Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

| | |
|---|---|
| EDITOR IN CHIEF: | R. N.Logendralingam |
| OFFICE ASSISTANT: | Pirabu |
| GRAPHIC: | Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh. |
| TECHNICAL: | Janani and Bala |
| PRINTERS: | Web News Printing Inc. |
| DISTRIBUTION: | Yogarajah, |

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# உறவுகளின் நினைவுகளோடு தங்களை வருத்திய வண்ணம் வருடங்கள் பலவாக அமைதிப் போராட்டம் நடத்தும் அன்னையரை கைது செய்வதா?

இலங்கையில் தமிழர் பகுதிகளின் காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளின் பெயர்களையும் உறவு முறைகளையும் தினமும் தங்கள் வாய்களால் உச்சரித்த வண்ணம் அமைதிப் போராட்டம் நடத்திய அந்த அன்னையரின் மனத்திடத்தைப் கவனிக்கும் உலகத் தமிழர்கள் உற்சாகத்தோடு அவர்களுக்கு உதவிகள் புரிந்து வருகின்றார்கள்.

தங்கள் அன்பிற்குரியவர்கள் இருக்கின்றார்களா? அல்லது அவர்களை 'இல்லாமல்' செய்துவிட்டீர்களா? என்பதை உள்ளபடி அறிவித்து விடுங்கள் என்ற அந்த அன்னையரின் வேண்டுகோள்கள் காற்றலைக்கு வந்து காலங்கள் கடந்து தற்போது ஏழு வருடங்களை எட்டுவதாக அறிகின்ற போது எங்கள் இதயத்துடிப்பு வேகமாக அடித்துக் கொள்கின்றது.

தமிழ்த் தலைவர்கள். சிங்களத் தலைவர்கள். இஸ்லாமியத் தலைவர்கள். மதத் தலைவர்கள் என உள்ளூர் தலைவர்கள் இத்தனை வருடங்களாக எத்தனையோ தடவைகள் அந்த தற்காலிக கூடாரத்திற்கு சென்று 'அமைதிப் போராட்டம்' நடத்தும் அந்த அன்னையரை சந்தித்தும் உரையாடியும் வந்துள்ளார்கள்.

வெளிநாடுகளிலிருந்தும் கறுப்பு உடையணிந்த வெள்ளைக்காரர்கள் எத்தனையோ பேர் இதுவரையில் அந்த தற்காலிகக் கூடாரத்திற்குள் வந்து போய் விட்டார்கள். ஆனால் அங்கு அமர்ந்திருந்து போராடும் அன்னையர்களும். அவர்களுக்கு ஆதரவுக்குரல் கொடுத்து வரும் ஆண் தோழர்களும் எவ்விதமான நம்பிக்கை தரும் செய்திகள் எதுவும் கிட்டாத வகையில் தொடர்ச்சியான முறையில் போராட்டத்தைத் தொடர்ந்து வருகின்றார்கள்.

இவ்வாறான நிலையில், நாம் குறிப்பிட்ட இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அன்னையர்களின் தலைவியாக விளங்கிவரும் பெண்மணி ஒருவர் அரசின் ஏவல்நாய்களால் வவுனியாவில் அவர்கள் போராட்டம் நடத்தும் தற்காலிக கொட்டகையின் முன்பாக வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்ற செய்தி உலகெங்கும் பரவிய நிலையில் மிகவும் அமைதியான முறையில் தன்னைக் கைது செய்ய வ்நதிருந்த காவல்துறை அதிகாரிகளோடு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி மிகவும் அமைதியாக நடந்து செல்கின்றார் என்ற செய்தியும் படங்களும் எங்கள் கண்களின் முன்பாக வந்து சென்றுள்ளன.

ஆமாம் நண்பர்களே! எமது தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா வவுனியா பொலிஸாரால் நேற்று வியாழக்கிழமை 9ம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார். வருடக்கணக்காக வீதியின் ஓரத்தில் நின்றவண்ணம் தங்கள் உறவுகளின் வரவு நிச்சயமாக அறிவிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகொளை முன்வைத்து 'அமைதிப் போராட்டத்தை' நடத்தும் அவர்களுக்கு தமிழர் தரப்புக்கள் பெரியளவில் கைகொடுக்கவில்லை என்றே அறியப்படுகின்றது

இந்த தலைவியை கைது செய்ததற்கு காவல்துறை காட்டிய காரணங்கள் நகைப்பிற்கு இடமாகத் தெரிகின்றபடியால் இந்த அற்பத்தனமான செயலைச் செய்யும் வண்ணம் ஏவப்பட்டுள்ள காவல் துறையினரை திட்டுவதா அல்லாது அரசாங்கத்தினை திட்டுவதா என்பது தெரியாமல் அந்த அமைப்பினர் தடுமாறுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உண்மை நிலையை வலியுறுத்துமாறு கோரி அவர்கள் போராட்டம் மேற்கொண்டு வரும் கொட்டகைக்கு சட்டவிரோதமாக மின்சாரத்தினை பெற்றனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த குறித்த சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார அவர்கள் தாங்கள் கடந்த 2210 நாட்களாக குறித்த கொட்டகையிலேயே போராடி வருகிறோம் என்றும் அவர்கள் போராட்டம் நடத்தும் அந்த கொட்டகை பகுதியில் இருந்த மின்சார தூணில் இருந்து வீதி மின்விளக்கு ஒன்று பொருத்தப்பட்டிருந்ததாகவும் அதிலிருந்து தமக்கான மின்சாரம் இலங்கை மின்சார சபையால் வழங்கப்பட்டிருந்தது எனவும் தான் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். இந்த அறிக்கையின் பிரதிகள் வெளிநாட்டில் உள்ள ஊடக நிறுவனங்களுக்கும் வந்து சேர்ந்துள்ளன என்பது இங்கு குறிப்பிட வேண்டியதொன்றாகும்

அதில் பழுதுகள் ஏற்பட்டபோதும் கூட இலங்கை மின்சார சபையினை சேர்ந்தவர்கள் வருகை தந்து அதனை சீரமைத்தும் தந்திருந்தனர். இந்நிலையில் தற்போது சங்கத்தின் தலைவியை ஒரு பெண் என்றும் பாராமல் திடீரென கைது செய்துள்ளமையை அறத்தை விரும்பும் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. என்றும் தெரிவித்துள்ளார் அவர்.

அந்தக் கொட்டகையின் உள்ப் பகுதி மற்றும் அதன் முற்றம் ஆகிய பகுதிகளுக்கு வடக்கு கிழக்கு ஆகிய பகுதிகளிலிருந்து மக்கள் சென்று வருகின்றதாக எமது செய்தியாளர்கள் அறிவித்துள்ளார்கள். தங்கள் போராட்டத்தை திசை திருப்புவதற்காக வே இவ்வாறான சட்டங்கள் பிரயோகிக்கப்படுகின்றது என்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் எமது செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளதை நாம் எமது வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம் என்றெல்லாம் 'காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அன்னையர்கள் அன்றாடம் அழுதும் அமைதியாகப் போராட்டம் நடத்துகின்றார்கள்.

ஆனால் இந்த ஏழச்சியிலும் பார்க்க அரசியல் இலாபம் தேட முயலும் குள்ள நரிகள் உள்ளாட்சித் தேர்தலுக்கு தயாராக விட்டன என்ற செய்தியும் நேற்று மதியமமே எமது காதுகளை நோக்கி வந்தன. நாமும் பொறுத்திருந்து பார்க்க வேண்டிய நேரம் இதுவாகும்.

# சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மன்னார் மாவட்டத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு கூடிய உலர் உணவு பொதிகள்




சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்துடன் கூடிய உலர் உணவு பொதிகள் இன்றைய தினம் புதன்கிழமை(8) காலை மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் (மெசிடோ) வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் நீண்ட காலமாக மனிதாபிமான பணியில் ஈடுபட்டு வரும் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் தனது மனிதாபிமான செயல் திட்டத்தின் ஓர் அங்கமாக மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 180 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு தொடர்ச்சியாக 3 மாதங்களுக்கு உலர் உணவு பொதிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கு அமைவாக மன்னார் மாவட்டத்தில் மன்னார்,நானாட்டான்,முசலி,மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து 180 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு முதலாம் கட்ட நிவாரணம் வழங்கி வைக்கப்பட்டு தற்போது 2 ஆம் கட்ட நிவாரண பணிகள் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார துடன் கூடிய உலர் உணவு பொதிகள் 2 வது கட்டமாக இன்றைய தினம் புதன்கிழமை(8) வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மாந்தை மேற்கு மற்றும் மடு பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள்,குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட சட்ட உதவியை நாடும் குடும்பங்கள் உள்ளடங்களாக 40 குடும்பங்களுக்கு இவ்வாறு பெறுமதியாக உலர் உணவு பொதிகள் 2 வது கட்டமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த குடும்பங்கள் 3 மாத முடிவில் சுய வருமானத்தை பெற்றுக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நிலக்கடலை விதைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமது வீடுகளில் உள்ள காணிகளில் கச்சான் செய்கை மேற்கொள்ள குறித்த கடலை விதைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

3 மாத உலர் உணவு திட்டம் நிறைவடையும் போது அவர்களின் சுய தொழில் முயற்சியாக கச்சான் அறுவடை அவர்களுக்கு கைகொடுக்கும் என்பதன் அடிப்படையில் குறித்த சுய தொழில் உதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மெசிடோ நிறுவனத்தின் மீனவ பெண்கள் குழுக்களுக்கு இன்றைய தினம் புதன்கிழமை(8) மதியம் 50 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் கருவாடு பதனிடுவதற்கான உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நாச்சிக்குடா,இரணைமா நகர் மற்றும் வலைப்பாடு ஆகிய மூன்று மீனவ பெண்கள் குழுக்களுக்கு இவ்வாறு உதவி திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவன பணியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் 7 குழுக்களுக்கு மன்னார் மாவட்டத்தில் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Handyman Wanted

Handyman with experience needed for Renovation company in Toronto.
Salary negotiable.

Contact: Thambi
OODAM MAINTENANCE WORK

Call:
(416) 464-1938

CLEANING STAFF WANTED

House Cleaning Staff Wanted

Day Shift Only.
(No Evenings Or Weekends)

Call:
(905) 4726042

# சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்க சென்ற மக்கள் மற்றும் அரச உத்தியோகஸ்தர்கள் மீது மணல் மாபியாக்கள் தாக்குதல்

இலங்கை செய்திகள் Sri Lanka News

## சம்மந்தப்பட்ட பகுதிக்கு அமைச்சர் காதர் மஸ்தான் விஜயம்



மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள ஆத்திமோட்டை கிராமத்தில் 03-03-2023 வெள்ளி மாலை மணல் அகழ்வில் ஈடுபட்ட மன்னார் நானாட்டன் பிரதேச சபை உறுப்பினர் ரொஜன் ஸ்ராலின் இன் கைப்பற்றப்பட்ட மணல் தூக்கும் வாகனத்தை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்காக சனிக்கிழமை (4) காத்திருந்த பொது மக்கள் மற்றும் கிராம சேவகர்கள் மீதும் குண்டர்களை ஏவி தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

மணல் அகழ்வு இடம் பெற்ற பகுதிக்கு பொது மக்களின் முறைப்பாட்டை தொடர்ந்து நேரடியா விஜயம் மேற்கொண்டு மணல் அகழ்வை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் உட்பட்ட குழுவினர் தடுத்து நிறுத்தி பொலிஸில் முறைப்பாடு மேற்கொண்டிருந்த நிலையில் இலுப்பைகடவை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி சம்மந்தப்பட்ட மணல் அகழ்வில் ஈடுபட்ட நபர் மீதோ, குழு மீதோ எந்த நடவடிக்கையும் மேற்கொண்டிருக்கவில்லை.

மேலும் கைப்பற்றபட்ட பொருட்களையும் பொலிஸார் கையகப்படுத்தாத நிலையில் அதை பாதுகாத்த மக்கள் மற்றும் பிரதேச செயலக ஊழியர்கள் மீதும் நேற்றைய தினம் பிரதேச சபை உறுப்பினர் ரொஜன் ஸ்ராலின் தலைமையிலான குழுவினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

15க்கு மேற்பட்ட குண்டர் குழுக்கள் இணைந்து தாக்குதல் மேற்கொண்டதில் அப்பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் உட்பட பெண் கிராம சேவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இலுப்பைகடவை பொலிஸார் பல மணி நேரம் ஆகியும் எந்த வித நடவடிக்கை மேற்கொள்ளாததை தொடர்ந்து ஆத்திமோட்டை கிராம மக்கள் மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் அமைச்சருமான காதர் மஸ்தானுக்கு விடயத்தை தெரியப்படுத்தியதை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் தக்குதலுக்கு உள்ளான நபர் கிரம சேவகர்களை சந்தித்ததுடன் ஆத்திமோட்டை பகுதி மக்களிடமும் கலந்துரையாடினார்.

அத்துடன் சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெற்ற பகுதிக்கும் விஜயம் மோற்கொண்டு பார்வையிட்டார்.

அதேநம் குறித்த பிரச்சினை மற்றும் மணல் அகழ்விற்கு வழங்கப்பட்ட முறையற்ற அனுமதி மற்றும் பொலிஸார் உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமை தொடர்பில் சம்மந்தப்பட்ட அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி உடனடி நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்ததை தொடர்ந்து அப்பகுதி மக்கள் கலைந்து சென்றனர்.

குறித்த மணல் அகழ்வுடன் சம்மந்தப்பட்ட ரொஜன் ஸ்ராலின் என தெரிவிக்கப்படும் நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் இதற்கு முன்னதாக பிரதேச சபை அமர்வில் வன்முறையில் ஈடுபட்டவர் என்பதுடன் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பல வழக்குகள் இவர் மீது உள்ளமை குறிப்பிடத்தக்கது.



அத்துடன் இம் முறை குத்துவிளக்கு சின்னதில் மன்னாரில் களமிறங்கியுள்ள ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் முருங்கன் வட்டார வேட்பாளராக மீண்டும் தேர்தலில் போட்டியிட உள்ளமை குறிப்பிடத்தகது.

# முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் 36 இலட்சம் செலவில் சிறுநீரக சிகிச்சை நிலையம் திறந்துவைப்பு!



**ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்**

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அமைக்கப்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்காக குருதிமாற்றும் சிகிச்சை நிலையம் கனடாவில் வசிக்கும் செந்தில்குமரன் நிவாரண நிதியத்தின் ஊடாக 36 இலட்சம் ரூபாசெலவில் அமைக்கப்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்கான இரத்த சுத்திகரிப்பு நிலைய திறப்பு நிகழ்வு முல்லைத்தீவு பிராந்தியசுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் உமாசங்கர் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக திரு.திருமதி. செந்தில்குமரன், மாவட்ட மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் வாசுதேவ், சிறுநீரக வைத்திய நிபுணர் வைத்தியர் பவானந்தன், மற்றும் வைத்தியர்கள் வைத்தியசாலை ஊழியர்கள், கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் மற்றும் சிறுநீரக சிகிச்சை பெறும் நோயளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து சிறப்பித்துள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் தற்போது 5 இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் காணப்படுகின்றன.

அவற்றை சரியான முறையில் இயங்குவதற்கான வசதிவாய்ப்புகளுடனான இரத்த சுத்திகரிப்பு நிலையம் செந்தில்குமாரன்நிவாரணநிதியத்தின் நிதி உதவியில் அமைக்கப்பட்டு கட்டத்திற்கு ரொறன்டோ முல்லை இரத்தசுத்திகரிப்பு நிலையம் என்ற பெயர் பலகையினை சிறுநீரக நோயாளியான இளைஞன் ஒருவர் திரைநீக்கம் செய்துவைக்க சிகிச்சை நிலையத்தினை மூன்று மாவீரர்களின் தாயாரான இரத்தினம் திரவியம்மா நாடாவை வெட்டி திறந்துவைத்தார்.

தொடர்ந்து இரத்தசுத்திகரிப்பு நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கிவைக்கப்பட்டதை தொடர்ந்து மாவட்ட வைத்தியசாலை பொது மண்டபத்தில் கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

இதன்போது செந்தில்குமரன் அவர்களினால் கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் சோன்சென் அவர்களின் சிறுநீரக சுத்திகரிப்பு நிலையத்தித்திற்கான வாழ்த்து சான்றிதழ் வழங்கிவைக்கப்பட்டது.





தொடர்ந்து மாவட்ட மருத்துவமனைக்கு அரும்பெரும் சொத்தாக சிறுநீராக குருதிமாற்று சிகிச்சை நிலையத்தினை வழங்கிய திரு.திருமதி செந்தில்குமரன் அவர்களுக்கு மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத்தினரால் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டுள்ளதுடன் நினைவு சின்னமும் வழங்கிவைக்கப்பட்டது.

நிகழ்வில் வைத்தியர்கள், தாதியர்கள், பயனாளிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிறப்பாக இடம்பெற்ற மாசி மக உற்சவம்





மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீச்சர ஆலயத்தில் மாசி மக உற்சவம் 06-03-2023 திங்கட்கிழமை (6) சிறப்பாக இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கருணானந்த குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது அதிகாலை திரு. வானந்தலைத் தொடர்ந்து எம்பெருமான் கௌரி அம்மை உடனாய திருக்கேதீச்சரப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து காலை சாந்திப் பூஜை வசந்த மண்டப பூஜை வழிபாட்டுடன் சுவாமி எழுந்தருளி தீர்த்த உற்சவத்தை மகிமையுறச் செய்ய பாலாவி தீர்த்தகரை புறப்பட்டு தீர்த்த பூஜையுடன் திருவிழா சிறப்புற நிறைவு பெற்றது.

# மட்டக்களப்பில் முன்னாள் போராளி ஒருவர் காட்டில் இருந்து மீட்பு



மட்டக்களப்பு - பட்டிப்பளை பிரதேசத்திற்கு உட்பட்ட தாந்தாமலைக் காட்டுப் பகுதியிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளில் ஒருவர் மீட்கப்பட்டுள்ளார்.

தாந்தாமலைப் பகுதியில் அமைந்துள்ள றெட்பாணா எனும் கிராமத்திற்கு அப்பாலுள்ள காட்டுப் பகுதியில் தூர்ந்து போன கொட்டகை ஒன்றில் வசித்து வந்த அவர் புதன்கிழமை (08.03.2023) மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 4 வருடங்களாக குடும்பத்தினரால் கைவிடப்பட்ட நிலையில் பாலா என்னும் நபரே நடுகாட்டில் இருந்து சடா முடியுடன் மீட்கப்பட்டுள்ளார்.

இவர் மனநலம் பாதிக்கப்பட்ட நபராக காணப்பட்டமையால் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தகவலறிந்த ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் மற்றும் அவரது சக முன்னாள் போராளிகளும் அவரை தற்போது அணுகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொடர்ந்து அவர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் காட்டிலுள்ள பழங்களை உண்டு, நீராடாமல், தலைமுடி வெட்டாமல் வாழ்ந்து வந்துள்ளதாக தெரியவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News



# மன்னார் ரோட்டரி கழகத்தின் மனிதநேயச் செயல்

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் அச்சங்குளம் கிராமத்தில் 12 வருடங்களாக ஓலைக் குடிசையிலும் மழைகாலங்களில் ஒழுகும் வீட்டிலும் குழந்தைகளுடன் வசித்து வந்த குடும்பம் ஒன்றிற்கு மன்னார் ரோட்டரி கழகத்தின் ஏற்பாட்டில் வீட்டுக்கான கூரைச் சீட்டுக்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டின் வேலைகள் நிறைவு செய்ததை மன்னார் ரோட்டரி கழகத்தின் தலைவர் ரொபின் மற்றும் உறுப்பினர் தனேஸ் ஆகியோர் சென்று பார்வையிட்டு குறித்த குடும்பத்தினருடன் கலந்துரையாடியிருந்தனர்.





இதற்கான நிதியினை நோர்வேயில் வசிக்கும் ஜீவகாந்த என்பவர் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**



# மன்னாரில் அரச காணியில் சட்ட விரோத மண் அகழ்வில் ஈடுபட்ட பிரதேச சபை உறுப்பினர்

## தடுத்து நிறுத்த சென்ற அரச அதிகாரிகளுக்கு மிரட்டல்

**பொலிஸாரும், வனவள திணைக்கள அதிகாரிகளும் உடந்தை என குற்றச்சாட்டு**

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட ஆத்திமோட்டை பகுதியில் அரசாங்கத்திற்கு சொந்தமான காணி அடாத்தாக பிடிக்கப்பட்டு பாரிய அளவு காடுகள் அழிக்கப்பட்டு அனுமதி இன்றி மணல் அகழ்வு இடம் பெற்றுள்ளது.

இந்த நிலையில் கிராம மக்களின் முறைப்பாட்டை தொடர்ந்து மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் உட்பட்ட குழுவினர் மணல் அகழ்வை நிறுத்துவதற்காக வெள்ளிக்கிழமை (3) சென்ற நிலையில் மன்னார் நானாட்டன் பிரதேச சபை உறுப்பினரும் குறித்த மணல் அகழ்வை மேற்கொள்ளும் நபரால் ஆபாச வார்தைகளால் அரச அதிகாரிகள், பொலிஸார் திட்டப்பட்டுள்ளதுடன் அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகளினால் அழுத்தங்களுக்கும் உள்ளக்கப்பட்டுள்ளர்.

சம்பவ இடத்தில் இலுப்பை கடவை பொலிஸார் பிரசன்னமாகியிருந்த போதும் சம்மந்தப்பட்ட நபர் மீதோ சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டோர் மீதோ எந்த சட்ட நடவடிக்கையோ கைது நடவடிக்கையோ மேற்கொள்ளவில்லை என தெரியவருகின்றது.

மேலும் மணல் அகழ்வுக்கு பயன் படுத்தப்பட்ட வாகனங்களை கையகப்பட்டுத்த கூட பொலிஸார் முன்வரவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.





உரிய அனுமதி இன்றி காடுகள் பல மாதங்களாக அழிக்கப்பட்டுள்ளதுடன் அரச காணியில் மணல் அகழ்வும் இடம் பெற்றுள்ள நிலையில் இலுப்பைகடவை பொலிஸாரோ வனவள திணைக்களமோ எந்த விதமான தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறித்த சட்ட விரோத நடவடிக்கைகளை தடுப்பதற்கு சென்ற அரச அதிகாரிகள் மற்றும் பொது மக்களுக்கு உரிய பாதுகாப்பை கூட வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த மணல் அகழ்வில் ஈடுபட்ட பிரதேச சபை உறுப்பினர் அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸரிடம் மரியாதை குறைவாக நடந்து கொள்ளும் காணொளி வெளியாகி உள்ளது.

MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3



ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சிறப்பாக இடம் பெற்ற மன்னார்/தோட்ட வெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி – 2023



மன்/தோட்ட வெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி செவ்வாய்க்கிழமை(7) மதியம் 1.30 மணி அளவில் பாடசாலை முதல்வர் F.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. A.ஸ்ரான்லி டி மெல், சிறப்பு விருந்தினர்களாக ஜோசப் வாஸ் நகர் பங்குத்தந்தை அருட்பணி. S.இராஜநாயகம் அடிகளார், தோட்ட வெளி பங்குத்தந்தை அருட்பணி. K.ரெரன்ஸ் குலாஸ் அடிகளார், தோட்டவெளியில் பணியாற்றும் பிரான்சிஸ்கன் சின்னஞ்சிறிய அருட்சகோதரிகளும், ஜோசப் வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டு கழக பொருளாளர் திரு. கு.கிங்சிலி, L.S.R. கடலுணவு வாணிப உரிமையாளர். R.றொயிற்ரன், தோட்டவெளி கிராம சேவகர், கௌரவ விருந்தினர்களாக மன்னார் வலய கல்வி பணிமனையின் கோட்டக்கல்வி அதிகாரி திரு. P.சந்தியோகு, முசலி உதவி பிரதேச செயலாளர் செல்வன். P.டியூசன் பயஸ், விடத்தல் தீவு மன்/தூய ஜோசப்வாஸ் மகா வித்தியாலய அதிபர் J.கியோமர் பயஸ் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதன் போது பாடசாலையில் கடந்த மாதங்களில் இடம் பெற்ற போட்டிகளின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பழைய மாணவர்கள் ஆசிரியர்களுக்கான போட்டி நிகழ்சிகளும் இடம் பெற்றது.

அத்துடன் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம் பெற்றது அதே நேரம் இறுதி நாள் நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் வெற்றிக் கேடயங்களும் விருந்தினர்களினால் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






# சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மக்கள் வங்கி மன்னார் கிளையில் பெண்களுக்கான "வனிதா வாசனா" சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கப்பட்டது



சர்வதேச மகளிர் தினத்தையொட்டி "மக்கள் வங்கி" மன்னார் கிளையினால் புதன்கிழமை (8) பெண்களுக்கான "வனிதா வாசனா" (Vanitha Vasana) சேமிப்பு கணக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



மக்கள் வங்கி மன்னார் கிளை முகாமையாளர் ஏ.கரிகேசன் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டிமெல் கலந்து கொண்டார்.

இதன் போது பெண்கள் பலர் கலந்து கொண்டு வனிதா வாசனா சேமிப்பு கணக்கை திறந்து வைத்தனர்.

குறித்த நிகழ்வில் மக்கள் வங்கி மன்னார் கிளை பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

- மன்னார் நிருபர் (8-03-2023)




Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

Sunday by Appointment only



**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னாரில் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் 2 ஆம் கட்ட நிவாரணப் பணிகள் வழங்கும் நடவடிக்கை ஆரம்பித்து வைப்பு

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) மன்னார் மாவட்டத்தில் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி மிகவும் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்ற குடும்பங்களுக்கான 2 ஆம் கட்ட நிவாரண பணியை வெள்ளிக்கிழமை (3) மன்னாரில் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கியுள்ளனர்.

பெண் தலைமைத்துவ குடும்பங்கள், போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், விசேட தேவைக்குரிய குடும்பங்கள், உடல் உள ரீதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட அடிப்படை சட்ட உதவி தேவையுடைய குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்துடன் கூடிய நிவாரணம் தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் வழங்குவது என்ற அடிப்படையில் 180 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான நிவாரணம் மற்றும் வாழ்வாதாரம் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.






அதனடிப்படையில் இரண்டாவது கட்ட நிவாரண பணிகள் தெரி குடும்பங்களுக்கு மன்னாரில் உள்ள மெசிடோ நிறுவன காரியாலயத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர் (3-03-2023)**

# உலக வன ஜீவராசிகள் தினம் மன்னாரில் அனுஸ்டிப்பு

சர்வதேச வனஜீவராசிகள் தினத்தை முன்னிட்டு வனவிலங்குகளை பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பான விசேட நிகழ்வு வெள்ளிக்கிழமை (03) மன்னார் வனவள திணைக்கள அலுவலகத்தில் தேசிய வனஜீவராசிகள் திணைகளத்தின் ஒழுங்கமைப்பில் இடம் பெற்றது.

தேசிய வனவிலங்குகளை பாதுகாக்கும் முகமாகவும் அதே நேரம் நாடளாவிய ரீதியில் அதிகரித்து வரும் பாதுகாக்கப்படும் விலங்குகளின் மரணம் மற்றும் மனிதர்களினால் வேட்டையாடப்படுதல் போன்ற பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி அவற்றுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக குறித்த தினம் அனுஸ்டிக்கப்பட்டது.

வட மாகாணத்தை பிரதி நிதித்துவப்படுத்தி உலக வனயீவராசிகள் தினம் இம்முறை மன்னாரில் இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.



குறித்த நிகழ்வுக்கு வனவிலங்கு திணைக்களத்தின் பாதுகாக்கப்பட்ட பகுதி முகாமைத்துவப் பணிப்பாளர் மஞ்சுள அமரரத்ன, வவுனியா பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி விஜயமோகன் ஆகியோர் கலந்து கொண்டு சொற்பொழிவுகளை மேற்கொண்டனர்.





குறிப்பாக யானை மனித மோதல் தொடர்பாகவும் மனிதர்களால் யானைக்கு ஏற்படும் பாதிப்பு யானையால் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் உரை நிகழ்த்தப்பட்டது.

நிகழ்வின் இறுதியில் வனஜீவராசிகள் தினத்தை முன்னிட்டு இடம் பெற்ற கட்டுரை மற்றும் ஆக்க போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதல்கள் மற்றும் பரிச்சில்களும் வழங்கி வைக்கப்படது.

**- மன்னார் நிருபர் (3-03-2023)**

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

கனடிய செய்திகள்
Canadian News

# Women are Trailblazers, Leaders, and so much More...

## International Women Day message from the Hon. Mary Ng

# எமது பெண்கள் புதிய பாதைவகுப்பவர்கள், தலைவர்கள் மற்றும் பல ஆற்றல் கொண்டவர்கள்

## சர்வதேச பெண்கள் தினச் செய்தியில் அமைச்சர் மேரி இங் தெரிவிப்பு

எமது பெண்கள் புதிய பாதைவகுப்பவர்கள், தலைவர்கள் மற்றும் பல ஆற்றல் கொண்டவர்கள். சர்வதேச மகளிர் மாதத்தின் போது, கனடாவில் பெண்களின் பல பங்களிப்பை அங்கீகரிக்கும் வாய்ப்பைப் பயன்படுத்துவது முக்கியம். கனேடியப் பெண்கள் மற்றும் அவர்களின் சாதனைகளைக் கொண்டாடுவதோடு, சமத்துவம் மற்றும் நீதியைப் பின்தொடர்வதில் பெண்கள் எதிர்கொண்ட மற்றும் தொடர்ந்து எதிர்கொள்ளும் தடைகள் மற்றும் தடைகளையும் நாம் ஒப்புக்கொண்டு அவற்றை தகர்க்க முன்வர வேண்டும் என்று நான் அறைகூவல் விடுக்கின்றென.

2015 ஆம் ஆண்டிலிருந்து, பெண்கள் தங்கள் இலக்குகளை அடைவதில் எதிர்கொள்ளும் முறையான தடைகளை அகற்ற எங்கள் லிபரல் அரசாங்கம் கடுமையாக உழைத்துள்ளது. சர்வதேச மகளிர் தினத்தன்று, பெண்கள் தொழில் முனைவோர் வியூகத்தின் (WES) கீழ் நிதியுதவி பெறுபவர்களின் இரண்டாவது சுற்று குறித்து அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைந்தேன். இந்த நிதியானது கனடா முழுவதும் உள்ள பல பெண்களுக்கு ஊக்குவிப்பு போன்றது. இது தொடங்கப்பட்டதிலிருந்து, எங்கள் WES 10,000 பெண்களுக்கு புதிய வியாபாரங்களைத் தொடங்கவும், 12,000க்கும் மேற்பட்ட பெண்களுக்கு ஏற்கனவே உள்ள வியாபார நிலையங்களை இன்னும் விரிவாக்கவும் உதவியுள்ளது.

திறமையான பெண்கள் தங்கள் வியாபார முயற்சிகளைத் தொடங்குவதற்கும் விரிவாக்குவதற்கும் உதவுவது சமத்துவம் மற்றும் பொருளாதாரத்திற்கான வெற்றியாகும். கனடிய பெண்களுக்கு இது ஒரு பயனுள்ள செய்தியாகும், ஏனென்றால் நீங்கள் சுற்றிப் பார்த்தால், திறமையான பெண்கள் எல்லா இடங்களிலும் இருப்பதைக் காணலாம். அவர்கள் வர்த்தகம், அறிவியல், பொறியியல், கலைகள் மற்றும் பல துறைகளில் வித்தியாசத்தையும் முன்னேற்றங்களையும் உருவாக்குகிறார்கள்.

நமது சமூகங்கள், நமது பொருளாதாரம் மற்றும் நமது நாட்டை என்னவாக மாற்றும் நம்பமுடியாத பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு சர்வதேச மகளிர் மாத வாழ்த்துக்கள். பெரிய கனவுகளை வைத்துக்கொண்டு, கனடாவுக்கு நீங்கள் தேவை.



### A message from the Hon. Mary Ng

Women are trailblazers, leaders, and so much more. During International Women's Month, it is important that we take the opportunity to recognize the many contributions of women in Canada. In addition to celebrating Canadian women and their accomplishments, we must also acknowledge the barriers and obstacles that women have faced, and continue to face, in their pursuit of equality and justice.

Since 2015, our government has worked hard to remove the systemic barriers women face in reaching their goals. On International Women's Day, I was thrilled to announce the second round of recipients of funding under the Women Entrepreneurship Strategy (WES). This funding is a game changer for so many women across Canada. Since it's launch, our WES has helped 10,000 women start new businesses and more than 12,000 women grow their existing ones.

Helping talented women start-up and scale-up their business ventures is a win for equality and the economy. That's good news for Canada, because if you look around, you will find that talented women are everywhere. They're making a difference in business, science, engineering, the arts, and so many other fields.

Happy International Women's Month to the incredible women and girls who make our communities, our economy, and our country what it is. Keeping dreaming big, Canada needs you.

*LJI - Arjune*

கனடிய செய்திகள்
Canadian News

# Ontario Government Helps More Students Enter the Skilled Trades Faster - Premier Doug Ford

# ஒன்ராறியோ அரசாங்கம் 11 ஆம் வகுப்பு மாணவர்களை தொழிற்பயிற்சித் திட்டத்தின் மூலம் நல்ல ஊதியம் பெறும் தொழிலுக்கு தயார்படுத்த முன்வந்துள்ளது

## ஒன்றாரியோ மாகாண முதல்வர் தெரிவிப்பு

கனடாவின் ஒன்ராறியோ அரசாங்கம் 11 ஆம் வகுப்பு மாணவர்களை முழுநேர, திறமையான தொழிற்பயிற்சித் திட்டத்தின் மூலம் அவர்களை தொழிலின் அவசியம் மற்றும் நல்ல ஊதியம் பெறும் தொழிலுக்கு தயார்படுத்தும் வகையில் உதவ முன்வந்துள்ளது. தொழிற்பயிற்சிக்கான சான்றிதழைப் பெற்றவுடன், இந்த இளம் தொழிலாளர்கள் முதிர்ந்த மாணவர்களாக தங்கள் ஒன்றாரியோ மேல்நிலைப் பாடசாலை டிப்ளோமாவிற்கு விண்ணப்பிக்கலாம். இந்த மாகாணம் வரலாற்றில் இல்லாத வகையில் தொழிலாளர் பற்றாக்குறையை தொடர்ந்து எதிர்கொள்ளும் நேரத்தில், இந்த மாற்றத்தின் அர்த்தம், ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புவதற்கு முன்பை விட அதிகமான மாணவர்கள் தொழிற்சந்தையில் வேகமாக நுழைய முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக்போர்ட் அவர்கள். ரொறன்ரோ மாநகருக்கு அருகில் உள்ள பாடசாலை ஒன்றில் நடைபெற்ற அரச வைபவம் ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்த மாற்றங்கள் மாணவர்களுக்கு நல்ல ஊதியம் தரும் வேலைகள் மற்றும் பலனளிக்கும் தொழில்களுக்கு உற்சாகமான பாதைகளை திறப்பதற்கு உதவும் வகையில் ஆரம்பிக்கப்படுகின்றன, மேலும் தொழிற்சந்தையில் திறமையானவர்ளான அதிக இளைஞர்களை ஈர்ப்பதற்காக எங்கள் அரசாங்கத்தின் தற்போதைய பணியை ஆரம்பித்துள்ளோம்" என்று ஒன்றாரியோ முதல்வர் டக் ஃபோர்ட் கூறினார். அவர் மேலம் தெரிவிக்கையில் "எங்கள் மாகாணப் பாடசாலைகளில் வர்த்தகக் கல்வியை மேம்படுத்துவது, புதியவர்களுக்கான தடைகளைத் தகர்ப்பது அல்லது தொழிலாளர்களை மேம்படுத்துவது எதுவாக இருந்தாலும், ஒன்ராறியோவைக் கட்டமைக்கும் திறமையான பணியாளர்களைப் பயிற்றுவிப்பதற்கு நாங்கள் எச்சந்தர்ப்பத்திலும் பின் நிற்கமாட்டோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய முதல்வர் "கட்டுமானத் துறையில் மட்டும், 2027ஆம் ஆண்டுக்குள் 72,000 புதிய தொழிலாளர்கள் பணி ஓய்வு பெறவுள்ளார்கள் என எதிர்பார்க்கப்படும் இந்த நேரத்தில் தொழில் வளர்ச்சியின் காரணமாக நாம் திறந்த கொள்கைகளுடன் இயங்கவேண்டும். அதனால் மட்டுமே தொழிலாளர்வெற்றிடங்களை நிரப்ப முடியும். 2031க்குள் 1.5 மில்லியன் வீடுகளைக் கட்டுவது உட்பட, மாகாணத்தின் உள்கட்டமைப்புத் திட்டங்களை வழங்க, திறமையான தொழில் நுஷணுக்கங்கள் கொண்ட அதிக வேலையாட்கள் தேவைப்படுகிறார்கள்.




தொழிலாளர், குடிவரவு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சர் Monte McNaughton, அங்கு உரையாற்றுகையில் "பல்கலைக்கழகத்திற்குச் செல்வதுதான் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான ஒரே வழி என்று நீண்ட காலமாக பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் கூறப்பட்டு வருகிறது. "நீங்கள் திறமையான ஒரு துறையில் ஒரு தொழிலைக் கற்றுக் கொண்டிருக்கும்போது, உங்களுக்கு வாழ்க்கைக்கான ஒரு தொழில் இருக்கும். எங்கள் அரசாங்கம் மாணவர்களுக்கு நல்ல ஊதியம் மற்றும் வாழ்நாள் முழுவதும் வேலை செய்வதற்குத் தேவையான தொழில்களையும் அதற்கான கருவிகளை தொடர்ந்து வழங்கும்" என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மேலும் எமது அரசாங்கம் 2023 ஆண்டு இலையுதிர்காலத்தில் முதலாளிகள், தொழிற்சங்கங்கள், கல்வி பங்குதாரர்கள், பயிற்சியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் பிறருடன் இளைஞர்கள் தொழில்துறைகளில் ஈடுபடுவதை எளிதாக்குவதற்கான வழிகள் குறித்து ஆலோசனைகளை ஆரம்பித்தோம். தற்போது தரம் 12-நிலைக் கல்வி தேவைப்படும் 106 திறமையான தொழில் துறைகளில் சிலவற்றிற்கான நுழைவுத் தகைமைகளை குறைப்பதற்கான சாத்தியக்கூறுகளும் இதில் அடங்கும். என்றார்.

அங்கு உரையாற்றி ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஸ்ரிபன் லெட்சே அவர்கள் தனது உரையில் "இந்த மாகாணத்தில் அனைத்து மாணவர்களும் முன்னேறுவதை உறுதி செய்வதற்காக, நாங்கள் உயர்நிலைப் பாடசாலை முதல் தொழில் பயிற்சிக் கற்றல் வரையிலான பாதைகளை விரைவுபடுத்துகிறோம், இறுதியில் திறமையான தொழில்களில் ஒரு தொழிலை உருவாக்குகிறோம்," என்று கூறினார். "தொழில் சார்ந்த திறன்களை நிரப்புவதே எங்கள் அரசாங்கத்தின் நோக்கம். ஒன்ராறியோ மாணவர்களை இந்த நல்ல சம்பளம் தரும் வேலைகளுடன் இணைத்து, பட்டம் பெறாத பல மாணவர்களுக்கு உதவுவதன் மூலம், இப்போது அவர்களை அர்த்தமுள்ள வேலைவாய்ப்பிற்கு இட்டுச் செல்லும் நற்சான்றிதழைப் பெறுவதன் மூலம் எதிர்காலத்தில் தொழில் வல்லுனர்களாகவும் வர்த்தகம் செய்பவர்களாகவும் விளங்குவார்கள்" என்றார்.





இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டதாகும்.

*LJI - Arjune*

கனடிய செய்திகள் Canadian News

# கனடா மேடையில் எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்களுக்கு பல தடவைகள் புகழாரம் சூட்டிய தமிழகத்தின் "பட்டிமன்றத் தாரகை" பாரதி பாஸ்கர் அவர்கள்

கனடாவில் இயங்கிய வண்ணம் எமது தாயகத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு நோயாளிகளுக்கு தேவையான பல மருத்துவ உதவி-களை வழங்கிவரும் "சர்தேச மருத்துவ மற்றும் சுகாதார அமைப்பினர் நடத்திய வருடாந்த விழாவிற்கு தமிழகத்தின் பட்டிமன்றத் தாரகை பாரதி பாஸ்கர் அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோ நகரில் இடம்பெற்ற இந்த உரையரங்கு மேடையில் பட்டிமன்றத் தாரகை பாரதி பாஸ்கர் அவர்கள் தனது நீண்ட உரையின் இடையில் பல தடவைகள் கனடா வாழ் எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்களுக்கு பல புகழாரம் சூட்டி மகிழ்ந்தார். அவரது எழுத்துக்களால் தான் ஈர்க்கப்பட்டுள்ளதாக ஈழத்தமிழர்கள் "குவிந்திருந்த" அந்த சபையில் அவர் குறிப்பிட்டார். தமிழகத்தின் பட்டிமன்றத் தாரகை பாரதி பாஸ்கர் அவர்களால் பாராட்டப்பெற்ற எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்கள் தமிழ்நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர்களால் அதிகளவில் மதிக்கப்படும் எழுத்தாளராகத் திகழ்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.







தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் அ. முத்துலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கே காணப்படும் படம் ஒன்றில் கனடா உதயன் பத்திரிகையின் பிர-தம ஆசிரியர் அவர்கள் பாரதி பாஸ்கர் அவர்களுக்கு தமிழகத்தின் பேராசிரியர் சங்கரநாராயணன் எழுதிய கனடாப் பயணம் பற்றிய "பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்" என்னும் பயண நூலைக் கையளிப்பதையும் அருகில் புகழ் பெற்ற ஈழத்து எழுத்தாளர் அ. முத்துலிங்கம் நிற்பதையும் காணலாம்.

***நன்றி புகைப்படம்: கனா - நினைவுகள்.கொம்***

*LJI - Arjune*

## THERE SHOULD BE MORE WOMEN IN POLITICS NOW MORE THAN EVER
### MESSAGE FROM 'EQUAL VOICE' FOR THE INTERNATIONAL WOMEN'S DAY

# முன்னெப்போதையும் விட இப்போது அரசியலில் அதிகமான பெண்கள் தேவைப்படுகின்றார்கள்

## "சமத்துவத்திற்கான குரல்" அமைப்பின் சர்வதேச மகளிர் தினத்தையொட்டிய அறிக்கையில் தெரிவிப்பு

அண்மையில், உலகம் முழுவதிலும் உள்ள பல உயர்மட்ட பெண் அரசியல்வாதிகள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, பாலின வேறுபாடு மற்றும் பணியிடங்களில் மேலும் மாற்றங்களை கொண்டுவரும் நோக்கில் அரசியல் நிறுவனங்களுக்கான அழைப்பாக ஈக்வல் வாய்ஸ் என்னும் சமத்துவத்திற்கான குரல் அமைப்பு 2023 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் உரிமைகளை முன்னேற்றுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பிரதிபலிக்க சர்வதேச மகளிர் தினம் ஒரு சிறந்த வழியாகும், அதே வேளையில் பெண்களை அரசியல் பதவிக்கு போட்டியிடும் வண்ணம் ஊக்குவிப்பதிலும் நமது அரசியல் நிறுவனங்களை மேலும் நவீனமயப்படுத்துவதிலும் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என நாம் உறுதியெடுப்போம்," என்று தெரிவித்துள்ளார் கனடாவின் சமத்துவத்திற்கான அமைப்பின் நிர்வாக இயக்குனர் சி நுயென் அவர்கள்.

கடந்த பெப்ரவரி 2020 இல், சமத்துவத்திற்கான குரல் அமைப்பு, பெண்கள் மற்றும் பாலின வேறுபாடுள்ள மக்கள் பணிபுரிய சிறந்த இடங்களை உருவாக்க, மத்திய, மாகாண மற்றும் உள்ளூராட்சி சட்டமன்றங்கள் எடுக்கக்கூடிய 10 பரிந்துரைகளுடன் அமைப்புரீதியான மாற்ற அறிக்கையை வெளியிட்டது. சட்டமன்றங்கள் நவீனமயமாக்கப்பட வேண்டும் என்பது ஒரு முக்கியமான விடயமாக இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோய், கர்ப்பம், கவனிப்பு இல்லாமை அல்லது பிற சூழ்நிலைகள் காரணமாக கனடாவின் ஒட்டாவா பாராளுமன்றத்திற்குச் செல்ல முடியாத அல்லது செல்லக் கூடாத நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கலப்பினப் பங்கேற்பு நவீனமயமாக்கலில் அடங்கும். கவனிப்புப் பொறுப்புகள் பெண்களுக்கு விகிதாசாரமாக வழங்கப்பட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம், கனடாவின் புள்ளிவிவரங்களின்படி, ஆண்களை விட பெண்கள் குழந்தைகளைப் பராமரிப்பதில் இரண்டு மடங்கு அதிக நேரத்தை செலவிடுகிறார்கள், அவர்கள் வீட்டிற்கு வெளியே வேலை செய்கிறார்கள் என்பதும் அடங்கும். அரசியலை ஒரு தொழிலாக எடுத்து எண்ணிப் பார்க்கின்றபோது பற்றி சிந்திக்கும்போது இது பெண்களுக்கு அதிகளவில் தடைகளை ஏற்படுத்துகிறது.

"கடந்த பல மாதங்களாக, நியூசிலாந்து பிரதமர் ஜசிந்தா ஆர்டெர்ன், ஸ்காட்டிஷ் முதல் மந்திரி நிக்கோலா ஸ்டர்ஜன், கனடாவின் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தின் உயர் கல்வி அமைச்சர் மெலனி மார்க் மற்றும் ஒன்றாரியோ மாகாணத்தின் உறுப்பினர் லாரா மே போன்ற அரசியலில் பங்கு வகித்த சக்திவாய்ந்த பெண்கள் தங்கள் உயர் பதவிகளை விட்டு விலகிச் சென்றதை நாங்கள் பார்த்திருக்கிறோம். பெண்களை முதலில் விலகிச் செல்ல தூண்டாமல் பெண் அரசியல்வாதிகள் தொடர்ந்து இருக்க விரும்பும் வகையில் நமது அரசியல் நிறுவனங்கள் செயல்படுவதை உறுதிசெய்வது அவசியமாகின்றது.

கனடாவின் சமத்துவத்திற்கான குரல் அமைப்பு அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் அலுவலகம் வைத்திருப்பவர்கள் தங்கள் பணியிடத்தில் வெற்றிபெறத் தேவையான ஆதரவை வழங்கவும், மேலும் அரசியலில் பெண்களை திறம்பட சேர்ப்பதற்கும் தக்கவைப்பதற்கும் உகந்த அரசியல் சூழலை உருவாக்கவும் இந்த நாளில் அழைப்பு விடுக்கிறது.

அத்துடன் கனடாவின் சமத்துவதத்திற்கான குரல் அமைப்பு கனடிய பாராளுமன்றத்தில் அதிக பாலின பன்முகத்தன்மைக்காக வாதிடுவதில் பெருமிதம் கொள்கிறது, மேலும் பெண்கள் வழிநடத்துவதற்கும் பாதுகாப்பாகவும் அதிகாரம் பெறுவதற்கும் அரசியலில் இடங்களை உருவாக்குவதில் உறுதியுடன் செயற்படும் என்று உறுதியளிக்கின்றது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

March 8, 2023 (OTTAWA) - With the recent resignations from several high-profile women politicians around the world, Equal Voice is marking International Women's Day 2023 with a renewed call for political institutions to commit to gender diversity and making the workplace more inclusive.

"International Women's Day is a great way for us to reflect on the progress that's been made in advancing gender equality and women's rights, while also committing to do better in encouraging women to run for political office and make our political institutions more modern," said Chi Nguyen, Executive Director at Equal Voice.

In February 2020, Equal Voice launched a Systemic Change Report with 10 recommendations that Federal, Provincial, and Territorial legislatures could take in order to make them better places for women and gender diverse people to work. A major finding was that legislatures need to modernize.

Modernization includes hybrid participation for MPs who cannot or should not travel to Ottawa due to illness, pregnancy, caregiving or other circumstances. Caregiving responsibilities fall disproportionately to women, and according to Statistics Canada, women spend twice as much time caring for children than men, including if they are also working outside the home. This creates added barriers for women when thinking about a career in politics.

"Over the last number of months, we've seen several high-profile resignations from powerful women in politics, like New Zealand Prime Minister Jacinda Ardern, Scottish First Minister Nicola Sturgeon, BC Minister of Advanced Education Melanie Mark, and Ontario MPP Laura Mae Lindo. Encouraging women to run in the first place is half the battle; the rest is making sure that our political institutions are functioning in ways that make women politicians want to stay on".

Equal Voice calls on all levels of government to provide office holders the support they need to succeed in their workplace, and to create a political environment conducive to effectively recruiting and retaining women in politics.

Equal Voice is proud to advocate for more gender diversity in Parliament in Canada, and remains committed to creating spaces in politics for women to lead and feel safe and empowered while doing so.

ev equal voice TORONTO



# ரணில் எப்போது தேர்தலை வைப்பார்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

அண்மை காலங்களில் ஊர்வலங்கள் போராட்டங்களுக்காக அதிகளவுக்கு தனியார் பேருந்துகளை வாடகைக்கு எடுப்பது ஜேவிபிதான் என்று தனியார் பேருந்துகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்திருக்கிறார். தென்னிலங்கையில் அரசாங்கத்துக்கு எதிராக பொதுமக்களின் உணர்வுகளை அதிகம் பிரதிபலிக்கும் ஒரு கட்சியாக ஜேவிபி தோற்றம் பெற்றுள்ளது. அதை வைத்து ஜேவிபி வருங்காலங்களில் நடக்கக்கூடிய தேர்தல்களில் ஒரு பிரதான கட்சியாக மேல்நிலைப் போகிறது என்ற எதிர்பார்ப்பு சிங்களம் மற்றும் தமிழ் அவதானிகளில் ஒரு பகுதியினர் மத்தியில் உண்டு.

தென்னிலங்கையில் தன்னெழுச்சி போராட்டங்களின் பின்னணியிலும், அதற்குப் பின்னரான ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியிலும் ஜேவிபியின் கை மேலோங்கி வருவது பரவலாகத் தெரிகிறது. ஆனால் அதன் பொருள் ஜேவிபி ஆட்சியைப் பிடிக்கும் ஒரு வளர்ச்சியை அடைந்து விட்டதா? ஒரு தனிக் கட்சியாக தன்னால் சாதிக்க முடியும் என்று ஜேவிபி நம்புவதாக தென் இலங்கையில் உள்ள தொழிற்சங்க வாதிகள் கூறுகிறார்கள். ஆனால் அந்த நம்பிக்கை ஒரு மிகை மதிப்பீடு என்று அவர்கள் மேலும் கூறுகிறார்கள்.

சஜித் பிரேமதாச தன்னுடைய தலைமைத்துவத்தை நிரூபிக்க தவறியிருக்கும் ஒரு பின்னணியில், சிங்களப் பொதுமக்கள் மத்தியில் ஜேவிபிக்கு ஒப்பீட்டளவில் கவர்ச்சி அதிகரித்திருக்கிறது என்பதே உண்மை. இம்முறை அக்கட்சி ஒப்பிட்டுளவில் அதிக வெற்றிகளைப் பெறக்கூடும். ஆனால் அதற்காக ஜேவிபி பிரதான எதிர்க்கட்சியாக மேலெழ முடியுமா என்பது சந்தேகந்தான்.

சில சமயங்களில் எதிர்க்கட்சிகள் பலமான ஒரு திரட்சியாக உருவாகாத வெற்றிடத்தில் நடக்கக்கூடிய எந்த ஒரு தேர்தலிலும் வாக்குகளை எதிர்க்கட்சிகள் சிதறடிக்கும். அப்பொழுது வேண்டுமானால் ஜேவிபி ஒப்பீட்டளவில் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக மேலெழக்கூடும்.

மேலும், உள்நாட்டு யதார்த்தம் ஜேவிபிக்கு சாதகமாக காணப்பட்டாலும்கூட அது ஒரு ஆளுங்கட்சியாக வருவதை அல்லது ஆட்சியைத் தீர்மானிக்கும் வளர்ச்சியைப் பெறுவதை மேற்கு நாடுகளோ இந்தியாவோ மேற்கத்திய நிதி முகவர் அமைப்புகளான ஐ.எம்.எ.்.ப் போன்றனவோ ரசிக்காது. அதை எப்படிக் குழப்பலாம் என்றுதான் சிந்திக்கும். குறிப்பாக சீனா ஏற்கனவே இலங்கைக்குள் தன் கால்களைப் பலமாக ஊன்றியிருக்கும் ஒரு பின்னணியில், இடது மரபில் வந்த ஒரு கட்சி ஆட்சிக்கு கிட்ட வருவதை மேற்கு நாடுகளும் இந்தியாவும் ஆர்வத்தோடு ரசிக்கப் போவதில்லை. அதை எப்படித் தடுக்கலாம் என்றுதான் சிந்திக்கும்.

அரகலய நசுக்கப்பட்டபோது மேற்கு நாடுகளின் தூதரகங்கள் அறிக்கைகளை வெளியிட்டன. அதற்குமப்பால் பெரியளவில் அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுக்கவில்லை. இந்தியா அதைப்பற்றி வாயையே திறக்கவில்லை. ராஜபக்சக்கள் கவிழ்க்கப்படும் வரையிலும் மேற்கு நாட்டுத் தூதரகங்கள் அரகலயவை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரித்தன, ஆசீர்வதித்தன. ஆனால் எதிர்க்கட்சிகள் பலமாக இல்லாத ஒரு பின்னணியில் அரகலய போன்ற தன்னெழுச்சிப் போராட்டங்களின்மூலம் இடது சாய்வுடைய கட்சிகள் ஆட்சியை கைப்பற்றுவதை அல்லது அதிகாரத்தைக் கையில் எடுப்பதை மேற்கு நாடுகளும் விரும்பவில்லை, இந்தியாவும் விரும்பவில்லை. இப்பொழுது ஜேவிபியின் வெற்றியைக் குறித்த எதிர்பார்ப்புகளின் மத்தியிலும் இந்திய, மேற்கு அணியின் நிலைப்பாடு அதுவாகத்தான் இருக்கும். ஐ.எம்.எ.்.ப்பின் நிலைப்பாடும் அதுவாகத்தான் இருக்கும். இவ்வாறான ஒரு பிராந்திய மற்றும் உலகளாவிய அரசியல் பின்னணியில், ஜேவிபி ஆட்சியைத் தீர்மானிக்கும் ஒரு வளர்ச்சியைப் பெறுவதைத் தடுப்பதற்கு நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் பல்வேறு வகைப்பட்ட சக்திகளும் தீவிரமாகச் செயல்படும்.

தென்னிலங்கையில் நடந்த தன்னெழுச்சிப் போராட்டங்களில் தொடங்கி இன்றுவரையிலுமான நாட்டின் அரசியல் யதார்த்தம் என்னவென்றால், எதிர்க்கட்சிகள் பலமான ஒரு திரட்சியாக இல்லை என்பதுதான். தன்னெழுச்சிப் போராட்டங்களுக்கு தலைமை தாங்கப் பிரதான எதிர்க்கட்சிகளால் முடியவில்லை. மக்கள் போராடிய போது அவை மக்களின் பின்னே சென்றன. எதிர்க்கட்சிகள் வலிமையாகத் தலைமை தாங்கத் தவறிய ஒரு வெற்றிடத்தில், அரகலயவுக்குப் பின்னாலிருந்து இயக்கிய கட்சிகளும் செயற்பாட்டு அமைப்புகளும் முன்னரங்கிற்கு வரத் தயாராக இல்லாத ஒரு வெற்றிடத்தில், அரகலய நசுக்கப்பட்டது. ரணில் ஆட்சிக்கு வந்தார். ரணில் ஆட்சிக்கு வந்தது என்பதே எதிர்கட்சிகளின் இயலாமைதான். இப்பொழுதும் ரணிலுடைய பலம் எதுவென்றால் எதிர்க்கட்சிகளுக்கிடையே ஐக்கியம் இல்லை என்பதும்தான். எதிர்க்கட்சிகள் வலிமையான ஒரு திரட்சியாக இல்லை என்பதுதான்.

ஜேவிபி தனது உயரத்தை மிகை மதிப்பீடு செய்வதும் எதிர்க்கட்சிகளுக்கு இடையில் ஓர் ஐக்கியம் ஏற்படுவதற்கு தடையாக காணப்படுவதாக தென்னிலங்கையை சேர்ந்த ஒரு தொழிற்சங்கவாதி சொன்னார். அரகலயவுக்கு எதிராக ஒற்றை யானையாகிய ரணிலும் தாமரை மொட்டும் கூட்டுச் சேர்ந்தது போல, ரணில் - ராஜபக்ச கூட்டுக்கு எதிராக எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்க வல்ல ஒரு பலமான தலைமை எதிர்க்கட்சிகள் மத்தியில் இல்லை. இந்த வெற்றிடம் உள்ளவரை ரணில் நம்பிக்கையோடு இருப்பார். தேர்தல்களையும் ஒத்தி வைப்பார். பொருளாதாரத்தை குறிப்பிடத்தக்க அளவுக்கு நிமிர்த்தியபின் ஒரு தேர்தலை வைப்பதே ரணிலின் உள்நோக்கம் போல் தெரிகிறது.

பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்கு ஐ.எம்.எ.்.ப்தான் ஒரு சர்வரோக நிவாரணி என்ற தோற்றத்தை ரணில் வெற்றிகரமாக கட்டியெழுப்பி வருகிறார். அவர் மேற்கத்திய பாரம்பரியத்தில் வந்த ஒரு தலைவர். மேற்கத்திய நிறுவனங்களை அதிகம் நம்புவார். அவருடைய மாமனாரைப் போலவே அவரும் ஐ.எம்.எ.்.ப்வை ஒரு சர்வரோக நிவாரணியாக நம்புகிறாரா?

ராஜபக்சக்களின் ஆட்சிக் காலத்தில் ஒற்றை யானையாக அவர் நாடாளுமன்றத்துக்குள் வந்த அன்று முதல் நாளிலேயே ஆற்றிய உரையில் அவர் ஐ.எம்.எ.்.ப்பிடம் போங்கள் என்றுதான் சொன்னார். அன்றிலிருந்து இன்றுவரையும் அதைத்தான் ஒரு மந்திரம்போல சொல்லி வருகிறார். ஐ.எம்.எ.்.ப் உதவிகள் கிடைத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்ற ஒரு மாயையை அவர் வெற்றிகரமாகக் கட்டியெழுப்பி வருகிறார். கடந்த செவ்வாய்க்கிழமை கிடைத்த செய்திகளின்படி சீனா கடனை மீளக் கட்டமைப்பதற்கு ஒத்துழைக்கப் போகிறது என்று தெரிகிறது. அதன் விளைவாக ஐ.எம்.எ.்.ப்பின் உதவிகள் ஏற்கனவே ரணில் எதிர்பார்த்ததுபோல இந்த மாத இறுதிக்குள் கிடைக்கக்கூடும். அவ்வாறு கிடைத்தால் அதை ஒரு பெரிய வெற்றியாக அவர் காட்டுவார். ஏற்கனவே அந்த வெற்றியை அவர் பிரகடனப்படுத்தத் தொடங்கி விட்டார். மின்சாரம் கிடைக்கின்றது, எரிபொருள் கிடைக்கின்றது என்று தனது சாதனைகளைப் பட்டியலிடும் அவர், அண்மை நாட்களாக இலங்கை ரூபாய்க்கு எதிராக டொலரின் பெறுமதி குறைவதை ஒரு சாதனையாகக் காட்டுவார். பொருளாதாரத்தை நிமிர்த்தினால் அல்லது பொருளாதாரம் நிமிர்கிறது என்ற ஒரு தோற்றத்தையாவது கட்டியெழுப்பினால், அது அவருக்கு தேர்தல் வெற்றி களுக்கான அத்திவாரமாக அமையும் என்று அவர் நம்புகிறார்.

அதன்பின் அவர் தேர்தலை வைக்கலாம். அல்லது பொருளாதாரமா? தேர்தலா? என்று கேட்டு தேர்தல்களை மீண்டும் ஒத்தியும் வைக்கலாம். அரசியல் என்பது சாத்தியக்கூறுகளின் கலை. ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிர்வாகரீதியாக எங்கெங்கே தனக்கு வாய்ப்பான சாத்தியக்கூறுகள் உண்டு என்று தெரியும். பொருத்தமான நேரத்தில் பொருத்தமான நிர்வாக ஏற்பாடுகளைக் காட்டி தேர்தலை ஒத்திவைக்க அவர் முயற்சிப்பார். தான் பலம் என்று கருதும் ஒரு காலத்தில் அவர் தேர்தலை நடத்தக்கூடும்.

அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலை நடாத்த வேண்டும். அதற்கிடையில் அவர் தன் சொந்தக் கட்சியைப் பலப்படுத்த வேண்டும். இடையில் ஒரு தேர்தலை வைத்தால் அது நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையைக் குழப்பிவிடும் என்று அவர் சொல்வதை மேற்கு நாடுகளும், ஐ.எம்.எ.்.பும் உற்றுக்கேட்பதாகவே தோன்றுகிறது.

எதிர்க்கட்சிகள் ரணில் ராஜபக்ச கூட்டுக்கு எதிராக தந்திரோபாயக் கூட்டு ஒன்றுக்கு தயாராக இருந்தால் மட்டும்தான் ரணிலைச் சவால்களுக்கு உட்படுத்தலாம். இல்லையென்றால் அவர் எதிர்க்கட்சிகளை பொருட்படுத்த மாட்டார். எதிர்க்கட்சிகள் ஐக்கியப்படப் போவதில்லை என்ற நம்பிக்கையில்தான் அவர் கூறுகிறார்... தெருவில் நின்று போராடுவதால் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்று. ஆனால் தெருவில் நின்று மக்கள் போராடியதன் விளைவாகத்தான் அவருக்கு பதவி கிடைத்தது.

மக்கள் ஆணையை இழந்து, நாட்டின் மிக மூத்த கட்சியை முற்றிலுமாகத் தோற்கடித்து, தனித்துப்போய், இனி ஓய்வு பெறலாமா என்று சிந்தித்துக் கொண்டிருந்த ஒருவருக்கு, மக்கள் தெருவில் இறங்கிப் போராடியதால்தான் அதிர்ஷ்டம் அடித்தது. ஆனால் அவர் கூறுகிறார் தெருவில் இறங்கி மாற்றத்தைச் செய்ய முடியாது என்று. ஏனென்றால் எதிர்க்கட்சிகள் பலமாக இல்லை என்பதுதான் அவருடைய மிகப் பிரதான பலம்.

பொன்னொளி மின்னிடும்
மேனியன்;
புன்னகை சிந்திடும்
ஆதவன்!
இன்பங்கள் தந்திடும்
காதலன்;
இன்முகப் பேரழ
கானவன்!
யாவரும் ஒன்றெனும்
அன்பினிலே
ஞாயிறு வாழிய
வாழியவே!



- தியாரூ



# சிங்கள ஆளும்வர்க்கத்தின் "ஜனநாயக முகத் திரை" கிழிந்தது!

**வி.தேவராஜ்**
**மூத்த ஊடகவியலாளர்**

• **சு**தந்திர இலங்கையின் ஜனநாயக மாயையை தோலுரித்துக் காட்டியவர்கள் தமிழர்களே

• தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை மறுதளித்துக் கொண்டு "ஜனநாயக பயணத்தில் தென்னிலங்கை.

சுதந்திர இலங்கையில் ஜனநாயகத்தை இழந்த தமிழ் மக்கள் கடந்த 75 வருடங்களாக தமது சுதந்திரத்துக்காக போராடி வருகின்றனர். 75 வருடங்களாக தென்னிலங்கையின் ஆளும் வர்க்கம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை கொடூரமாக மிலேச்சத்தனமாக அடக்கி ஒடுக்கி வருகின்றது. தென்னிலங்கையின் ஆளும் வர்க்கம் ஆட்சி அதிகாரத்துக்காகப் பிரிந்து நின்று போராடியபோதும் தமிழர் விவகாரத்தில் சமரசத்துக்கு இடமில்லை என்ற நிலைப்பாட்டை இன்றுவரை மிக இறுக்கமாககடைப்பிடித்துவருகின்றது.

• இனவாத போதைக்குள் இன்றும் தென்னிலங்கை

தென்னிலங்கையின் ஆளும் வர்க்கத்தின் தமிழ் மக்களுக்கெதிரான இந்த கொள்கையினையும் கோட்பாட்டினையும் தென்னிலங்கை மக்களும் தொடர்ந்தும் இன்றுவரை ஆதரித்தே வருகின்றனர்.

தென்னிலங்கையின் ஆளும் வர்க்கத்தின் இனவாத முலாம் பூசப்பட்ட கோட்பாட்டுக்குள் மூழ்கிக் கிடக்கும் தென்னிலங்கை இனவாத போதைக்குள் இருந்து விடுபட இன்றைய நிலையிலும் தயாராக இல்லை.

ஆனால் இனவிவகாரத்திற்கான தீர்வின்றி நாடு மூச்சுவிடுவதற்கே வழியில்லை என்ற நிலையிலும் தென்னிலங்கை இனவாதப் போதைக்குள் மூழ்கிக் கிடக்கின்றது.

• தென்னிலங்கை தேடும் நிரந்தரத் தீர்வு சாத்தியமில்லை!

தற்போதைய நிலையில் தென்னிலங்கை புள்ளடி போட்டு முகங்களை மாற்றினாலும் நாடு எதிர் கொண்டுள்ள பாரிய பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைப்பதாக அமையாது. வேண்டுமானால் மூச்சுவிட அவகாசம் கிடைக்கலாம்.இதற்கு மேல் நிரந்தரத் தீர்வுக்கு வழி வகுப்பதாக அமையாது.

துட்டகமுனுவிடம் ஏன் முடங்கிப் படுத்திருக்கின்றாய் என்று அவருடைய தாய் விகாரமகாதேவி வினவுகின்றாள். அதற்குப் பதில் அளித்த துட்டகமுனு வடக்கே தமிழர்கள் தெற்கே கடல். எவ்வாறு நீட்டி நிமிர்த்தி படுப்பது என்று கூறியதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இந்தப் பரம்பரையில் வந்த படைச் சிப்பாய் இன்று புத்தர் கனவில் வந்து யாழ் நிலாவரையில் புத்தர் சிலையை வைக்கக் கூறியதாக கூறுகின்றார்.

எனவே ஒரு புறம் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை மறுதளித்துக் கொண்டு மறுபுறம் தென்னிலங்கை தமது அரசியல் அபிலாஷைகுறித்தும் தமக்கான ஜனநாயகம் குறித்தும் உரத்துப் பேசிக் கொண்டிருக்கின்றது.

அந்தவகையில் தென்னிலங்கையில் ஜனநாயகம் குறித்த கலந்துரையாடல்கள் இன்று பெரிய அளவில் இடம்பெற்று வருகின்றன. ஆங்கில சிங்கள ஊடகங்களில் மாத்திரமல்ல பொது வெளியிலும் "தென்னிலங்கையின் ஜனநாயகம்" பேசு பொருளாக உள்ளது.

கடந்த 75 வருடங்களாக ஜனநாயகம் அற்ற நாட்டில் திறந்த வெளிச் சிறைச்சாலை கைதிகளாக வாழ்வதாக தமிழ் மக்கள் எழுப்பி வருகின்ற குரலை இன்று அதாவது 75 வருடங்களுக்குப் பிறகு தென்னிலங்கையில் முதன்முதலாகக் கேட்கக் கூடியதாக இருக்கின்றது.

கடந்த 75 வருடங்களாக ஜனநாயகம் அற்ற "ஜனநாயக நாட்டில்" வாழ்ந்து வருகின்றோம் என்று தென்னிலங்கை தற்போது வெளிப்படையாகவே புலம்புகின்றது.

• ஜனநாயகத்திற்கு பிரியாவிடை யா?

ஜனநாயகத்திற்கு பிரியாவிடை அளிக்கப்படுகின்றதா? என்று கேள்வி எழுப்பும் தென்னிலங்கை இலங்கையில் ஜனநாயகம் கூட்டுப் பலாத்காரத்திற்கு ஆளாகியுள்ளதாகவும் அராஜகத்தின் மூலம் ஜனநாயகம் கற்பழிக்கப்படுவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

• "நாம் சபிக்கப்பட்டவர்களா?"

இலங்கையில் இன்றைய காலகட்டத்தில் வாழ்பவர்கள் சபிக்கப்பட்டவர்களா என்றும் கேள்வி எழுப்பும் தென்னிலங்கை தாம் பாவப்பட்ட மக்களாகவே வாழ்வதாகவும் தெரிவிக்கின்றனர். ஏனென்றால் எதிலும் எங்கும் தமக்கு மன அமைதி கிடைப்பதில்லை.

நாட்டின் சாதாரண குடிமக்களுக்கு எதிராகவே அனைத்து செயற்பாடுகளும் உள்ளன. உணவு, எரிபொருள், மின்சாரம், தண்ணீர், போக்குவரத்து, சுகாதாரம், கல்வி போன்ற அத்தியாவசியமான வாழ்க்கைத் தேவைகளின் விலைகள் எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் உயர்ந்து கொண்டே செல்கிறது.

பொதுவெளியில் போஸ்டர் பிடித்து கருத்துகளை தெரிவிக்க முடியாது.

எங்களின் அகிம்சை போராட்டங்கள் பாசிச மற்றும் பயங்கரவாதம் என்று முத்திரை குத்தப்பட்டு, நாங்கள் தண்ணீர் பீரங்கிகளினாலும், கண்ணீர் புகைக் குண்டுகளினாலும், தடியடிகளுடன் மற்றும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றோம்.

• நாஜி வதை முகாமா?

• இலங்கை என்றால் என்ன? இது ஒரு நாஜி வதை முகாமா? என்று கேள்வி எழுப்பும் தென்னிலங்கை தற்போது மக்களுக்கும், மக்களின் அங்கீகாரம் இல்லாத முரட்டு அரசுக்கும் இடையேயான போராட்டம் தான் நடைபெறுகின்றது என்றும் கூறுகின்றனர்.

• மக்களுகளிடம் ஆயுதங்கள் இல்லை. அவர்களின் குரல், கைகளில் பதாதைகள் மட்டுமே இருக்கின்றன.

• மக்களுக்கு இது ஒரு நாளாந்த போராட்டமாக அமைந்துவிட்டது.

ஆனால் முரட்டுத்தனமான ஆட்சியாளரிடம் முப்படைகள், காவல்துறை மற்றும் பாதாள உலகம் என்று அனைத்து சக்திகளும் பின்புலமாக உள்ளன. அதற்கும் மேலாக கொடிய துப்பாக்கிகளும் தண்ணீர் பீச்சியடிக்கும் வாகனங்களும் கண்ணீர் புகைக்குண்டுகள் மற்றும் நிராயுதபாணிகளான மக்களைத் தாக்கவென் மேலதிகமாக தடிகளும் உள்ளன. அவர்களிடம் இல்லாதது மனசாட்சியும் மனிதாபிமானமும் மட்டுமே. இந்த அரசின் அடியாட்கள் நாட்டுக்கு சாபம் இல்லையா?

இந்த நாட்டில் வாழ்வது நிச்சயமாக ஒரு சாபமாகத் தெரிகிறது.

திருடுவதும், கமிஷன் பெறுவதும், கொள்ளையடிப்பதும் வெளிப்படையாகவே நடைபெறுகின்றது. இந்த விடயங்களை தடுத்து நிறுத்த வேண்டிய அவசியமில்லை என்றவாறு ஆட்சியாளர் உள்ளனர்.

• நாடு கடுமையான சாபத்திற்கு ஆளாகிறது.

எதுவும் வெற்றிபெறவில்லை. அனைத்தும் தோல்வியடைந்தன.

விவசாயம் அழிந்தது., கடன்கள் செலுத்தத் தவறியதால் நாடு திவாலானதாக அறிவிக்கப்பட்டது. எரிபொருள் இல்லை. உணவு இல்லை. பள்ளிகளுக்கு புத்தகங்கள் இல்லை. மருந்து இல்லை. வேலை இல்லை.

அதிகரிக்கப்பட்டுள்ள மறைமுக வரியை செலுத்த மக்களிடம் பணம் இல்லை.

மின்சாரம் மற்றும் பிற பொதுவான வசதிகளுக்கான கட்டணம் அதிகரித்து வருகிறது.

இலங்கை சபிக்கப்பட்டு நலிந்துவிட்டது. இந்த சாபத்தில் இருந்து நாடும் மக்களும் எப்போது விடுதலையாவர் என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

• அழிந்த ஜனநாயகம்

அரசியலமைப்பு மற்றும் தேர்தல் சட்டங்களில் உள்ள பல பாரிய குறைபாடுகளினால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இந்த நாட்டில் ஜனநாயகத்தின் இதயத்தை பறிக்கும் புற்று நோயாக மாறியுள்ளது. எனவே "இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு" என்பது முற்றிலும் தவறான பெயர் அரசியல் காரணங்களுக்காக தேர்தல்கள் தாமதமாகவோ அல்லது ரத்து செய்யப்பட்டோ, மக்களுக்கு அவர்களின் வாக்குரிமை மறுக்கப்படும் எந்த நாடும் தன்னை ஜனநாயகம் என்று அழைக்க முடியாது.

கவலையளிக்கும் வகையில், நிறைவேற்று அதிகாரம் நாடாளு மன்றத்தில் ஆதிக்கம் செலுத்தி அராஜகத்திற்குள் நாட்டையும் மக்களையும் ஆழ்த்தியுள்ளது. இத்தகைய போக்கினை மக்கள் தொடர்ச்சியாக பல ஜனாதிபதிகளின் கீழ் பார்க்கின்றனர். இன்று நிலைமை மோசமான நிலைக்கு திரும்பியுள்ளது.

அரசியலமைப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என அனை த்தையும் ஜனாதிபதி தனது கட்டைவிரலின் கீழ் வைத்துள்ளார்.

இலங்கை ஜனநாயகம் முன்னெப்போதும் இல்லாத வகையில் பெரும் ஆபத்தில் உள்ளது. இலங்கை எதேச்சதிகாரத்தை நோக்கிச் செல்வதாக தேர்தல் கண்காணிப்பாளர்களும் ஏனைய சிவில் சமூக அமைப்புகளும் எச்சரித்துள்ளன.

ஆனால் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய வேண்டிய தருணத்தில் பிரிந்து நின்று தமது பலத்தை சோதித்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

அண்மையில் ஜே.வி.பி எதிர்ப்பாளர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

தமது அரசியல் எஜமானர்களை மகிழ்விப்பதற்காக அணிவகுத்துச் செல்லும் பொலிஸாரின் கைகளினால், என்ன நடக்கப் போகிறது என்பதற்கான முன்னறிவிப்பாகவே இந்த மரணத்தைப் பார்க்க வேண்டியுள்ளது.

• கற்பழிப்பாளர்களின் காவலில் இலங்கை?

கூட்டுப் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்ட பெண் பலவந்தமாக கற்பழிப்பாளர்களின் காவலில் வைக்கப்படும் அதே இக்கட்டான நிலையை இலங்கையும் காண்கிறது.

பொது நிதியை திருடுவதற்கும், பொருளாதாரத்தை தவறாக நிர்வகிப்பதற்கும், திவாலாவதற்கும் காரணமானவர்கள் தொடர்ந்து ஆட்சியில் உள்ளனர்.

இன்னும் மோசமானது வரி செலுத்துவோரின் இழப்பில் மக்களை மேலும் தியாகங்களைச் செய்து பொருளாதாரத்தை சீரமைக்க உதவுமாறு இந்த அராஜக அரசியல் கதாபாத்திரங்கள் வலியுறுத்துகின்றன!

பொது நிதியை திருடுவதற்கும், பொருளாதாரத்தை தவறாக நிர்வகிப்பதற்கும், நாடு திவாலாவதற்கும் தோற்றுப்போன அரசாக இல்கை வீழ்ந்து கிடப்பதற்கும் காரணமானவர்கள் தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தில் உள்ளனர்.

• பாகிஸ்தானைப் பாருங்கள்

பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஸ் ஷெரீப் அமைச்சர்கள் மற்றும் சிறப்பு ஆலோசகர்கள் தங்கள் நாட்டின் பொருளாதார நிலைமை கருத்தில் கொண்டு சம்பளம் மற்றும் சலுகைகளை கைவிட முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளார்.

அவரைப் பொறுத்தவரை ஜூன் 2024 வரை ஆடம்பரப் பொருட்களை வாங்குவதற்கும் அனைத்து வகையான புதிய கார்களை வாங்குவதற்கும் முழுத் தடை விதிக்கப்படும்.

அமைச்சரவை உறுப்பினர்கள் பயன்படுத்தும் அனைத்து சொகுசு கார்களும் ரத்து செய்யப்பட்டு ஏலம் விடப்படும்.

அமைச்சரவை உறுப்பினர்கள் வெளிநாட்டு பயணங்களின் போது ஐந்து நட்சத்திர விடுதிகளில் தங்க மாட்டார்கள்.

அரசாங்க அதிகாரிகள் "கட்டாயமான வருகைகளை" மேற்கொள்ள மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். மேலும் அவர்கள் பொருளாதாரத்தில் பயணிப்பார்கள் அரசு அதிகாரிகளுக்கு இனி பாதுகாப்பு கார்கள் வழங்கப்படாது அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு புதிய நிர்வாக அலகு பிரிவு அல்லது துணைப்பிரிவு உருவாக்கப்படாது.

எரிவாயு மற்றும் மின்சாரத்தை சேமிக்க, கோடை காலத்தில் அலுவலகங்கள் காலை 7.30 மணிக்கு திறக்கப்படும்.

அரசு நிகழ்ச்சிகளில் ஒரு உணவு மட்டுமே அனுமதிக்கப்படும் இஸ்லாமாபாத்தில் உள்ள அனைத்து அமைச்சகங்களிலும், பிரதமர் மாளிகையிலும் ஒரே ஒரு உணவு மட்டுமே இருக்கும் தேநீர் நேரம் என்றால்இ தேநீர் மற்றும் பிஸ்கட் மட்டுமே வழங்கப்படும்.

அமைச்சகங்கள், துறைகள் மற்றும் துணைத் துறைகளின் தற்போதைய செலவு 15% குறைக்கப்படும்.

ஏக்கர் பரப்பளவில் உள்ள அரசு வீடுகள் நகர வீடுகளாக மாற்றப்படும்.

300 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள அரசு பரிசுகளை வைத்திருக்க எந்த அதிகாரியும் அல்லது அமைச்சரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள், ஒரு கருவூலக் கணக்கு மேலதிகமாக நிறுவப்படும்.

இலங்கை அரசாங்கம் அவ்வாறு செய்ய முடியாது என்பதற்கு எந்த காரணமும் இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, அதன் தலைவர்கள் தங்கள் தேசபக்தியைப் பகிரங்கமாக வெளிப்படுத்தும் வாய்ப்பையும், நாட்டிற்காக இறக்கத் தயாராக இருப்பதையும் ஒருபோதும் இழக்க மாட்டார்கள்.

இலங்கையின் எந்தவொரு அமைச்சராவது தனது உத்தியோகபூர்வ வாகனங்களை ஏலத்தில் விடுவதற்கு அனுமதிக்க விரும்புகின்றாரா?

இந்த தகுதியானவர்கள் தேர்தல் நேரத்தில் லாரிகளில் பணம் செலவழிக்கும் அளவுக்கு செல்வந்தர்கள். எனவே அவர்கள் ஏன் எரிபொருளுக்கு பணம் செலுத்த முடியாது? தங்கள் வாக்காளர்களைப் போல அவர்களால் ஏன் பஸ் அல்லது ரயிலில் பயணிக்க முடியாது? அரசியல்வாதிகள் அவ்வாறு செய்யாத வரை, பொதுப் போக்குவரத்தை மேம்படுத்த வேண்டிய அவசியத்தை அவர்கள் உணர மாட்டார்கள்.

பெரும்பாலும், பாராளுமன்ற அமர்வுகள் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன, மேலும் அவையில் கோரம் இருக்க சபாநாயகருக்கு கடினமாக உள்ளது. **(தொடர்ச்சி 14 பக்கம்)**

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# மனோ சாட்சி
## மனம் திறக்கிறார் மனோ கணேசன்
### (கனடா உதயனிற்கான பிரத்தியேகத் தொடர் - அத்தியாயம் 6)

## " ரணில்-பிரபா-கருணா-அலிசாஹிர்-மஹிந்த ஆடுபுலி ஆட்டம்"



• "புலிகள் அமைப்பில் இருந்து கருணாவை நீங்களா பிரித்தீர்கள்?" என்று ரணில் இடமோ, அலிசாஹீர் இடமோ நான் கேட்டிருந்தால் அதைவிட முட்டாள்தனமான ஒரு கேள்வி இருந்திருக்காது.
• புலிகளின் தலைவர், "ரணிலுக்கு சொல்லுங்கள்!" என்று எனக்கு சொன்ன செய்தியை நான் பிரதமர் ரணிலிடம் கூற வேண்டும் அல்லவா?
• ஆறுமுகன் தொண்டமான், பெரியசாமி சந்திரசேகரன் ஆகியோரிடமும் ரணில் கதை விட்டு தகவல்கள் பிடுங்கி இருக்கலாம்.
• பல தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசியல்வாதிகள், அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், கொழும்பு-கிளிநொச்சி யாத்திரை போய் வந்தார்கள்.
• இதில் தூரதிஷ்டசாலிகள் இரண்டு பேர். ஒருவர் ரணில் விக்கிரமசிங்க. அடுத்தவர் வேலுபிள்ளை பிரபாகரன்.

---

**காலகட்டம்: 2004 - ரணிலின் போர் நிறுத்த கால ஆட்சியின் இறுதி கட்டம். விடுதலை புலிகள் தலைவர் பிரபாகரனை சந்தித்து விட்டு நான் கிளிநொச்சியில் இருந்து கொழும்பு திரும்பிய பின் பாராளுமன்றம் சென்ற முதல் நாள்.**

---

விடுதலை புலிகள் தலைவர் பிரபாகரனை சந்தித்து விட்டு நான் கொழும்பு வந்த பிறகு தான், பிரதமர் ரணில் அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பினார்.

அதற்கடுத்த நாட்களில் பாராளுமன்றம். பிரதமர் ரணிலை, அவரது பாராளுமன்ற அலுவலகத்தில் சந்தித்தேன். நான் விடுதலை புலிகள் தலைவரை சந்திப்பதற்கு கிளிநொச்சி சென்ற பொழுது, பிரதமர் ரணில் கொழும்பில் இருக்கவில்லை.

ஆகவே அப்போது அரசாங்கத்தில் "செகண்ட்-இன்-கமாண்ட்" ஆக இருந்த அமைச்சர் கரு ஜெயசூர்யவிடம், ஜனாதிபதி சந்திரிகாவின் செய்தியை எடுத்துக்கொண்டு கிளிநொச்சி சென்று புலிகளின் தலைவரை சந்திக்கும் எனது பயணத்தை பற்றி கூறி சென்றிருந்தேன். இது ஒரு தகவல் தெரிவிப்பு மாத்திரமே.



அவ்வேளைகளில், போர் நிறுத்த உடன்பாடு இருந்தமையால், அது சட்ட விரோதமற்ற, வழமையான நடவடிக்கையாக கணிக்கப்பட்டது. இந்த மாதிரி பல தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசியல்வாதிகள், அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், கொழும்பு-கிளிநொச்சி யாத்திரை போய் வந்தார்கள்.

ஆனால், இங்கே புலிகளின் தலைவரை கண்டு பேசியதுதான் முக்கியத்துவம் பெற்றது.

கரு மூலமாக எனது கிளிநொச்சி பயணத்தை அறிந்த ரணில், புலிகளின் தலைவர் பிரபாகரனுடனான எனது சந்திப்பு பற்றி அறிய விரும்பினார்.

அதே சமயத்தில் கிளிநொச்சி சென்று வந்த, அவரது கபினட் அமைச்சர்கள் ஆறுமுகன் தொண்டமான், பெரியசாமி சந்திரசேகரன் ஆகியோரிடமும் ரணில் கதை விட்டு தகவல்கள் பிடுங்கி இருக்கலாம். அது பற்றி நான் ஒன்றும் கூறவும் இல்லை. கேட்கவும் இல்லை.

எனது சந்திப்பு பற்றி, என்னுடன் ரணிலுக்கு பேசி அறிய வேண்டிய தேவை இருந்ததை போல, எனக்கும் ரணிலுடன் இது பற்றி பேச வேண்டிய தேவை இருந்தது.

புலிகளின் தலைவர், "ரணிலுக்கு சொல்லுங்கள்!" என்று எனக்கு சொன்ன செய்தியை நான் பிரதமர் ரணிலிடம் கூற வேண்டும் அல்லவா?

விடுதலை புலிகள் தலைவர் சொன்ன, கருணா அம்மான் தொடர்பான விடயத்தை அவர் சொன்ன மாதிரியே நான் ரணிலிடம் சொன்னேன்.

"அலிசாஹீர் மௌலானா மூலமாக கருணா அம்மானை கொழும்புக்கு கூட்டி வந்தீர்கள். இன்று அவரை கொழும்பிலே ரகசியமாக ஒளித்து வைத்திருக்கிறீர்கள்." என்று பிரபாகரன் கூறியதை அப்படியே ரணிலிடம் கூறினேன்.

நான் இதை சொன்ன பொழுது ரணிலின் பாராளுமன்ற அலுவலக அறையில் நானும், ரணிலும் மட்டும் தான் இருந்தோம். மேசையின் அந்த பக்கம் ரணில் அமர்ந்திருக்க இந்த பக்கம் இருந்து நான் சொன்னேன்.

ரணில், என் முகத்தை சற்று நேரம் உற்று பார்த்துக்கொண்டு இருந்தார். பிறகு, பிரபாகரனின் குற்றச்சாட்டை முற்றாக மறுத்தார்.

புலிகள் இயக்கத்தில் உட்கட்சி முரண்பாடு, உள்சண்டை, கருணா அம்மான் பிரபாகரனுடன் முரண்பட்டார்-பிரபாவும் கருணாவை வன்னிக்கு அழைத்து கைது செய்ய முடிவு செய்தார். பிறகு சண்டையிட்டு கொண்டார்கள். இதுவே தனக்கு கிடைத்த புலனாய்வு அறிக்கை என ரணில் என்னிடம் சொன்னார்.



"இவர்கள் பிரிந்துகொண்டதற்கு நான் என்ன செய்ய முடியும்?" என்று என்னிடம் கேட்டார். அதானே! இவர் என்ன செய்ய முடியும்? அவர்கள் பிரிந்த பிறகுதானே இவர் அவர்களை வைத்து நன்றாக செய்தார், என நான் என் மனதில் நினைத்துக் கொண்டேன்.

இப்பொழுது எனது சந்தர்ப்பம். நான் சற்று நேரம் ரணில் முகத்தை உற்று பார்த்துக்கொண்டு இருந்தேன்.

"அப்படி இல்லை, இப்படி இல்லை" என்று மறுத்து நாட்டின் பிரதமருடன் விவாதம் செய்ய வேண்டிய தேவை எனக்கு இருக்கவில்லை. மேலும் மிகவும் கிளர்ச்சிகரமான அவ்வேளையில் அது எனக்கு வேண்டாத வேலையும்கூட.

"எனக்கு தெரியாது. பிரபாகரன் அப்படித்தான் சொன்னார். உங்களுக்கு சொல்ல சொன்னார். சொல்கிறேன்" என்று கூறிவிட்டு அந்த அறையில் இருந்து வெளியேற தொடங்கினேன்.

அமைதியாக அமர்ந்திருந்த ரணில், கதவு பிடியில் கைவைத்து கதவை திறக்க முற்பட்ட என்னை அழைத்து, அவரது ஆசனத்தில் அமர்ந்திருந்தபடியே "உண்மையிலேயே பிரபாகரன் அவ்வாறு கூறினாரா?" என்று கேட்டார். நான் கதவுக்கு அருகில் நின்ற படியே "ஆம்!" என்று வார்த்தையாலும், தலை அசைத்தும் கூறிவிட்டு பிரதமர் அறையில் இருந்து வெளியேறினேன்.

அடுத்த நாள் முதல் சில சம்பவங்கள் கொழும்பில் நடந்தன.

ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் எம்பியாக இருந்த அலிசாஹீர் மௌலானா தனது எம்பி பதவியை ராஜினாமா செய்தார். அதன் பின்னர் அவர் சடுதியாக நாட்டிலிருந்து வெளியேறினார். இந்த முடிவுகளுக்கு பின்னால் பிரதமர் ரணில் இருந்ததை நான் ஊகித்துக்கொண்டேன்.

அப்போது அலிசாஹீர், ஐக்கிய தேசிய கட்சியின் நேரடி உறுப்பினர். அவரது தலைவர் ரணில் விக்ரமசிங்க. பிற்காலத்தில் அலிசாஹீர், ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர். அப்போது அவரது தலைவர் நண்பர் ரவுப் ஹக்கீம். சமீபத்தில் அலிசாஹீர் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர். எனவே அவரது தலைவர் நண்பர் சஜித் பிரேமதாச. கடைசி செய்தியாக இப்போது அலிசாஹீர் மௌலானா மீண்டும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராகி விட்டதாக அறிகிறேன். இப்போது அவரது தலைவர் மீண்டும் நண்பர் ரவுப் ஹக்கீம் என எண்ணுகிறேன்.

பாவம், அலிசாஹீர். அரசியல் அலைகளால் பலமுறை அலைகலைக்கப்பட்டார். அது இன்னமும் தொடர்கிறது. அவர் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினராகவே இனி இருப்பது அவருக்கு நல்லது என நான் நினைக்கிறேன்.

கடந்த நல்லாட்சி அரசின் இறுதி வருடத்திலேயே, அலிசாஹீர் எனது அமைச்சின் பிரதி அமைச்சராக சில மாதங்கள் ஜனாதிபதி மைத்திரிபாலவால் நியமிக்கப்பட்டார். அப்போது எனக்கும், அவருக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

என்றாலும் நான் நேரடியாக அவரிடம் "நீங்களா கருணா அம்மானை புலிகள் அமைப்பில் இருந்து பிரித்து கொழும்புக்கு அழைத்து வந்தீர்கள்?" என்று ஒருபோதும் கேட்கவே இல்லை.

"புலிகள் அமைப்பில் இருந்து கருணாவை நீங்களா பிரித்தீர்கள்?" என்று அலிசாஹீர் இடமோ, ரணில் இடமோ நான் கேட்டிருந்தால் அதைவிட முட்டாள்தனமான ஒரு கேள்வி இருந்திருக்காது.

புலிகளின் கிழக்கு தளபதி கருணா அம்மான் அரசியல் தெரியாத பாப்பா கிடையாது. புலிகளின் தேசிய தலைவர் பிரபாகரனும் அரசியல் குழந்தை இல்லை. ஆக அவர்களது அமைப்பிற்குள்ளே அவர்கள் இருவரும் முரண்பட்டுக்கொண்டார்கள். ஆகவே புலிகளின் தலைவர் தனது கிழக்கு மாகாண தளபதியை தனது அமைப்பில் இருந்து வெளியேற்றினார். இதையே கருணா அம்மானிடம் கேட்டால், அவர் என்னை வெளியேற்றவில்லை, நானே தான் வெளியேறினேன் என்று கூறுவார்.

எது எப்படி இருந்தாலும் கூட, விடுதலை புலிகள் அமைப்பில் இருந்து விலகிவிட்ட கருணா அம்மானை அலிசாஹீர் கொழும்புக்கு அழைத்து வந்தார், என்பது நம்பத்தகுந்த தகவல். அலிசாஹீர் மௌலானாவின் குடும்ப உறுப்பினர் ஒருவர் கருணா அம்மானின் குடும்பத்துடன் தொடர்புள்ளவர், என்ற காரணத்தினாலேயும், கருணாவும், அலிசாஹீரும் ஒரே மட்டக்களப்பு மாவட்டகாரர்கள் என்ற முறையிலும் இந்த சம்பவங்கள் நிகழ்ந்திருக்கலாம்.

புலிகள் இயக்கத்துடன் போரும், சமாதானமும் செய்த, இலங்கை நாட்டின் பிரதமர் என்ற முறையிலே ரணில் விக்கிரமசிங்க, கருணா அம்மான் விடுதலை புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிவதை விரும்பிதானே இருப்பார். ஆகவே பிரிந்த கருணாவை, தனது எம்பீ மௌலானா ஊடாக, பத்திரமாக கொழும்பிற்கு கொண்டு வந்திருப்பார். இது பின்நாட்களில் கருணா அம்மானை பயன்படுத்தி புலிகளைத் தோற்கடிக்க ராஜபக்ச அரசாங்கத்திற்கு வழி சமைத்தது.

இதிலே துரதிஷ்டசாலிகள் இரண்டு பேர். ஒருவர் ரணில் விக்கிரமசிங்க. அடுத்தவர் வேலுபிள்ளை பிரபாகரன்.

தானே புலிகளின் பிரதான தளபதியை பிரித்து, புலிகளை பலவீனப்படுத்தி, அவர்கள் தோல்வியடைவதற்கு பெரும் காரணகர்த்தா என்று தன்னை சிங்கள மக்கள் மத்தியிலே சந்தைப்படுத்திக்கொள்ள ரணில் விக்ரமசிங்கவினால் முடியவில்லை. இது ரணிலின் துரதிஷ்டம்.

அதே போல ரணில் மீது கோபம் கொண்டு அவரை தோற்கடித்து அதன் மூலம் கொழும்பிலே ஒரு சிங்கள தேசியவாத அரசாங்கம் உருவாகினால்தான் தமிழ் ஈழத்திற்கான தனது பயணம் இலகுவாகும், என புலிகளின் தலைவர் தவறாக கணக்கு போட்டுவிட்டார். இது பிரபாகரனின் துரதிஷ்டம்.

இங்கே அதிர்ஷ்டசாலி யார்?

சந்தேகம் இல்லாமல் மஹிந்த ராஜபக்ச தான்.

பிரபாகரன் கட்டளையிட்டு ரணிலுக்கான வாக்குகளை தடுக்க, அதன்மூலம் சுலபமாக ஆட்சிபீடம் ஏறிய மஹிந்த, ரணில் கஷ்டப்பட்டு கொழும்பிற்கு கொண்டு வந்த கருணாவை தனது போர் வியூகங்களுக்கு பயன்படுத்தி வென்றார்.

ஆகவே, மஹிந்த பெரும் அதிஷ்டசாலியென்பதை போல இந்த நிகழ்வுகளின் ஏனைய இரண்டு பிரதான பாத்திரங்களான ரணிலும், பிரபாகரனும் துரதிஷ்டசாலிகள் என்று கூறினேன்.



அப்போது, துணை பாத்திரங்களான, கருணா அம்மானும் அலிசாஹீர் மௌலானாவும்? இவர்களும்கூட இரண்டு துணை தூரதிஷ்டசாலிகள்தான். இருக்கும் இடங்களில் இருந்திருந்தால் சௌக்கியமாக இருந்திருக்கும்.



# மலையகத்திலிருந்து தமிழ் பெண் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராவது எப்போது?

**- பார்த்திபன் சண்முகநாதன்**

சர்வதேச மகளிர் தினம் உலகளவில் மார்ச் 8ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இது தொடர்பிலான விசேட நிகழ்வுகளை பெண்கள் மற்றும் பொது அமைப்புகள் இலங்கையில் நடத்துகின்றன. ஊடகங்களில் விசேட நிகழ்ச்சிகள் ஒளி/ஒலிபரப்பாகி வருகிறது. தனிப்பட்ட ரீதியிலும் ஒவ்வொரு வீடுகளிலும் உள்ள பெண்களுக்கு அந்த குடும்பத்தின் ஆண்கள் பரிசுப் பொருட்களை வழங்கியும், விருந்துகளை வழங்கியும் கொண்டாடுகின்றனர்.

எனினும் இந்த தினம் கொண்டாட்டத்திற்கானதா? போராடடத்திற்கானதா? அல்லது அனுஷ்டிக்க வேண்டிய ஒரு நாளா?

1908ஆம் ஆண்டு 15,000 பெண்கள் நியூயோர்க் நகரத்தின் வழியாக குறுகிய வேலை நேரம், ஊதியம் மற்றும் வாக்களிக்கும் உரிமை ஆகியவற்றைக் கோரி அணிவகுத்துச் சென்றனர். ஒரு வருடத்தின் பின்னர் அமெரிக்காவின் சோசலிஸ கட்சி முதலாவது தேசிய மகளிர் தினத்தை அறிவித்தது. அதன் பின்னர் பல நாடுகள் படிப்படியாக மகளிர் தின நிகழ்வுகளை, பல்வேறு விடயங்களின் அடிப்படையில் நடத்த ஆரம்பித்தன. 1975ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை இந்த நாளை மகளிருக்கான சர்வதேச தினமாக அங்கீகரித்தது.

சர்வதேச மகளிர் தினம் சமூகத்தில் பெண்கள் கல்வியிலும், அரசியலிலும், பொருளாதாரத்திலும் எந்தளவு முன்னேறியிருக்கின்றார்கள் என்பதை கொண்டாடுகின்ற, சுட்டிக்காட்டுகின்ற அதேவேளை அவர்களுக்கு மறுக்கப்படுகின்ற உரிமைகள், சலுகைகள் என்பவற்றை வலியுறுத்தும் போராட்டங்களை முன்னெடுக்கும் நாளாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றது.

2023ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் மகளிர் தின தொனிப்பொருள் “டிஜிட்டல் பாலின சமத்துவத்திற்கான புதுமை மற்றும் தொழில்நுட்பம்” என்பதாகும். இந்த தொனிப்பொருள், தொழில்நுட்பம் மற்றும் இணையவழி கல்விக்கு பெண்கள் ஆற்றி வரும் பங்களிப்பை அங்கீகரித்து கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த வருடம் பெண்கள் மற்றும் பெண்களுக்கான சமத்துவமின்மையின் மீதான டிஜிட்டல் பாலின இடைவெளியின் தாக்கத்தையும் சர்வதேச மகளிர் தினம் ஆராய்கிறது. ஏனெனில் சரியான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் 2025ற்குள் பெண்கள் இணைய உலகத்துக்கான அணுகல் இல்லாத நிலை தொடர்ந்தால், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.5 ட்ரில்லியன் டொலர் இழப்பு நாடுகளுக்கு ஏற்படும் என ஐக்கிய நாடுகள் சபை கணிப்பிட்டுள்ளது.

தொழில்நுட்பம் மற்றும் இணையவழி கல்விக்கு பெண்கள் ஆற்றி வரும் பங்களிப்பை அங்கீகரிப்பதே இந்த வருட மகளிர் தினத்தின் தொனிப்பொருள்.

எனினும், இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பு என வர்ணிக்கப்படும் மலையகத் தமிழ் பெண்கள் அன்றாடம் படும் துயரங்களில் இருந்து அவர்களை மீட்பதும், அவர்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்துவதும் யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது.

கல்வி, அரசியல், பொருளாதாரம் என அனைத்து உரிமைகளும் குடும்பத்தினாலும், சமூகத்தினராலும் மறுக்கப்பட்டுள்ள ஒரு இனக்குழுவாக மலையகத் தமிழ் பெண்கள் இன்றும் தமது நாட்களை நகர்த்திக்கொண்டிருக்கின்றனர். இலங்கையில் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு சமூகமாக மலையகத் தமிழர்கள் காணப்படுகின்ற நிலையில், அந்த அடிமை சமூகத்தின் ஆண்களால் அந்த பெண்கள் மேலும் அடிமைகளாக நடத்தப்படுகின்றமை வழமையான விடயமாக மாறியுள்ளது. வேலைக்குச் செல்வதும் உழைப்பதும், குழந்தைப் பெற்றுக்கொள்வதும் அவர்களை வளர்ப்பதும், வீட்டை பராமரிப்பதும் ஏதோ அவர்களுக்கே உரிய கடமை என்ற மனநிலை இன்றும் அந்த சமூகத்தின் ஆண்களிடம் காணப்படுகிறது.

இதற்கு பல்வேறு காரணங்கள் அடிப்படையாக அமைந்துள்ளது. மறுபுறம் தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளாக மாறியுள்ள அந்த சமூகத்தில் பெண்களுக்கான உரிமைக் குரல்கள் ஒலிக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஆணாதிக்க சிந்தனையும், தேர்தலை அடிப்படையாகக் கொண்ட அரசியலும் உரிமைகள் பற்றி என்றுமே பேசியதில்லை.

1931ஆம் ஆண்டு இலங்கையின் அரசாங்க சபைக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக இடம்பெற்ற தேர்தலில் ஹட்டன் தொகுதியில் இருந்து பெரிசுந்தரமும் தலவாக்கலை தொகுதியில் இருந்து எஸ். பி.வைத்தியலிங்கமும் இந்தியத் தமிழர்கள் சார்பில் தெரிவு செய்யப்பட்டனர். இதுவே மலையகத் தமிழர்களின் பிரதிநிதித்துவ அரசியலுக்கான ஆரம்பமாக அமைந்தது. எனினும் அன்று முதல் இன்றுவரை 90 வருடங்களைக் கடந்த மலையகத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் இதுவரை ஒரு பெண்கூட நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படவில்லை.

மலையகத் தமிழர்களிடையே செல்வாக்குப் பெற்ற அரசியல் கட்சிகளான, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி உள்ளிட்ட கட்சிகள் கூட பல தசாப்தங்களாக தேர்தல் அரசியலில் ஈடுபட்டாலும் ஒரு பெண்ணைக்கூட இதுவரை தேசியப் பட்டியலிலேனும் நாடாளுமன்ற அனுப்ப முயற்சிக்கில்லை. மகளிர் தினத்தையும், மே தினத்தையும் பெரும் எடுப்பில் கொண்டாடும் அந்த கட்சிகள் பெண்களின் அரசியல் உரிமை சார்ந்து எந்தவொரு முற்போக்கான செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை என்பதே யதார்த்தம்.


கடந்த 2015ஆம் ஆண்டு மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் பெரியசாமி சந்திரசேகரனின் புதல்வி அனுஷியா சந்திரசேகரன் அந்த கட்சியில் இருந்து பிரிந்து பொதுத் தேர்தலில் போட்டியிட்டாலும் அவரால் வெற்றிபெற முடியவில்லை.

இந்த நிலைமை நீடிக்கக்கூடாது. இதில் மாற்றம் வேண்டும். 200 வருட கசப்பான வரலாற்றைக் கொண்ட மலையக தமிழ் மக்களின் 100 வருட அரசியல் வரலாற்றில் ஒரு பெண்கூட நாடாளுமன்றம் செல்லவில்லை என்பதானது, மிகமோசமான பின்தங்கிய நிலைமையையே பறைசாற்றி நிற்கின்றது.

இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் ஒன்று இடம்பெறுவதற்கான சமிக்ஞைகள் வெளிப்பட்டுள்ள நிலையில் அதில் மலையகப் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதன் ஊடாக இதற்கு பிள்ளையார் சுழி இடமுடியும் என்பதே பலரது எதிர்பார்ப்பு.



மலையகத்திலிருந்து பெண் ஒருவர் நாடாளுமன்றத்திற்கு செல்ல வேண்டும் என்ற கருத்தில் நியாயம் உள்ளது என்பதை தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஏற்றுக்கொள்கிறார். அதை தமது கூட்டணி ஆக்கபூர்வமாக பரிசீலிக்கும் என்றும் அவர் கூறினார்.





# ஐ நா கூட்டத்தில் பங்கேற்ற இலங்கை பிரதிநிதிகள் தொடர்பில் சுயாதீன வல்லுநர்கள் கேள்வி

இலங்கை மீண்டும் பன்னாட்டு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பு நாடுகளில் சர்வதேச சட்டங்கள் மற்றும் பொது அரசியல் உரிமைகளைக் கண்காணிக்கும் சுயாதீன வல்லுநர்கள் அந்த ஆணையத்திற்கு இலங்கை அனுப்பியுள்ள குழுவைப் பற்றி கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

ஜெனீவாவில் தற்போது நடைபெறும் ஐ நா மனித உரிமைகள் கூட்டத்திற்கு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 28 உறுப்பினர்கள் கொண்ட குழுவில் ஒரு உறுப்பினராக தேசிய புலனாய்வு அமைப்பின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜீவக ருவான் குலதுங்க கலந்து கொள்கிறார்.

மேஜர் ஜெனரல் குலதுங்க, பிரித்தானியவைத் தளமாகக் கொண்டுள்ள சானல் 4 தொலைக்காட்சியில் - போர்க் குற்றங்கள் குறித்து இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு (JDS) மறுக்க முடியாத சாட்சிகள் ஒளிபரப்பான பிறகும் - இலங்கை இராணுவம் போர் குற்றங்கள் ஏதும் செய்யவில்லை என்று மறுத்த இராணுவ ஆணைக்குழுவின் உறுப்பினராக இருந்தார்.

இலங்கையில் "தொடர்ச்சியாக மிகவும் கொடூரமான சித்திரவதை" செய்யும் ஒரு இராணுவ முகாமை நடத்திய குற்றச்சாட்டில் ஜீவக ருவான் குலதுங்க மற்றும் வேறு நால்வர் விசாரிக்கப்பட வேண்டும் என்று கடந்த 2017 ஆம் ஆண்டு, உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயல்திட்டம் (ITJP) கோரியிருந்தது.

குறிப்பிட்ட அந்த முகாம் ஜோசப் முகாம் என்றழைக்கப்பட்ட வவுனியாவிலிருந்த பாதுகாப்பு படை முகாமாகும் (SFHQ/W). மோசமான சித்திரவதை மற்றும் பாலியல் வன்செயலிற்காக அறியப்படும் அந்த முகாமிற்கு 2016-17 ஆம் ஆண்டு மேஜர் ஜெனரல் தலைவராக இருந்தார்.

2016 ஆம் ஆண்டு இடம்பெற்றவை தொடர்பில் ஜெனீவாவில் குறிப்பிட்ட கேள்விகள் இருந்தன.

"2016ஆம் ஆண்டு முதல் பாதுகாப்புப் படைகள் ஆட்கடத்தல், சட்டவிரோதமாகத் தடுத்து வைத்தல், சித்திரவதை, ஆண்கள் மற்றும் பெண்கள் மீது பாலியல் பலாத்காரம் செய்வதாக வந்துள்ள அறிக்கைகள் மற்றும் அப்படியான வழக்கங்கள் இன்னும் வடக்கில் அரசால் தொடரக் கூடும் என்ற கவலைகள் குறித்து பதிலளிக்கவும் மேலும் அப்படியான குற்றச்சாட்டுகள் தொடர்பிலான விசாரணைகள் மற்றும் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது குறித்து தகவல் அளிக்கவும்" என்று ஐ நா மனித உரிமைகள் ஆணையம் இலங்கையிடம் கோரியது. ஆனால் நேரடியாக பதிலளிப்பதற்கு பதிலாக இலங்கை அரசு நாட்டின் சட்டங்கள் பற்றி பேசியது.

"பாதுகாப்பு படைகளின் ஈடு பாடு குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், நாட்டின் பொதுச் சட்டங்களிற்கு கீழ் சித்திரவதைக்கு எதிரான பரிகாரங்கள் கிடைப்பதற்கு அப்பாற்பட்டு, குற்றமிழைத்ததாக கூறப்படுபவர்கள் மீது இராணுவச் சட்டம், கடற்படைச் சட்டம் மற்றும் விமானப்படைச் சட்டம் ஆகியற்றின் இராணுவச் சட்டங்கள் கீழும் இராணுவ நீதிமன்ற விசாரணை நடவடிக்கை எடுக்கப்படலாம்" என்று இலங்கை கூறியது.

ஜோசப் முகாமிற்கு பொறுப்பதிகாரியாக குலதுங்க இருந்த காலத்தில் குறைந்தது மூவர் சித்திரவதை செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாக ஐ டி ஜே பி கூறுகிறது - அந்த மூவரும் கடுமையாகச் சித்திரவதை செய்யப்பட்டு பாலியல் வன்செயலிற்கு உள்ளாக்கப்பட்டனர். அவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல அவர்கள் மற்றவர்களின் ஓலங்களிற்கு சாட்சிகளாகவும் உள்ளனர். "ஆண் மற்றும் பெண் இருபாலரும், சிலர் அருகிலிருந்த சிறைக் கொட்டில்களில் அழுதும் ஓலமிடுவதையும் நான் கேட்டேன்" என்று உயிர் தப்பிய ஒருவர் கூறினார்.

மனித உரிமைகள் தொடர்பான ஒரு கூட்டத்திற்கு புலனாய்வு பிரிவின் தலைவரை அனுப்பியது குறித்தும் செயற்பாட்டாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். மனித உரிமைகள் பாதுகாவலர்களை அச்சுறுத்தவா அது என்று அவர்கள் வினவுகின்றனர்.

ஐ நா கூட்டங்களிற்கு சர்ச்சைக்குரிய வகையில் பாதுகாப்புப் படை அதிகாரி ஒருவரை அனுப்பியதற்காக இரண்டாவது முறையாக ரணில் விக்ரமசிங்கவின் நிர்வாகம் விமர்சனத்திற்கு ஆளாகியுள்ளது.

கடந்த 2016இல், சித்திரவதைக்கு எதிரான ஐ நா குழுவின் (UNCAT) விசாரணையில் இலங்கையில் தேசிய புலனாய்வு முகமையின் தலைவர் சிரிச மெண்டிஸ் இறுக்கமாக அமர்ந்திருந்தார். நாட்டின் குற்றப் புலனாய்வு விசாரணைப் பிரிவு (CID) மற்றும் பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவு (TID) ஆகியவை போர்க்காலம் மற்றும் அதற்குப் பின்னரான காலப்பகுதியில் அவரின் கீழ் இருந்தது. அந்த சமயத்தில் இடம்பெற்ற சித்திரவதை மற்றும் பாலியல் வன்செயல் தொடர்பிலான குற்றச்சாட்டுகள் தொடர்பில் அவர் விசாரிக்கப்பட்டார்.

அந்த சமயத்தில் தற்போதைய ஜனாதிபதி விகரமசிங்க ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் கீழ் பிரதமராக இருந்தார்.

சி ஐ டி அல்லது டி ஐ டி ஆகிய பதவிகளில் அவர் இருந்த காலத்தில் இடம்பெற்ற குற்றங்களிற்கான நீதிமன்றத்தின் முன்னர் அவர் நிறுத்தப்படவில்லை. பின்னர் 2019 ஆம் ஆண்டு நாட்டின் புலனாய்வுப் பிரிவின் தலைவர் பதவியிலிருந்து விலகினார். அதற்கு சில நாட்களிற்கு முன்னர் உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நாடாளுமன்ற தேர்வுக் குழுவின் முன்னர் நாட்டில் தேவாலயங்கள், ஹொட்டல்கள் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகம் ஆகியவற்றிற்கு இருந்த அச்சுறுத்தல் குறித்து தான் அறிந்திருந்ததாகத் தெரிவித்திருந்தார்.

(11 பக்கத் தொடர்ச்சி)

# சிங்கள ஆளும்வர்க்கத்தின் "ஜனநாயக முகத் திரை" கிழிந்தது!

• சுவீடனில் பிரதமருக்கு மாத்திரமே வாகனம்

மிகவும் வளர்ந்த நாடுகளில் ஒன்றான சுவீடனில், பிரதமரைத் தவிர வேறு எந்த மக்கள் பிரதிநிதிக்கும் அதிகாரப்பூர்வ வாகனத்திற்கு உரிமை இல்லை.

• எம்.பி.க்களுக்கு பஸ், ரயில் பாஸ்

எம்.பி.க்களுக்கு பஸ், ரயில் பாஸ் வழங்கப்படுகிறது. அவர்கள் தங்கள் தனிப்பட்ட வாகனங்களை அவர்களின் சொந்த செலவில் பயன்படுத்தலாம்.

• சுவீடன் சபாநாயகருக்கும் வாகனம் இல்லை.

சுவீடன் சபாநாயகருக்கு கூட உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்படவில்லை.

சுவீடன் சபாநாயகருக்கு கூட உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்படவில்லை. இப்படிப்பட்ட நாடுகள் வளர்ந்ததில் ஆச்சரியமில்லை. இலங்கை இன்னும் வளர்ச்சியடையாமல் இருப்பதற்கு அரசியல்வாதிகளை தெய்வமாக்குவது ஒரு முக்கிய காரணம்.

எதிர்ப்பு அரசியல் அதிகரித்து வருகிறது, இது வெளிப்படையாகத் தெரிகிறது, நாடு முழுவதும் ஒரே நேரத்தில் வெகுஜனப் போராட்டங்கள் வெடித்தால், குழப்பத்திலிருந்து ஒழுங்கைக் கொண்டுவரவோ அல்லது தங்கள் அரசியல் எஜமானர்களைப் பாதுகாக்கவோ காவல்துறையோ அல்லது அரசாங்க சார்பு ஜெனரல்களோ எதுவும் செய்ய முடியாது.

• மக்கள் சக்திக்கு முன் பொலிஸாரும் இராணுவமும் நிகரில்லை.

பொதுமக்களின் கோபத்தின் மற்றொரு சுனாமி உருவாவதற்கான அறிகுறிகள் உள்ளன, மேலும் அது முழு நாட்டையும் குழப்பத்தில் மூழ்கடிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று பொரிந்து கொட்டுகின்றது தென்னிலங்கை.

ஆனால் நாடு தோற்றுப்போன அரசாக உருவெடுக்க காரணமான கர்த்தாக்களை இனம்கண்ட தென்னிலங்கை இதற்கான மூலவேரினை அடையாளப்படுத்தத் தவறிவிட்டது.

கடந்த 75 வருடங்களாக அரசோச்சியவர்களின் அரசியல் மூலதனமாக சித்தாந்தமாக இனவாதக் கோட்பாடே இருந்தது என்பதை கணக்கில் எடுக்கத் தவறிவிட்டனர் என்று கூறுவதைவிட தமது வசதிக்காக தவிர்த்துக் கொண்டனர் என்று கூறுவதுதான் பொருத்தமாக அமையும். இது இலங்கையின் சுபீட்சத்திற்கும் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பெரும் தடையாகவே தொடர்ந்தும் இருக்கப் போகின்றது.

மொத்தத்தில் தென்னிலங்கை வரலாறு இன்று கற்பித்துக் கொண்டிருக்கும் பாடத்தில் இருந்துகூட யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கும் தென்னிலங்கை தமக்கான ஜனநாயகத்திற்கான பாதையினை செப்பனிட்டுக் கொள்ள புதிய தலைமையினை நாடி நிற்பதுடன் தனி வழிபோக தீர்மானித்துள்ளது.

(07.03.2023)

Email : vathevaraj@gmail.com

# சென்னை, கொல்கத்தா நகரங்கள் இந்த நூற்றாண்டுக்குள் கடலில் மூழ்கும் அபாயம்; அதிர்ச்சி தரும் ஆய்வு தகவல்

சென்னை, கொல்கத்தா நகரங்கள் இந்த நூற்றாண்டுக்குள் கடலில் மூழ்கும் அபாயம் இருப்பதாக, ஆய்வுகளில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

காலநிலை மாற்றம்

காலநிலை மாற்றம், இயற்கை சார்ந்த காலநிலை மாறுபாடு ஆகிய இரண்டின் கூட்டுவிளைவு பூமிக்கு மிகப்பெரிய பாதிப்பை உருவாக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பாக ஆய்வுகள் செய்துவரும் விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டுள்ளார்கள்.

அதில் இந்தியாவில் உள்ள பெருநகரங்களான சென்னை, கொல்கத்தாவுக்கு மிகப்பெரிய ஆபத்து வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வெப்பநிலை அதிகரிப்பால் நீர் விரிவடைந்து கடல் நீர்மட்டம் உயர்கிறது. இதுதவிர துருவப் பாறைகளால் அதிக அளவு கடலில் சேரும் தண்ணீரால் கடல் நீர் மட்டம் அதிகரித்து வருகிறது. இந்த நீர்மட்ட உயர்வில் பிராந்திய அளவில் காணப்படும் வேறுபாடுகளால் நீர் மட்ட அளவும் மாறுபடும். சில குறிப்பிட்ட பகுதிகளுக்கு மட்டும் மிக அதிகமான நீர் இடப்பெயர்வாகும். இதன் காரணமாக கடற்கரையை ஒட்டியிருக்கும் நகரங்கள் மிகப்பெரிய பாதிப்பை சந்திக்கும் என்று அந்த ஆய்வு முடிவு தெரிவித்துள்ளது.

6 நகரங்கள் மூழ்கலாம்

அதில் ஆசிய பகுதியில் உள்ள 6 நகரங்கள் பெரும் பாதிப்பை சந்திக்கலாம். கடல் நீரில் மூழ்கலாம் என்றும் தெரியவந்துள்ளது.

அதில் இந்தியாவில் சென்னை, கொல்கத்தா ஆகிய இரு நகரங்களும் ஆபத்தில் உள்ளன. இதேபோல் தாய்லாந்தில் பாங்காக், இந்தோனேசியாவில் மணிலா, மியான்மரில் யாங்கோன், வியட்நாமில் ஹோசி மின்சிட்டி ஆகிய நகரங்கள் அடங்கி உள்ளன. 2100-ம் ஆண்டுக்குள் இந்த நகரங்கள் அனைத்தும் கடல் நீரால் மூழ்க வாய்ப்பு இருப்பதாக கூறப்பட்டுள்ளது.




NATIONAL GENDER-BASED VIOLENCE RESEARCH

CASSA

## ஒரு தொற்று நோய்க்குள்ளே அமைதியான மற்றுமொரு தொற்றுநோய்
## கனடிய தெற்காசிய சமூகத்தின் மத்தியில் குடும்ப வன்முறை



குடும்ப வன்முறை அல்லது வீட்டிற்குள் இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், பொதுவாக மனைவியின் மீதான வன்முறை துஷ்பிரயோகத்தை உள்ளடக்கியது. குடும்ப வன்முறையால் பாதிக்கப்படுபவர்கள் விகிதாச்சாரத்தில் பெண்களாகவே உள்ளார்கள், இருப்பினும் ஆண்களும் அதை அனுபவிக்கலாம். குடும்ப வன்முறை எல்லா சமூகங்களிலும் உள்ளது. இனங்கள் சார்ந்த, புலம்பெயர்ந்த மற்றும், அல்லது புதிதாக குயேறிய சமூகங்கள் மத்தியில். அவர்கள் எதிர்கொள்ளும் தடைகள் காரணமாக, உதவிகளை நாடும் போது GBV மற்றும் தனித்துவமான சவால்களின் பாரிய அபாயங்களை எதிர்கொள்கின்றனர். மொழி சார்ந்த தடைகள், கிடைக்கக்கூடிய சேவைகள் மற்றும் சட்ட உரிமைகள் பற்றிய அறிவு இல்லாமை, ஆபத்தான குடியேற்ற நிலை, வறுமை, திட்டமிட்ட பாகுபாடுகள் மற்றும் பல இவற்றுள் அடங்கும்.

கோவிட்-19 தொற்றுநோய்களின் போது, குடும்ப வன்முறைகள் வெகுவாக அதிகரித்தன. சமீபத்தில், கனடாவில் உள்ள தெற்காசிய சமூகத்தின் பாலினம் சார்ந்த வன்முறைகள் (GBV) பற்றி நாம் ஆய்வு செய்தோம். எங்கள் ஆய்வில், இந்த சமூகத்தில் குடும்ப வன்முறை அதிகரிப்பதற்கான காரணங்கள் என பின்வருவன கண்டறியப்பட்டுள்ளன:
வீட்டில் இருந்தே வேலை செய்யும் ஏற்பாடுகள் பெண்களை துஷ்பிரயோகம் செய்பவர்களுடன் வீட்டிலேயே அடைத்து வைத்திருக்கின்றன மற்றும் சிறிய தனியுரிமை, வேலை இழப்பால் ஏற்படும் மன அழுத்தம், பிள்ளைகள் வீட்டிலிருந்து மேற்கொள்ளும் பள்ளிப்படிப்பு, ஒரு சமூக விலகல் விதிகள் மற்றும் குடியேற்ற விண்ணப்பங்கள் தொடர்பான தாமதங்கள் காரணமாக நீட்டிக்கப்பட்ட குடும்பத்தின் ஆதரவின்மை. குடும்ப வன்முறை, பிரிவினை விவாகரத்தின் மூலமாக ஏற்படும் களங்கம், சட்ட உரிமைகள் மற்றும் சேவைகள் பற்றிய அறிவு இல்லாமை, இணைய வழி மூலமான சேவைகளுக்கு மாறுதல், தொழில்நுட்பம் அறிவு இல்லாமை, காவல்துறையின் ஆதரவு இல்லாமை, கலாச்சார ரீதியாக உணர்திறன் இல்லாமை போன்றவை, மற்றும் மனநலச் சேவைகள், மொழித் தடைகள், சட்ட அமைப்பில் ஏற்படும் தாமதங்கள், வறுமை ஆகியவை பாதிக்கப்பட்டவர்கள் உதவி பெறுவதில் எதிர்கொண்ட சில தடைகளாகும்.

பாலினம் சார்ந்த வன்முறைகள் (**GBV**) பின்வரும் 6 வகைகளில் ஏதேனும் ஒன்றில் அடங்கும்:

- உடல் ரீதியான துஷ்பிரயோகம் - வலி, மிரட்டல் மற்றும் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் நோக்கம் கொண்டது
- நிதி துஷ்பிரயோகம் - மற்றொரு நபரின் பணம் அல்லது வங்கிக் கணக்கு மீது கட்டுப்பாடு அல்லது தவறாகப் பயன்படுத்துதல்
- உளவியல், உணர்ச்சி ரீதியான துஸ்பிரயோகம் - உணர்வுபூர்வமாக அல்லது சுயமரியாதையை குறைப்பதன் மூலம் ஒரு கூட்டாளரை கட்டுப்படுத்தும் வார்த்தைகள் அல்லது செயல்கள்
- பாலியல் துஷ்பிரயோகம் - விருப்பமில்லாத ஒருவரால் கட்டாயப்படுத்தப்படும் அல்லது அச்சுறுத்தப்படும் எந்த சூழ்நிலையிலும்
- தொழில்நுட்ப துஷ்பிரயோகம் - அதிகாரத்தைப் பெற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் அல்லது தடுப்பது
- ஆன்மீக துஷ்பிரயோகம் - கையாளுதல் மற்றும் கட்டுப்பாட்டைப் பெற மத அல்லது ஆன்மீக நம்பிக்கைகளைப் பயன்படுத்துதல்

உங்களுக்கு உதவுவதற்கு சேவை வழங்குநர்கள் உள்ளனர்:

- தங்குமிடங்கள் - நீங்களும் உங்கள் குழந்தைகளும் தவறான சூழ்நிலையை விட்டு வெளியேற வேண்டியிருந்தால், தற்காலிக வீடுகளை வழங்குதல்
- முகவர்கள் - தங்கள் வாடிக்கையாளர்களுக்கு செல்போன்கள் மற்றும் கணினிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்று கற்பித்தல், வீட்டுவசதி மற்றும் சமூக உதவிக்கு விண்ணப்பித்தல், ஆங்கிலம் கற்பித்தல், ஆலோசனை வழங்குதல், பிற நிறுவனங்களுக்கு பரிந்துரைகளை வழங்குதல் போன்ற பல்வேறு வகையான ஆதரவை வழங்குகின்றன.
- சட்டம் சார்ந்த கிளினிக்குகள் - இலவசமாக சட்ட ஆதரவை வழங்குகின்றன. சேவைகளுக்குத் தகுதிபெற நீங்கள் குறிப்பிட்ட வருமானத் தொகையின் கீழ் சம்பாதிக்க வேண்டும். உங்கள் குடிவரவு நிலை உங்கள் கூட்டாளருடன் இணைக்கப்பட்டிருந்தால் (உதாரணமாக, உங்கள் பங்குதாரர் உங்களை நிரந்தரக் குடியுரிமைக்கு வழங்கியிருக்கும் சூழ்நிலையில்), நீங்கள் உறவை விட்டு வெளியேறினால் உங்கள் நிலை ஆபத்தில் இருக்கும். நீங்கள் ஏற்கனவே நிரந்தர குடியிருப்பாளராக இருந்தால், நீங்கள் உறவை விட்டு வெளியேறியதால் உங்கள் நிலையை இழக்க மாட்டீர்கள். நீங்கள் நிரந்தர வதிவாளராக இல்லாவிட்டாலும், உங்கள் விருப்பங்கள் என்ன என்பதைப் பார்க்க, சட்டப்பூர்வ கிளினிக்கைத் தொடர்பு கொள்ளுங்கள் - நீங்கள் நினைப்பதை விட உங்களுக்கு அதிகமான சேவைகள் இருக்கின்றன.

அவசரகாலத்தில், உங்களால் முடிந்தால் 9-1-1 என்ற எண்ணை அழைக்கவும். துஸ்பிரயோகம் செய்பவரை விட்டு வெளியேறுவதற்கான திட்டத்தை உருவாக்க - நீங்கள் ரொறன்ரோவில் வசிப்பவராக இருந்தால் 3-1-1 க்கு அழைக்கவும், நீங்கள் ஒன்றாரியோவில் வசிப்பவராக இருந்தால் 2-1-1 க்கு அழைக்கவும்.

உங்கள் பகுதியில் உள்ள முகவர்கள், தங்குமிடங்கள் மற்றும் சட்ட கிளினிக்குகள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, அவற்றின் இணையதளங்கள், தொலைபேசி எண்கள் மற்றும் மின்னஞ்சல்கள் உட்பட, அனைத்திற்கும் **www.cassa.ca/gbvstudy** என்னும் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.


KOKUVIL HINDU COLLEGE O.S.A. CANADA
கற்றதொழுக
ESTD 1994
மகுடம்
MAHUDAM 2023
2300 PHARMACY AVE,
SCARBOROUGH, ON M1W 1H8
MARCH 25TH 2023
SATURDAY 5:00PM
மாபெரும் இன்னிசை, நடன நிகழ்வுகள்
SINGERS
Punya
Mahisha
Hariharasudhan
Ananthan
DANCE PERFORMER'S
IRUDAYA DANCE COMPANY
ABINAYALAYA NATYALAYAM &
SRI ABIRAMY DANCE ACADEMY
Mega Tuners
MC
Prasanth
&
Sai Janani
KOKUVIL HINDU COLLEGE OSA CANADA
For tickets please contact
Ravi Kana - 416 725 7284, Maithily - 416 388 3935
Nageswaran - 647 609 5392
COMMUNITY
CHRISTEEN SEEVARATNAM
S.P.IMPORTERS
MAPLE
HIDE AUTO CENTRE
JAPANESE CAR SPECIALIST
Hideo Baba / Yuvan
416-288-9711
15 Crockford Blvd. Unit#9
Scarborough, ON M1L 4J9
yuvant@hotmail.com
OPTIMART
WINNERS LOTTO CENTRE
Anthony & Associates PC
10 Milner Business Court, Suite 505
Toronto ON M1B 3C6
Tel: 416.800.0752
Fax: 416.800.0753
HOMELIFE
SCARSVIEW
NEW OCEAN
416-292-0122
INDRAN SWEET
BUY, SELL & LEASE
Brooklin
RAJA MAHENDRAN
416 315 9397
RE/MAX
Selva Vettyvel
416.568.4301
Rishani Vettyvel
416.261.1544
905.844.7485
RANJANI THIRU LAW
SINDI FINANCIAL
TEMPLE OF SAREES
Reliable

# International Women's Day Celebration hosted by Canadian Tamils' Chamber of Commerce

## கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நடத்திய சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம்








கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நடத்திய சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம் கடந்த புதன்கிழமையன்று ஸ்காபுறோ கொன்வென்சன் சென்றர் விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சம்மேளனத்தின் தலைவர் சட்டத்தரணி தேவதாஸ் தலைவர் உரையாற்றினார்.

ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

சிறப்பு பேச்சாளராக தமிழகத்தின் பட்டிமன்றப் பேச்சாளர் திருமதி பாரதி பாஸ்கர் கலந்து கொண்டு சபையோரைக் கவரும் வகையில் பெண்களின் முன்னேற்றம் மற்றும் அவர்களுக்கான அங்கீகாரம் ஆகியவை தொடர்பாக உரையாற்றினார்.

அவரைக் கௌரவிக்கும் வகையில் சம்மேளத்தின் சார்பிலும் ஒன்றாரியோ அரசாங்கத்தின் சார்பிலும் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்பெற்றன.

இவ்வருடத்திற்குரிய வாழ்நாள் சாதனை விருது பெற்ற கனடியப் பெண்மணியாக கலாநிதி பார்வதி கந்தசாமி மேடையில் கௌரவிக்கப்பெற்றார்.

கலை நிகழ்ச்சிகள் மற்றும் உரைகள் ஆகியன இடம்பெற்றன.

எவ்விதமான தொய்வுமின்றி தொடர்ச்சியாக நகர்ந்து சென்ற இந்த சர்வதேச பெண்கள் தினக் கொண்டாட்ட விழா அங்கு கலந்து கொண்டவர்கள் அனைவராலும் பாராட்டப்பெற்றன.

# இந்திய ரூபாயில் பரிவர்த்தனை: இந்தியா – இலங்கை பரிசீலனை



பொருளாதார பரிவர்த்தனைகளுக்கு ரூபாயை பயன்படுத்துவது குறித்து இந்தியாவும், இலங்கையும் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளன. இதுகுறித்து இலங்கைக்கான இந்திய தூதர் கோபால் பாக்லே கூறியுள்ளதாவது. இந்தியாவும், இலங்கையும் பொருளாதார பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாயை பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.பேங்க் ஆப் சிலோன், எஸ்பிஐ மற்றும் இந்தியன் வங்கியின் பிரதிநிதிகள் இதுதொடர்பான தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டுள்ளனர். மேலும், இரு நாடுகளுக்கு இடையில் வர்த்தகம் மற்றும் முதலீடு சார்ந்த நடவடிக்கைகள் மூலம் வலுவான மற்றும் நெருக்கமான கூட்டாண்மையை உருவாக்க உதவும் முன்முயற்சிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டன. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாயை பயன்படுத்துவதன் மூலம் குறைவான பரிமாற்ற செலவு, விரைவான சேவை, வர்த்தக கடன்கள் எளிமையாக பெறுதல் போன்ற பல்வேறு நன்மைகள் கிடைக்கும். இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவில் கணிசமான அளவில் ஆதாயம் ஏற்படும் என்பதுடன் நட்புறவு மேலும் நெருக்கமாகும். இவ்வாறு அவர் கூறினார்.



# மரண அறிவித்தல்

**அன்னை மடியில்:** 12 - 09 - 1934

**இறைவன் அடியில்:** 07 - 03 - 2023



# திரு. வல்லிபுரம் சுப்பிரமணியம் குமாரசாமி

**கட்டட பரிசோதகர் இலங்கைக் கல்வித் திணைக்களம்**
**(நெடுந்தீவு மேற்கு)**

**யாழ். நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், நல்லூர், கொக்குவில் கிழக்கு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், நியூசிலாந்து Auckland ஐ வதிவிடமாகவும் கொண்ட உயர்திரு வல்லிபுரம் சுப்பிரமணியம் குமாரசாமி அவர்கள் 07-03-2023 செவ்வாய்க்கிழமை அன்று முருகன் திருவடிகளில் சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நாகம்மா தம்பதிகளின் இரண்டாவது மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும்,

காலஞ்சென்ற புஸ்பராணி அவர்களின் அன்புக் கணவரும்,

காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் (முன்னாள் உதவி அரசாங்க அதிபர்), பாலசிங்கம் (மலேரியா தடுப்பு கட்டுப்பாட்டு அதிகாரி), பராசக்தி, பாக்கியலட்சுமி மற்றும் V.S. குலசிங்கம் (முன்னாள் இலங்கை வங்கி அதிகாரி), மல்லிகாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

பாஸ்கரன் (கணித விரிவுரையாளர் நியூசிலாந்து), கிருபா (வாகன தொழிநுட்ப ஆலோசகர் - ஜேர்மனி), உமாதேவி (இணை அதிபர் EAST FM வானொலி மற்றும் கீதவாணி வானொலி கனடா), ஜெயதேவி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், நடா ராஜ்குமார் (அதிபர் EAST FM வானொலி மற்றும் கீதவாணி வானொலி கனடா), ஜானகி (நியூசிலாந்து), சுதா (ஜேர்மனி), ரூபன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும்,

கதிரமலை (இளைப்பாறிய மலேரியா தடுப்பு உத்தியோகத்தர் - அவுஸ்திரேலியா), விஜயலட்சுமி (அவுஸ்திரேலியா), திலகவதி (கனடா), இந்திரா, லில்லி, செல்வராணி, கருணாநிதி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான தவமணி, நடராசா, கனகசபை (D.O) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

தினேஷ், நிரோஷ், உமேஷ், அஜித்தன், அஞ்சனா, அனுஷா, லவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

***அன்னாரின் இறுதிக்கிரியை 08-03-2023 புதன்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் செய்யப்பட்டன.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வீட்டு முகவரி:**
**மணோன்மணி அம்மன் வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்**

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:**
**பாஸ்கரன் (மகன்): +64211700296**
**கிருபாகரன் (மகன்): +4915753486544**
**உமா (மகள்): (416) 828-5656**
**நடா ராஜ்குமார் (மருமகன்): (416) 824-1212**

# ஒன்றிணைந்த தேசம்? தென்னிலங்கையர் ஒருவரின் வடக்குப் பயணம்

- சுநெர பண்டார



**கொ**ழும்பிலிருந்து வடக்கு நோக்கிய எனது இரண்டு நாள் பயணம் மிகவும் அலுப்பாகவும் கண் திறப்பாகவும் இருந்தது. வலி சுமந்த பெரிய விடயங்களை பெரும் வேதனையின் மூலமே உணர முடியும் என்று கூறினாலும், எந்த சூழ்நிலையும் அதன் தீமைகள் இல்லாமல் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

உள்நாட்டுப் போர் முடிந்த பிறகு, நாட்டின் வடக்கில் என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ள வடக்கு நோக்கி பயணத்தின் போது, எனக்கு ஒரே மாதிரியாக இராணுவமயப்படுத்தப்பட்ட ஒரு சூழல் எப்படியிருக்கும் என்று கூறப்பட்டது போன்றே இருந்தது.

நாங்கள் செல்ல வேண்டிய இடத்தை அடைவதில் எந்த பிரச்சனையும் இருக்கவில்லை, ஏனென்றால் அங்கு நேராகச் செல்வதற்கான ஒரு பாதையாக அந்த வழி இருந்தது. இடையே அனுராதபுரம் வழியாகச் செல்லும் போது அங்குள்ள புகழ்பெற்ற விகாரையில் சற்று நின்று புகைப்படங்கள் எடுத்துக்கொண்ட பிறகு, ஒரு சாத்திரக்காரன் கூறியதற்கு மாறாக எமது பயணம் சிக்கல் இல்லாமல் இருந்தது. வவுனியாவிற்கு வருவது எதிர்பாராதவிதமாக வித்தியாசமாக இருந்தது.

வடக்கிற்கான எங்கள் பயணத்தை விவரிக்க வேண்டுமென்றால் நான் அதை குறிப்பாகச் சுட்டிக்காட்ட வேண்டும். சர்வதேசத்தின் பார்வையில் வடக்கு-தெற்குப் பிளவு என்பது வெளிப்படையாக தெரியாத ஒரு கற்பனையாகவே இருக்கிறது, ஆனால் அது உடல் மற்றும் உளரீதியில் உண்மையே.

தெற்கு மாகாணங்களைப் பார்க்க வடக்கு முற்றிலும் மாறான ஒரு பிரதேசம். நான் ஏதோ மிகைப்படுத்திச் சொல்கிறேன் என்று நீங்கள் கருதலாம்-எனவே தயவு செய்து தொடர்ந்து வாசிக்கவும்.

வவுனியாவில், ஈர்க்கும் வகையிலான கவலை என்பது இடிபாடுகள் மட்டுமின்றி, வடக்கில் பொதுமக்களிடையே ஒருங்கிணைப்பு இன்மையும், அங்கு தெளிவாக தமது எல்லைகளை மீறும் வகையிலும் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தின் மத்தியில் அவர்கள் நடமாட வேண்டியுள்ளது. வலிந்த இராணுவமயமாக்கலே அங்கு ஒருங்கிணைப்பை கொண்டுவர முடியும் என்கிற நம்பிக்கை அதற்கான காரணமாக இருக்கலாம். அங்கு ஒருங்கிணைப்பு இல்லாததால் இந்த நிலை இல்லை, மாறாக அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்தின் மீதான அவநம்பிக்கை காரணமாகவே இந்த நிலை உள்ளது.



வவுனியா பேருந்து நிலையம் குப்பைகூளம் நிறைந்து காணப்படுகிறது. அதற்கு நேர் எதிராக இராணுவ வீரன் ஒருவரின் சிலை உள்ளது. ஆனால் மக்களோ தமக்கும் அதற்கும் தொடர்பில், வானிலுள்ள மேகங்களில் மேலும் ஒன்று என கடந்து போகின்றனர். அது தான் வவுனியா.

முல்லைத்தீவை அடைந்தவுடன் இராணுவ கட்டமைப்புகள் மேலும் தெளிவாகத் தெரிந்தன. அவற்றைச் சுட்டிக்காட்டுவதே ஒரு வேலையாகப் போய்விட்டது என்பதே உண்மை. வடக்கில் இராணுவப் பிரசன்னம் பற்றி அறிந்திருந்த நான் அது ஒரு கேலிச்சித்திரத்தில் வருவது போன்று சில இராணுவ வீரர்கள் முகாம்களில் மட்டுமே இருப்பார்கள் என்பதாகவே எனக்குள்ளிருந்தது. வன்னியில் பரந்து விரிந்திருக்கும் இராணுவ முகாம்களை நீங்கள் காணும் போது உங்களை நீங்களே கிள்ளிப்பார்க்க வேண்டும். அது இயல்பானது இல்லை.

நான் அங்கிருந்த முதல் நாளில் மூன்று பேருடன் உரையாடினேன் - காணாமல் போனவர்களைத் தேடி அலையும் அம்மாக்கள் அமைப்பு, நில அபகரிப்பிற்கு எதிராகக் குரல் கொடுத்த உள்ளூராட்சியின் ஒரு பிரதிநிதி மற்றும் அதே மாவட்டத்தின் மீனவர் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர். அங்கு இராணுவமே பிரச்சனைகளிற்கு காரணம் என்று அவர்கள் அனைவருக்கும் குறைபட்டனர். அந்த மீனவர் கவனத்தை ஈர்க்கும் கதை ஒன்றைச் சொன்னார், பெருநிறுவன ட்ரோலர் படகுகள் போன்றவை இலங்கை கடற்பரப்பில் அனுமதிக்கப்பட்டதன் விளைவாக சராசரி தமிழ் மீனவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதார சவால்கள் குறித்து பேசினார். தமிழ்நாட்டு மீனவர்களின் அத்துமீறல்களே இதற்கு காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த ஒட்டுமொத்தச் சூழலில் என்னை மிகவும் உறுத்தியது துரோகத்தின் அளவு தான். ஆனால், உணர்ச்சிகளிற்காக இப்போது வார்த்தைகளை வீணாக்க மாட்டேன். இவை உண்மைகள் மட்டுமே. இருட்ட ஆரம்பித்ததும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் நினைவாக கட்டப்பட்டுள்ள தேவாலயம் ஒன்றைச் சென்று பார்த்தோம். அதில் உயிரிழந்தவர்களின் பெயர்கள் கரும்பலகையில் பொறிக்கப்பட்டிருந்தன. கடற்கரையோரம் முழுவதும் படகுகள் நிறைந்திருந்தன. சாலைகளில் இருந்த வெறுமை உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும். அங்கு பூனைகள் குறைவாக இருப்பது பற்றி நான் பகடியாகக் கூறினேன். இயல்பான கற்பனைக்கு எட்டாத வகையில் நாட்டின் இப்பகுதியில் பிரச்சனைகள் இருப்பதாகத் தோன்றுகிறது.



காலை உள்ளூர் தொடர் உணவுக் கடையான அம்மாச்சிக்கு சென்றோம். பெண்கள் வலுவூட்டலில் ஒரு வகையாக அது உள்ளது ஏனென்றால் பெரும்பாலான சமையல் வேலையை செய்பவர்கள் பெண்கள் என்று எனது சகா ஒருவர் கூறினார். அதன் முக்கியத்துவத்தை நான் கவனிக்கத் தவறிவிட்டேன் என்று கருதுகிறேன் - அதாவது அங்கு ஆண்கள் குறைவாக இருக்கின்றனர்.

இரண்டாவது நாள் ஒரு பெண்மணியை சந்தித்தேன். அவரது கணவர் மற்றும் மகன் காணாமல் போயுள்ளனர். அவர் தொடர்ந்து தனது குடும்ப உறுப்பினர்களை, அதிலும் குறிப்பாக தனது பாலகனை இராணுவம் அழைத்துச் சென்றது பற்றி தொடர்ந்து கேள்வி எழுப்புகிறார். போர் முடிந்த நிலையில் தானே விரும்பி அவர்களை இராணுவத்திடம் கையளித்ததாக அவர் கூறுகிறார்.

தான் அப்படிச் சொல்ல வேண்டும் என்று யாரும் வற்புறுத்தவில்லை என்று அவர் கூறின-ாலும், தனது மகனை அதற்கு பின்னர் அவர் பார்க்கவில்லை. அரசு பதில்களை ஏதும் அளிக்காத நிலையிலும் அதற்கு தாங்கள் காரணமல்ல என்று கூறிய நிலையிலும், பலவிதமான அதிகாரப் படிநிலைகளின் மத்தியில் அவர் தொடர்ச்சியாக தனது மகனை கண்டுபிடிக்க முயன்றார். ஆனால் மீண்டும் அந்த ஒரே பொய்யே கூறப்பட்டது.

அது அவருக்கு குழப்பத்தை ஏற்படுத்தும் ஒரு பகடியாகவே மாறிவிட்டது. அதேவேளை இராணுவம் தமது அளப்பரிய புணர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து மக்களை நம்ப வைக்க பெரியளவில் நேரத்தை செலவிட்டது. அப்படியான எண்ணங்கள் கூறப்பட்டாலும், யதார்த்தத்தில் எம்மால் அப்படியான புணர்வாழ்வு நடவடிக்கைகள் எதையும் காண முடியவில்லை.

அன்றைய தினம், வடக்கே தமிழ் மக்களின் உரிமைகளிற்கான செயற்பட்டு வந்த ஒரு ஒரு புகைப்படக் கலைஞரின் இறுதிக் கிரியைகளில் என்னால் பங்குபற்ற முடிந்தது. அவரது இறுதிக் கிரியை அவரது குடும்ப வீட்டிற்கு தொலைவில் நடைபெற்றது. சேற்றுப்பாதை ஊடாக அங்குச் செல்ல வேண்டியிருந்தது. தொடர்ச்சியாக பல மணித்தியாலங்கள் மழை பெய்ததால் மக்கள் அந்த சேற்றின் ஊடாகவே நடந்து சென்று பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த வேண்டியிருந்தது.

எனது அஞ்சலியைச் செலுத்த உயிரிழந்தவரின் குடும்ப வீட்டிற்கும் சென்றேன். அங்கு இரங்கல்களைத் தெரிவிக்கும் வகையில் இருந்த சுவரொட்டிகளில், நாட்டின் முக்கிய அரசியல்வாதிகளில் ஒருவரான விமல் வீரவன்சவின் பெயரும் இருந்தது. அப்படியான உணர்சிகள் மிகுந்த தருணத்தில் கூட எந்த அரசியல்வாதியும் அந்தச் சூழலில் ஆதாயம் தேடுவதற்கான வாய்ப்பை இழப்பதில்லை.

அதேவேளை வடக்கின் சுற்றுச்சூழல் பன்முகத்தன்மை என்னை மிகவும் ஈர்த்தது-அதில் அமானுஷ்ய அழகிருந்தாலும் சில வேளைகளில் அச்சுறுத்துகிறது. வெறுமையாக இருந்த நீண்ட சாலைகளில் குறைவான மனிதர்களே இருந்தனர். அங்கு நாளாந்தம் ஜனநெருக்கடியின் அடர்த்தி குறைந்து வருகிறது. எனினும் விலங்கினங்கள் இங்கும் அங்கும் அலைகின்றன. அனைத்து வகையான பறவைகளும் சாலையில் மிக நெருக்கமாக கூடுகின்றன. மனிதர்களைக் கண்டு பறந்துவிடும் பறவைகள் மனிதர்களின் குடியிருப்புகளுக்கு இவ்வளவு நெருக்கமாக ஏன் வருகின்றன என்று நான் வியந்தேன். இதற்கான பதில் அங்கு ஜனநெருக்கடி குறைந்து வருவதே. முல்லைத்தீவு ஒரு பாழடைந்த நகர், அங்கு ஒரு மூலையில் போர் வலையமல்லாத ஒரு பகுதியாக ஒரு இந்து கோவில். அங்கு இராணுவத்தினர் பிரார்த்தனை செய்ய வருவார்கள் என்று கூறப்பட்டது.

எனது மூன்றாவது மற்றும் பயணத்தின் இறுதி நாளன்று, ஒரு விவசாயி மற்றும் அவரது மனைவியைச்சந்தித்தேன். ஒரு காலத்தில் அவர்களுக்கு சொந்தமாக இருந்து இப்போது இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிக்கு எதிரேயுள்ள ஒரு இடத்தில் வசிக்கின்றனர். ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன், அதாவது இந்த சட்டங்கள் எதுவும் மணனில் எழுதப்பட்டவை அல்ல. அவை பழக்கத்தின் மூலம் அச்சத்தின் காரணமாக வந்த வழக்கமாகிவிட்டது. இராணுவம் எப்படிச் செயல்பட வேண்டும் என்ற முறையை வரையறுக்கும் தனியான சட்டரீதியான கட்டமைப்பு ஏதுமில்லை. மாறாக, தீயநோக்கம் கொண்ட கெடுபிடிகள், ஆக்ரோஷமான அச்சுறுத்தல்கள் ஆகிய கலவைகளை உள்ளடக்கிய இராணுவத்தின் தேவைகள் ஆகியவற்றிற்கு ஏற்ற வகையில் தம்மை ஒடுக்கிக்கொண்டு வாழும் நிலையில் பொதுமக்கள் உள்ளனர். அவர்களின் நடவடிக்கைகளை மற்றும் அவர்களுடன் எப்படி ஒத்துழைக்க வேண்டும் என்பதற்கு சட்ட வரையறை ஏதுமில்லாததால், இராணுவத்தால் காத்திரமாக எதையும் செய்துவிட்டு அதிலிருந்து தப்பிக்க முடிகிறது.

இராணுவத்தினர் எப்படி தமது நிலங்களை அபகரித்தனர் மேலும் அதன் வளங்களைப் பயன்படுத்துவதற்கு இழப்பீடு அளிக்காமல் உள்ளனர் என்று கூறியத்கோடு மட்டுமின்றி தெற்கிலிருந்து காட்டு யானைகளை வடக்கிற்குள் கொண்டுவந்து விடுவதற்கு எடுத்த பெரும் முயற்சிகள் பற்றியும் கூறினர். இந்த காட்டு யானைகள் அந்த விவசாயி மற்றும் அவரது மனைவி போன்றவர்களின் வாழ்வாதாரங்களை குழப்பியடித்து நேரடியாக சுற்றுச்சூழல் கட்டமைப்பை பாதிக்கின்றன என்பது பற்றிய குற்றச்சாட்டை முன்வைத்தனர். அடுத்த நாள் காலை உணவு தயாரிக்கும் போது முதல் நாள் இரவு மிஞ்சிய சோற்றில் துப்பாக்கித் தோட்டாக்கள் இருந்ததைக் கண்டதாக அந்த விவசாயியும் அவரது மனைவியும் எம்மிடம் கூறினர். இது ஏதோ எதேச்சையாக நடைபெற்ற சம்பவமாக இல்லை, அச்சுறுத்தும் ஒரு காரணியாகவே உள்ளது. மேலும் தமிழ் மக்கள் எல்லைகளை மீறாமல் இருப்பதற்காக அச்சுறுத்தி வைக்கும் மிகவும் மேம்படுத்தப்பட்ட ஒரு உளவியல் நடவடிக்கையாகவே உள்ளது. அந்த உணவகத்திற்கு மூன்றாவது நாளன்றும் சென்ற போது, எம்மை குறைந்தது ஐந்து வித்தியாசமானவர்கள் அவதானித்தனர். இருவர் சீருடை அணியாத பொலிசார் மற்றவர்கள் சமூகத்தில் நடைபெறுவதை கூறும் உளவாளிகள்.



(தொடர்ச்சி 25 பக்கம்)

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# வடக்கில் வரலாற்று ஆலயங்கள் “அழிக்கப்பட்டு” ஜனாதிபதிக்கு மாளிகை

(கனடா உதயனின் சிறப்பு புலனாய்வு கட்டுரை)

- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்



யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் வடக்குப் பகுதியில் மிகப் பழமை வாய்ந்த ஆலயங்களை இடித்து அழித்து அந்த இடத்திலேயே ஜனாதிபதிக்கு ஆடம்பர மாளிகை அமைக்கப்பட்டுள்ள விடயம் தற்போது தெரியவந்துள்ளது.

கனடா உதயனின் புலனாய்வுகளில் இருந்து இது நிரூபணமாகியுள்ளது.

கீரிமலையில் மிகப் பழமை வாய்ந்த சிவன் ஆலயம், சடையம்மா மடம், கதிர்காமத்திற்கு யாத்திரை ஆரம்பிக்கும் முருகன் ஆலயம் என்பன அமைந்திருந்த இடங்கள் முழுமையாக இடித்து அழிக்கப்பட்டே மகிந்தவின் காலத்தில் அவருக்கு ஆடம்பர மாளிகை அமைக்கப்பட்டுள்ளது எனப் பலரும் குற்றம் சாட்டியபோதும் அதனை ஆவண ரீதியில் நிரூபணம் செய்ய முடியாமல் போனது. ஆனால் தற்போது அது நிரூபணம் செய்து வெளிவந்துள்ளது.

வலி. வடக்கு கீரிமலை பகுதியில் இருந்த சிவன் ஆலயம் அருகே கிருஸ்ணன் ஆலயம் ஒன்றும் இருந்தது. இந்த ஆலயத்தின் ஆலய நிர்வாகத்தினர் சிலர் அண்மையில் கடற்படையினரின் பாதுகாப்பு வலயத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டு கிருஸ்ணர் ஆலயத்தின் தற்போதைய நிலையைக் காண்பித்துள்ளனர்.

கிருஸ்ணர் ஆலய நிர்வாகத்தினர் 1990ஆம் ஆண்டின் பிற்பாடு, முதல் தடவையாக இந்த ஆலயத்தைச் சென்று பார்வையிட்டுள்ளனர். ஆலயத்தைச் சென்று பார்வையிட்ட ஆலய பரிபாலனசபையினருடன் அப்பகுதி கிராம சேவகரும் பயணித்துள்ளார்.


கிருஸ்ணர் ஆலயப் பகுதியை பார்வையிட்டு ஏங்கியவர்கள் எதிர் திசையை திரும்பி பார்வையிட்டபோது பேரிடியுடன் அதிர்ச்சி அடைந்து விட்டனர். வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவன் ஆலயம் இருந்த தடயமே தெரியாது இடித்து அடியோடு அழிக்கப்பட்டே மகிந்த ராஜபக்சவின் காலத்தில் உல்லாச விடுதி அமைத்துள்ளனர்.

அங்கு சென்று திரும்பிய கிருஸ்ணர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் கதிரவேலு நாகராசா ஆலய நிலை தொடர்பில் தனது கருத்துக்களை மிகவும் வேதனையுடன் பகிர்ந்து கொண்டார்.

“ஆலயத்தின் வசந்த மண்டபம் முழுமையாக இடித்து அழிக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் எஞ்சிய பகுதிகள் மட்டுமே அங்கு உள்ளன. அதேபோல் ஆலய விக்கிரகங்களில் பிள்ளையார், முருகன் என்பனவற்றை காணவில்லை”.

அங்கு ஒரு சில பழங்கால விக்கிரகங்கள் மட்டுமே எஞ்சியவை உள்ளதாகவும் ஆனால் அதைக்காட்டிலும் அருகிலிருந்த கோவிலின் தடயமே இப்போது இல்லை என்று கூறினார்.


“கிருஸ்னர் கோவில் அருகில் இருந்த பழமைவாய்ந்த சிவன் ஆலயமும் அங்கேயிருந்த



சிவலிங்கமும் முழுமையாகக் காணவில்லை. அந்த இடம்வரை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ளதனால் அவை இடித்து அழிக்கப்பட்டுவிட்டதாகவே தெரிகின்றது. இதே போன்று கதிரை ஆண்டவர் ஆலயமும் அதன் அருகே இருந்த சடையம்மா மடத்தையும் இப்போது காண முடியவில்லை. அவை இருப்பதாகவும் தெரியவில்லை” என்றார்.

எனினும் கிருஸ்ணன் ஆலயத்தை விரைவில் விடுவிப்பதாக இராணுவத்தரப்பிலிருந்து தமக்கு வாக்குறியளித்துள்ளனர் எனவும் கூறினார்.

சிவன் ஆலயம் இடித்து அழிக்கப்பட்ட செய்தி சைவ மக்களை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளமை தொடர்பில் சிவதொண்டராற்றி வரும் அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயார் ஆரு.திருமுருகனைத் தொடர்பு கொண்டு இது தொடர்பில் என்ன நிலைமை எனக் கேட்டேன்.




“இங்கு போர்த்துக்கீசர் காலத்து ஆதிசிவன் ஆலயத்தில் பாதாள கங்கை எனப்படும் கிணற்றுடன் கூடிய சிவன் ஆலயம், அதன் அருகே சித்தர்களின் தியான மடம், அதிலே நல்லூர் தேரடிச் சித்தரான சடையம்மாவின் சமாதி மற்றும் அவரது மடம் ஆகியவையும் இருந்தன”.

அது மட்டுமின்றி அந்த பிரதேசமே இந்துக்களின் புனித பூமியாக திகழ்ந்ததற்கு ஏராளமான சான்றுகளும் உள்ளன என்ற அவர் மேலும் பல தகவல்களைப் பகிர்ந்து கொண்டார்.

“நல்லை ஆதீனத்தின் முதலாவது குரு முதல்வரான மணி ஐயரின் குரு சங்கர சுப்பையாவின் சமாதி ஆகியவையும் அங்கே இருந்தன. அதேபோன்று மிகவும் பழமையான கதிரை ஆண்டவர் ஆலயமும் இருந்தது. இவ்வாறான ஆண்மீக அடையாளங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. இவற்றை மீள அமைத்தே ஆக வேண்டும் என்பதோடு அவற்றினை அழித்தமைக்கும் எமது வன்மையான கண்டனங்களையும் நாம் பதிவு செய்கின்றோம்” என்றார்.

இவற்றின் அருகே இருந்த மற்றுமோர் சைவ ஆலயமான சோலை வைரவர் கோவில் இருந்த சமயம் அதற்கு பூசகராக இருந்த ந.பரமேஸ்வரன் தற்போது திருநெல்வேலியில் வசிக்கின்றார். இந்த ஆலயம் தொடர்பான விவரங்களை அவர் பகிர்ந்து கொண்டார்.

“1952ஆம் ஆண்டு சீமேந்து ஆலை அமைக்கும்போது காணிகள் கொள்வனவு மற்றும் சுவீகரிப்பில் ஈடுபட்டபோது எமது ஆலயப் பகுதியினையும் சுவீகரிக்க முற்பட்டனர். அதன்பின்பு மேலும் விஸ்தரிக்க முனைந்த சமயம் 1960ஆம் ஆண்டு காணி சுவீகரிப்பிற்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் ஆலய பூசகமையாளர் சரவணமுத்து வழக்கு தொடுத்தார். இதற்கு பேராசிரியரும் சட்டத்தரணியுமான சுந்தரலிங்கம் ஆஜராகி வென்றபோது வணக்கஸ்தலத்தில் கை வைக்ககூடாது என அன்றே நீதிமன்றம் உத்தரவிட்டதனால் ஆலயம் அன்று தப்பிப் பிழைத்த நிலையில் இன்று அந்த ஆலயம் இருக்கிறதா இல்லையா என்பதனைக் கூட அறிய முடியவில்லை” என்றார்.

இதேநேரம் இப்பகுதியில் அமைந்திருந்த கதிரை ஆண்டவர் ஆலயத்தின் மதகுருவாக இருந்த 71 வயதான கிருஸ்ணமூர்த்திக் குருக்கள் கணேசமூர்த்தி சர்மாவை தேடி இது தொடர்பான விபரங்களை கேட்டேன்.

“கதிரைமலை முருகன் ஆலயத்திற்கு எனது குடும்பத்தில் மூன்றாம் தலைமுறையாக நான் பூசை மேற்கொண்டு வந்தேன். இந்த ஆலயத்தின் மூல மூர்த்தியாக வேலே இருந்து வந்தது. பண்டயகால சிற்ப முறையிலே அமைக்கப்பட்ட ஆலயம் இது. அதனோடு குருக்கள் தங்குமிடம், மடப்பள்ளி மட்டுமன்றி 3 கேணிகள் ஒன்றாக காணப்பட்ட வரலாறும் உண்டு. அதேநேரம் இந்த ஆலயம் கடற்கரையோடு ஒட்டியிருந்த போதும் இந்த ஆலயத்திற்கு அப்பால் இருந்த கிணற்று நீரே உவராக இருந்தது. எனினும் ஆலயத்தின் கேணியிலிருந்த நீர் நன்னீராகவே இருந்ததால் அயலவர்களின் பாவனைக்கும் பெரிதும் உதவியது. இந்தப் பிரதேசம் அனைத்து சைவ மரபுகளோடு இருந்தமையால் திருச்செந்தூரை ஒத்த வடிவில் அமைக்க கனவு கண்டோம் அது வெறும் கனவாகவே போய்விடுமோ என்ற அச்சம் காணப்படுகின்றது. ஏனெனில் இந்தப் பிரதேசம் மீண்டும் விடுவிக்கப்படுமா இல்லையா என்ற கேள்வி ஒருபுறமும் அவை இருக்கின்றனவா இல்லையா என்ற அச்சம் மறுபுறமும் எம்மை சூழ்கின்றது”.

தான் பூசை செய்த ஆலயத்தைச் சென்று பார்வையிட முடியாத நிலை குறித்து மிகவும் வருந்திய ஐயாவின் கண்களிலிருந்து வடிந்த கண்ணீரைக் காண எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அந்த மண் மற்றும் இறைவனின்பால் அவர் வைத்திருந்த பற்றும் நம்பிக்கையும் அவரது குரலில் எதிரொலித்ததை என்னால் அவதானிக்க முடிந்தது.


அகில இலங்கை இந்து மாமன்றம்

ALL CEYLON HINDU CONGRESS

Regional Office

(தொடர்ச்சி 24 பக்கம்)

## Canada's Senthil Kumaran from 'Nivaranam' had crossed 100 life-saving Heart surgeries in Sri Lanka.

### Grand celebrations at the Lanka Hospital in Colombo, with many of beneficiaries who had surgeries.

# இலங்கையில் 100 வது இருதய சத்திர சிகிச்சைகளைச் செய்து அவர்கள் உயிர்களைக் காப்பாற்றி கனடா நிவாரணம் அமைப்பின் ஸ்தாபகர் செந்தில் குமரன்

### கொழும்பு லங்கா வைத்தியசாலையில் இடம்பெற்ற சிறப்பு வைபவத்தில் இலங்கைக்கான கனடிய தூதரகத்தின் உயர் அதிகாரி கலந்து சிறப்பித்தார்.




கடந்த 04-03-2023 அன்று கொழும்பில் அமைந்துள்ள "லங்கா வைத்தியசாலையில்" கனடா "நிவாரணம்" அமைப்பின் ஸ்தாபகர் செந்தில் குமரன் கலந்து சிறப்பித்த வைபவம் ஒன்றில் அவரது நிவாரணம் அமைப்பின் உதவியோடு அந்த லங்கா வைபத்தியசாலையில் மேற்கொள்ளப்பெற்ற 100வது இருதய சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பெற்றது தொடர்பான கொண்டாட்டம் இடம்பெற்றது. இதில் இலங்கைக்கான கனடிய தூதரகத்தின் உயர்அதிகாரி ஒருவரும் கலந்து சிறப்பித்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



இந்த நிகழ்வில் பங்கேற்க இலங்கை முழுவதும் இருந்து முன்பு அறுவை சிகிச்சை செய்த பல பயனாளிகளுடன் அவர்களது உறவினர்களும் வந்திருந்தனர். மார்ச் 4 ஆம் தேதி லங்கா மருத்துவமனை 100 உயிர் காக்கும் இதய அறுவை சிகிச்சைகளை கடக்கும் கொண்டாட்டம் இடம்பெற்றது. அன்று பிறந்த நாட்தொடக்கம் கடுமையான இதய நோயால் பாதிக்கப்பட்ட முகமலையைச் சேர்ந்த 12 வயது சிறுமியான வைணவி நிஷாந்தனுக்கு, வெற்றிகரமான திறந்த இதய அறுவை சிகிச்சை செய்யப்பெற்றது.



இந்த வைபவத்தில் இலங்கைக்கான கனேடிய தூதரகத்தின் அரசியல் மற்றும் வர்த்தக ஆலோசகரான திரு. டேனியல் பூட், முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு அனைவரையும் பாராட்டி கனடா நிவாரணம் அமைப்பின் ஸ்தாபகர் செந்தில் குமரன் அவர்களையும் நேரடியாகப் பாராட்டினார்.

இந்த அறுவை சிகிச்சைகளுக்கு தன்னார்வத் தொண்டு செய்ததற்காக இருதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் காந்தி, டாக்டர் லுஷாந்தா மற்றும் அவர்களது முழு அணியிலும் கனடியப் பாராளுமன்ற உறுப்பினர் ஷான் சென் அவர்கள் வழங்கிய பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்பெற்றன.

மேலும். டாக்டர் குருபரன், டாக்டர் லட்சுமன், டாக்டர் அருல்னிதி, டாக்டர் ரகு ராகநாதன், டாக்டர் சரித் டி சில்வா, டாக்டர் கீத், டாக்டர் கார்த்திக் மற்றும் டாக்டர் அம்பிகா ஆகியோருக்கு சிறப்பு நன்றி தெரிவிக்கப்பெற்று அவர்களுக்கும் பாராட்டுப்பத்திரங்கள் வழங்கப்பெற்றன.



இவ்வாறான உடனடி அறுவை சிகிச்சைகள். அவர்களுக்கு செய்யப்படாமல் இருந்திருந்தால், பலர் தங்கள் உயிர்களை இழந்திருப்பார்கள். டாக்டர் சிங்கபுலி, முழு மருத்துவ மற்றும் பிற ஊழியர்களும், மிக முக்கியமாக பாராட்டப்பட வேண்டியவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டது. இந்த விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்றுவதற்காக கனடா செந்தில் குமரன் அவர்களுடன் இணைந்து அயராது உழைத்ததற்காக அவரது இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர்களான நாதன், லங்கா மருத்துவமனையைச் சேர்ந்த அஸ்லம் & விஷ்ணு ஆகியோருக்கும் சிறப்பு நன்றயைத் தெரிவித்தார் செந்தில் குமரன் அவர்கள். கனடா மற்றும் இலங்கையில் உள்ள அனைத்து ஊடகங்களுக்கும் செந்தில் குமரன் தனது நன்றியைத் தெரிவித்தார், அவர்கள் தனது திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களுக்கு பரப்ப தனக்கு உதவியாக செயற்பட்டார்கள் என்றும் செந்தில் குமரன் அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார். இந்த நிகழ்வை வமலோசனன் லோஷான் அவர்கள் அழகாக தொகுத்து வழங்கினார்.

வைபவத்தின் இறுதியில் அனைவருக்கும் நன்றி தெரிவித்த கனடா "நிவாரணம் அமைப்பின் ஸ்தாபகர் செந்தில் குமரன் அவர்கள் தனது உரையில் ..." என் ஆர்வத்தைத் தொடர உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் எனக்கு பலம் அளித்தத அனைவருக்கும் நன்றி!. ஆதரவின் ஒரு பெரிய தூணாக இருப்பதற்கும், நான் மிகவும் விரும்பியதைச் செய்ய ஊக்குவித்ததற்கும் நன்றி எனது துணைவியாருக்கு நன்றி, நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மற்றும் குரலற்றவர்களுக்கு உதவிய நிவாரணம் அமைப்பின் கனடா நன்கொடையாளர்களுக்கு நன்றி. இந்த நன்கொடையாளர்களான நீங்கள் இல்லாமல், எதுவும் சாத்தியமில்லை. இந்த உயிர்களைக் காப்பாற்றுவதில் பெருமிதம் கொள்ளுங்கள். இந்த வெற்றியானது எமது முயற்சியின் ஒரு மைல் கல்லாகும்" இவ்வாறு தெரிவித்தார் கனடா நிவாரணம் அமைப்பின் ஸ்தாபகர் செந்தில் குமரன் அவர்கள்.

HAPPY

Women's Day

## வீணாவின் கவிக்கணை

ஊர் வென்ற மங்கையர்கள்,
பார் வென்ற பெருமைச்சின்னங்கள்,
என்று ஒருபுறம் இருக்க,
வீட்டுப்படிப்பின் வித்தகியும்,
தன் குடும்பத்தின்
முதுகெலும்பாம்,
தன் வீடளக்கும் நங்கையவள்
பெருமை என்னவென்று
அறியாதவரும் மறுபுறம் இருக்க,
வெளியே பார்க்கும்
கண்கள் எல்லாம்,
தன் வீட்டையும் பெருமையாய்
பார்த்துவிட்டால்
அதுவே அழகான
பெண்கள் தினமாம்!

# இலங்கையில் காணப்படும் பவுத்தம் தேரவாதப் பிரிவு என்று அழைக்கப்பட்டாலும் அது சிங்கள பவுத்தம் ஆகும்!

- கனடா நக்கீரன்

அண்மைக் காலமாக சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஆட்சிக்கு எதிராக பொதுமக்களும் தொழிற் சங்கங்களும் நடாத்தும் போராட்டங்கள் உச்ச கட்டத்தை அடைந்துள்ளன. அரசு போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கினாலும் எதிர்ப்புப் போராட்டங்கள் தொடர்ந்தவண்ணம் உள்ளது. இதில் ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால் பவுத்த பீடாதிபதிகள், பவுத்த தேரர்கள், பவுத்த மாணவர்கள் பெருமளவில் இந்தப் போராட்டங்களில் கலந்து கொள்கிறார்கள். இலங்கை ஒரு பவுத்த - சிங்கள நாடு, இந்த நாடு சிங்கள - பவுத்தர்களுக்கு மட்டுமே உரிய நாடு என பச்சை இனவாதம் பேசுகிறார்கள்.

கடந்த பெப்ரவரி 23 ஆம் நாள் கல்வி அமைச்சுக்குள் பலவந்தமாகப் புகுந்த பவுத்த - பாளி பல்கலைக் கழக மாணவர்கள் அங்கு காணப்பட்ட பொருட்களை அடித்து நொருக்கி நாசம் செய்தார்கள். பொலிசார் கல்வி அமைச்சின் மீது படையெடுத்ததுடன், தமது வழக்கமான பாணியில் தடியடி நடத்தி போராட்டக்காரர்களை கலைத்து வெளியேற்றியது. வெளியே ஓடிய , போராட்டக்காரர்கள் மீது நீர்த்தாரை மற்றும் கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன. மஞ்சள் நிற ஆடைகளை அணிந்த பவுத்த மாணவர்கள் இரும்புப் படலைமீது ஏறிக் கீழே குதித்து ஓடியதை தொலைக்காட்சியில் பார்த்த போது சற்று அதிர்ச்சியாக இருந்தது. அதைவிட அதிர்ச்சி ஒரு பவுத்த மாணவர் தனது மேலங்கியை இழந்துவிட்டுத் தலைதெறிக்க ஓடிய காட்சி ஆகும்.

மியான்மரில் இராணுவ ஆட்சிக்கு எதிராகவும், தலைவர் ஆங் சாங் சூகி சிறையில் அடைக்கப்பட்டதற்கு எதிராகவும் பவுத்த தேரர்கள் நடத்திய போராட்டங்கள் அமைதியாக நடத்தப்பட்டன. ஊர்வலங்களின் போது தேரர்கள் கட்டுப்பாட்டோடு சாலையோரங்களில் அமைதியாக நடந்து சென்றனர். அவர்கள் கூச்சல் போடவில்லை, கைகளில் பதாகைகள் இல்லை. மஞ்சள் அங்கிக்கு மரியாதை கொடுத்தார்கள்.

இலங்கையில் பவுத்த தேரர்களை தேர்தல் அரசியலுக்கு இழுத்து வந்த "பெருமை" எஸ்.டபுள்யு. ஆர்.டி பண்டாரநாயக்க அவர்களையே சாரும். 1956 இல் ஆட்சியைப் பிடிக்க "சிங்களம் மட்டும்" ஆட்சிமொழி, பவுத்த மதத்தை "புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு" செய்து சமூகத்தில் அதற்கு முக்கியத்துவம் அளிப்பது, சிங்கள தேசிய அடையாளத்தை வளர்ப்பது போன்ற சிங்கள - பவுத்த பேரினவாதத்தை ஒரு அரசியல் கட்சி முதன் முறையாகப் பயன்படுத்தியது. மேலும் 1956 இல் நடந்த தேர்தலில் பண்டாரநாயக்காவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது வெற்றிக்கு பவுத்த தேரர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள் மற்றும் ஆசிரியர்கள் **(Sanga, Veda and Guru)** அணிதிரட்டப்பட்டார்கள். இதில் உள்ள கசப்பான நகைச்சுவை என்னவென்றால், பண்டாரநாயக்காவின் கொலையாளி சோமராம தேரர் இந்த மூவரையும் பிரதிநிதித்துவப்படுத்தினார். சோமராம தேரர் ஒரு பிக்கு, ஆயுர்வேத மருத்துவர் மற்றும் ஆயுர்வேத கல்லூரியில் விரிவுரையாளர்.

மிகவும் எதிர்மறையான முக்கியத்துவம் என்னவென்றால், தப்பியோடிய இளம் தேரர்கள் காவல்துறையினரோடு கைகலப்பில் ஈடுபட்டார்கள். பிபிசி போன்ற சர்வதேச ஊடகங்கள் இந்தக் காட்சிகளைத் தங்கள் செய்தி ஒளிபரப்புகளில் காட்டத் தவறவில்லை. இவர்களால் புத்தரின் துறவு வாழ்க்கை முறையை விடாமுயற்சியுடன் பின்பற்றும் உண்மையான தேரர்களுக்கும் களங்கம் ஏற்பட்டது.

சங்கத்தினருக்கு புத்தர் விடுத்த முக்கிய செய்திகள் என்ன? குசினாராவில் **(Kusinara)** அவர் இறக்கும் தறுவாயில் இருந்தபோது மீண்டும் மீண்டும் சொல்லப்பட்ட முதல் மற்றும் கடைசிச் செய்தி தேரர்கள் விடாமுயற்சியுடன் தங்கள் சொந்த விடுதலையைத் தேட வேண்டும் என்பதாகும். புத்தரின் வாழ்க்கை பற்றி எழுதிய நூலில் தேரர் வென் நானமொழி அங்கிருந்த விநய விதிகளைப் பின்பற்றி வரும் பவுத்த தேரர்களிடம் புத்தர் பின்வருமாறு பேசியதாகக் கூறுகிறார்.

"வாருங்கள் பிக்குகளே, தம்மம் நன்கு அறிவிக்கப்பட்டுள்ளது துன்பத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவருவதற்காக புனித வாழ்க்கையை வழி நடத்துங்கள். தேரர்களே நான் மனிதனாக இருந்தாலும் சரி அல்லது தெய்வீகனாக இருந்தாலும் சரி, நான் அனைத்து தளைகளிலிருந்தும் விடுபட்டுவிட்டேன். இப்பொழுதே சென்று பலரின் நலனுக்காகவும், உலகின் நலனுக்காகவும், தெய்வங்களின் நலனுக்காகவும், மனிதர்களின் மகிழ்ச்சிக்காகவும் அலைந்து திரியுங்கள். உலகத்தின் மீது இரக்கம் கொண்டு தேவர்கள் மற்றும் மனிதர்களின் நன்மைக்காகவும், நலனக்காகவும், மகிழ்ச்சிக்காகவும், தொடக்கத்தில் நல்லது, நடுவில் நல்லது, இறுதியில் நல்லது என்று தம்மத்தைக் கற்றுக் கொடுங்கள்."

துரதிட்டவசமாக மாணவ தேரர்கள் மட்டுமல்ல புத்தரின் போதனைகளைப் பின்பற்றாத மூத்த தேரர்களும் உள்ளனர். பவுத்த தேரர்கள் புத்தருடைய அறிவுரைகளைப் பின்பற்ற வேண்டும். அதாவது, சம்சார வாழ்விலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள விடாமுயற்சியில் ஈடுபடுவதும், அறிய விரும்புவர்களுக்கு தம்மத்தைப் பரப்புவதும் ஆகும். அரசியலில் ஈடுபடுவது பற்றியோ அல்லது ஆட்சியாளர்களுக்கு அறிவுரை வழங்குவது பற்றியோ அவர் எதுவும் கூறவில்லை. துறவிகள் பற்றில்லாத ஒரு தூய்மையான வாழ்க்கையை வாழ வேண்டும். தேரர்கள் பற்று இல்லாத, தன்முனைப்பு இல்லாத ஆசைகள் இல்லாத, பாமரமக்களின் "ஆன்மீக நண்பர்" ("கல்யாண மித்ர") களாக தூய்மையான வாழ்க்கையை நடத்த வேண்டும். குறிப்பாக அவர்கள் பாமர மக்களை விமோசனப் பாதைக்கு அழைத்துச் செல்லும் ஆன்மீக நண்பர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"ஆன்மீக நண்பர்" என்பதை "உண்மை, நல்லொழுக்கம், நேர்மை அல்லது நன்மை பயப்பவை" என்று மொழிபெயர்க்கலாம். மேலும் மித்ரா என்பது மைத்ரியின் மூல வார்த்தையாகும், அதாவது இரக்கம் அல்லது கருணை.

உலக வாழ்க்கையைத் துறந்து புத்தபெருமானுடன் அலைந்து அவருடைய போதனைகளைக் கேட்கும் தேரர்களின் குழுதான் சங்கம் ஆக உருவானது. இதனை இலங்கையிலுள்ள மகா சங்கத்தினர் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு நல்ல பவுத்த வாழ்க்கையை எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கான உத்வேகத்தையும் வழிகாட்டுதலையும் வழங்குவதே சங்கத்தின் நோக்கமாக இருக்க வேண்டும் புத்தரின் மரணத்திற்குப் பிறகு, அவரது சீடர்கள் ஒரு சமூகமாக இடம் விட்டு இடம் அலைந்து, பிச்சை எடுத்து வாழ்ந்தனர்.

சங்கம், உலகில் புத்த தர்மத்தை நிலைநாட்டுவதற்காக தொடங்கப்பட்டது. சங்கம் மக்களை அறிவொளிக்கான பாதையில் நடப்பதற்கு ஒரு முன்மாதிரியாகத் திகழவேண்டும். பவுத்த தேரர்கள் பற்று, வெறுப்பு, அறியாமை, பெருமை மற்றும் பொறாமை ஆகியவற்றிலிருந்து விடுபட வேண்டும். ஆனால் இலங்கையில் இவை பின்பற்றப்படுவதில்லை. எல்லாம் நேர்மாறாகக் காணப்படுகிறது. மகா சங்கத்தினரே தன்முனைப்புடன் செயல்படுகின்றனர். தன்முனைப்போடு நடந்து கொள்கின்றனர். அவர்கள் "நான்" என்ற வார்த்தையை விட்டுவிடவில்லை. எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க அவர்களைப் பயன்படுத்திக் கொண்டிருந்த போது, அவர்கள் அவரைப் புறக்கணித்திருக்க வேண்டும்.

இன்று ஆட்சியாளர்கள் பவுத்த பிக்குகளுக்கு சொகுசு வாகனங்களை வழங்கியுள்ளனர். அவர்களுக்கு அரசியல் நிகழ்வுகளில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இது நாட்டின் அரசியல் அமைப்பில் மகா சங்கத்தினர் தலையிட இடமளித்தது. அரசு எப்படி அமைய வேண்டும், எந்த வடிவத்தில் அமைய வேண்டும் என்பதிலும் தலையிட வழிவகுத்துள்ளது.

"மக்கள் ஆன்மீகத்தை மேம்படுத்த உதவுவதே துறவிகளின் பங்கு ஆகும். கடந்த பத்து ஆண்டுகளில் பவுத்த தேரர்களின் அரசியல் ஈடுபாடு அதிகமாகிவிட்டது, நான் நினைக்கிறேன். மக்கள் இப்போது அவர்களை மதத் தலைவர்களாகப் பார்க்கவில்லை"என்று இலங்கையின் மத்திய மலைநாட்டில் உள்ள கண்டியில் வாழும் வணக்கத்திற்குரிய தேரர் மகாயாயே வினீதா கூறுகிறார்.

புத்தரின் கோட்பாடு மிகவும் எளிமையானது. தர்க்கரீதியானது. பகுத்தறிவோடு ஒத்துப் போவது. ஆனால் காலப் போக்கில் புத்தரின் பெயரில் அது ஒரு மதமாக உருவெடுத்துவிட்டது. புத்தர் கடவுளாக்கப்பட்டு விட்டார். மேலும், இந்து மதத்தில் காணப்படும் சடங்குகள், சம்பிரதாயங்கள், வழிபாடுகள் பவுத்தத்திலும் புகுந்துவிட்டன. இலங்கையில் உள்ள பவுத்த தேரர்கள் உருவ வழிபாடு, பூசை செய்தல், பிரித் ஓதுதல், நூல் கட்டுதல், பிரசாதம் அளித்தல் போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள்.

புத்தர் இந்து மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளான ஆத்மா, பிரமம், ஒரு படைப்பாளிக் கடவுள் ஆகியவற்றை நிராகரித்தார். கர்மா, தர்மம், மோட்சம் மற்றும் மறுபிறவி ஆகியவற்றை நிராகரித்தார். இந்து மதத்தில் காணப்படும் மந்திரங்கள், யாகங்கள், சாதி அமைப்பு ஆகியவற்றை நிராகரித்தார்.

மனிதர்களது நாளாந்த வாழ்வின் சிக்கல்களுக்கு நடைமுறை சாத்தியமுள்ள தீர்வுகளை பவுத்தம் போதிக்கிறது. மனக்குழப்பம், நடைமுறைக்கு சாத்தியமற்ற மனப்போக்கால் துன்பம் விளைதல், பெருவிருப்பு, மனப்பிறழ்வு போன்றவற்றின் மூலாதாரம் என்ன என்பதை பவுத்தம் கண்டறிந்துள்ளது. தியானம் செய்வதால் முறையற்ற சிந்தனையை மாற்ற முடியும். அன்பு, நேர்மறையான முயற்சியால், பிறர் மெச்சும்வகையில் மனதை மாற்றி, நாளாந்த வாழ்க்கையை புரட்டிப்போடமுடியும்.

புத்தர் கண்ட நான்கு வாய்மைகள் பவுத்த சமயத்தின் அடிப்படை கோட்பாடாகும். புத்தர் 6 ஆண்டுகளாக மேற்கொண்ட தேடுதலின் முடிவில் அவர் உணர்ந்த இறுதி உண்மைகள் ஆகும்.

(1) துன்பம் (துக்கம்). மனிதர்களால் துன்பத்தைத் தவிர்க்க முடியாது. பிறப்பு, நோய், முதுமை, இறப்பு ஆகியவை மனிதருக்குத் துன்பத்தைத் தருபவை. பசி, பகை, கொலை, வெகுளி, இழப்பு, மயக்கம் போன்றவையும் துன்பம் தருபவையே.

(2) துன்ப காரணம். துன்பத்துக்கான காரணம் ஆசை அல்லது பற்று.

(3) துன்ப நீக்கம். ஆசையை விட்டுவிடுவதுவே துன்பத்தை நீக்கும் முறைமை.

(4) துன்பம் நீக்கும் வழி. எட்டு நெறிகள்: எட்டு நெறிகளும் துக்கத்தைப் போக்க உதவும் வழிமுறைகள் ஆகும்.

பாலிமொழியில் இவை துக்கம், துக்க காரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என அழைக்கப்படுகிறது. துன்பத்தைப் போக்கி வீடு பேறாகிய நிர்வாண மோட்சத்தையடைவதற்குரிய வழியாது எனில், அட்டாங்க மார்க்கம் என்னும் எட்டு வித ஒழுக்கத்தை மேற்கொண்டு ஒழுகுவதாகும். அஷ்டாங்க மார்க்கமாவன:

1. நற்காட்சி (ஸ்மயக் திருஷ்டி)
2. நல்லூற்றம், அ.்.தாவது நற்கருத்து (ஸம்யக் சங்கல்பம்)
3. நல்வாய்மை (ஸம்யக் வாக்கு)
4. நற்செய்கை (ஸம்யக் கர்மம்)
5. நல்வாழ்க்கை (ஸம்யக் ஆஜிவம்)
6. நல்லூக்கம், அ.்.தாவது நன்முயற்சி (ஸம்யக் வியாயாமம்)
7. நற்கடைப்பிடி (ஸம்யக் ஸ்மிருதி)
8. நல்லமைதி (ஸம்யக் சமாதி)

இந்த அஷ்டாங்க மார்க்கத்தில் சீலம் (ஒழுக்கம்), சமாதி (தியானம்), பஞ்ஞா (ஞானம்) என்னும் மூன்றும் அடங்கும்.

பிற சமயங்கள் போலவே பவுத்த சமயத்திலும் பல கட்டுக்கதைகள், இடைச் செருக்கல்கள், சமய அனுட்டானங்கள், பிறமத கலாச்சாரக் கூறுகள் போன்றவற்றை தன்னகத்தே இணைத்துக் கொண்டு விட்டது. புத்தர் பரிநிர்வாணம் அடைந்து 3 மாதங்கள் சென்ற பின்னர் பவுத்த தேரர்கள் மகதநாட்டின் தலைநகரமான இராஜகிரகத்தில் கூடினார்கள். அங்கு புத்தரின் அறிவுரைகளை திருப்பி ஒப்புவித்து ஒழுங்கு அமைத்தார்கள். அவற்றுக்கு தம்ம (அபிதம்ம) கூடை மற்றும் விநய கூடை எனப் பெயரிட்டார்கள். முன்னது பவுத்த கோட்பாடு பற்றியும் பின்னது தேரர்கள் அனுட்டிக்க வேண்டிய விதிகள் பற்றியும் சொல்லுகினன்றன. பின்னர் தம்ம கூடையில் இருந்து சூத்திர கூடையை பிரித்து எடுக்கப்பட்டது.

முதிய மற்றும் இளைய தேரர்களிடையே ஏற்பட்ட கருத்துப் பிணக்குகளை தீர்த்து வைக்க இரண்டாம் பௌத்த சங்கம், கிமு 334 இல் கூட்டப்பட்டது. பிணக்குகள் தீர்க்கப்படாததால் பவுத்த சங்கம் தேரவாதம் (கீனநாய) மற்றும் மகாயானம் எனப் பிளவுபட்டன. நீண்ட காலமாக புத்தரின் போதனைகள் எழுதா மறையாகவே இருந்து வந்தன. இலங்கையை ஆண்ட வாலகம்பன் (கிபி 28 - 17) ஆட்சியிலேயே திரிபிடகம் எழுத்துரு பெற்றது.

இலங்கையில் காணப்படும் பவுத்தம் தேரவாதப் பிரிவு என்று அழைக்கப்பட்டாலும் அதனை சிங்கள பவுத்தம் என அழைக்கும் வழக்கம் நிலைத்துவிட்டது.

# சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் நிதி அனுசரணையில் விதை கச்சான்கள் துணுக்காயில் வழங்கி வைக்கப்பட்டன

- ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்




சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் நிதி அனுசரணையில் பெண்கள் அபிருத்தி நிலையத்தின் ஒழுங்குபடுத்தலுக்கமைய விதை கச்சான்கள் முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காயில் மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களை மீட்டு அவர்களுடைய வாழ்வாதாரங்களை மேம்ப்டுத்தும் நோக்கில் குறித்த செயற்றிட்டம் நுனுஊழு நிறுவனத்தால் முன்னெடுக்கப்டிருந்தது.



மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய்பிரதேசசெயலகத்திற்குற்பட்ட 15 கிராமங்களை சேர்ந்த 30 குடும்பங்களுக்கு தலா ஒரு குடும்பத்திற்கு 30000 ரூபாய் பெறுமதியான கோது உடைக்கப்பட்ட 15 கிலோ கச்சான் வீதம் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் தலைவர் பிரசாந்த், இணைப்பாளர் கெம்சன் கண்காணிப்பு உத்தியோகத்தர் ரெக்ஸ் மற்றும் பெண்கள் அபிவிருத்தி நிலைய இணைப்பாளர் கமலினி மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டிருந்தனர்.


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?

Coverall Group Inc

Painting | Bathrooms
Kitchens | Decks
Flooring | Basements
Pot lights | Accent Walls

Contact us 416.706.8160



MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS C R PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.



MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York


தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

(20 பக்கத் தொடர்ச்சி)

# வடக்கில் வரலாற்று ஆலயங்கள் “அழிக்கப்பட்டு” ஜனாதிபதிக்கு மாளிகை

“இப்பகுதியை விடுவிப்பதற்கு முன்பு எனது ஆயுள் காலத்திலேயே ஒரு தடவையேனும் அந்த இடங்களை மீண்டும் ஒரு தடவை பார்வையிட வேண்டும் அதற்கு இறைவன் அருள்புரிந்திட வேண்டும்” என்றார்.

இவ்வாறான வரலாற்று சரித்திரம் மிக்க 7 சைவ (ஆலய)


ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

அංක 2244/21 - 2021 සැප්තැම්බර් මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.09.09

2244/21 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந்திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

கோட்டாபய ராஜபக்ஷ,
சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு,
2021, செத்தெம்பர் 09.

1A - G 34902— 25 (2021/09)

www.documents.gov.lk

2A I කොටස : (I) ඡෙදය - ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ අති විශෙෂ ගැසට් පත්‍රය - 2021.09.09
பகுதி I : தொகுதி (I) - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை - அதி விசேஷமானது - 2021.09.09

அட்டவணை

துண்டு A

வடக்கு : துண்டு B ;
கிழக்கு : துண்டு B ;
தெற்கு : துண்டு B ;

துண்டு B

கிழக்கு : துண்டு E.F.D. மற்றும் C ஆகிய காணிகளின் பெயர் தெரியவில்லை.
உரிமை கோருபவர் தெரியவில்லை;
தெற்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) காணியின் பெயர் தெரியவில்லை.
உரிமை கோருபவர் தெரியவில்லை. துண்டு D மற்றும் C ;

துண்டு C

வடக்கு : துண்டு B ;
கிழக்கு : துண்டு B மற்றும் D ;
தெற்கு : துண்டு B ;
மேற்கு : துண்டு B.

துண்டு D

வடக்கு : துண்டு B ;
கிழக்கு : துண்டு B ;
தெற்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) மற்றும் B ;
மேற்கு : துண்டு C.

துண்டு E

வடக்கு : கடல் ;
தெற்கு : துண்டு B ;
மேற்கு : துண்டு B.

துண்டு F

வடக்கு : துண்டு B ;
கிழக்கு : காணியின் பெயர் தெரியவில்லை.
உரிமை கோருபவர் தெரியவில்லை;
தெற்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) ;
மேற்கு : துண்டு B.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

அடையாளங்களை அழித்தே ஜனாதிபதிக்கு 30 ஏக்கரில் ஆடம்பர மாளிகை அமைத்தனர். இன அழிப்பை மட்டுமல்ல எமது நாட்டின் கலை, கலாசாரத்தையும் அழித்தனர் தற்போதும் அழிக்கின்றனர் என்பதற்கு அடையாளமாகவே இந்த உண்மைகள் சான்று பகிர்கின்றன.

இந்த வரலாற்றுச் அடையாளங்களை அழித்து ஜனாதிபதி மாளிகை அமைக்கும்போது சிலர் எதிர்த்து குரல் கொடுத்தாலும் பலர் ஏன் குரல் எழுப்பவில்லை என வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தனைத் தொடர்பு கொண்டு வினவினேன்.

“இந்த ஜனாதிபதி மாளிகையை 2013ஆம் ஆண்டிற்கு முன்பே இரகசியமாக அமைத்துவிட்டனர். இந்த மாளிகை அமைக்கப்படும் காலத்தில் எமது மக்களையோ மதகுருமார்களையோ, ஆன்மீக ஆர்வலர்களையோ தெல்லிப்பளைச் சந்திக்கு அப்பால் செல்ல படையினர் அனுமதிக்கவில்லை”. அந்த காலகட்டத்தில் கீரிமலை மற்றும் மாவிட்டபுரம் ஆலயத்திற்கு நித்திய பூசைக்குச் செல்வதற்கு குருக்களிற்கு கூட பிரச்சனைகள் இருந்தன என்கிறார் சுகிர்தன்.

“ஜனாதிபதி மாளிகை அமைக்க அங்குள்ள புராதன சிவன் மற்றும் இதர இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டன அல்லது இல்லாது ஆக்கப்பட்டன என்பது உண்மை. ஏன்? கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் மற்றும் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்திற்கான நித்திய பூசைக்காக செல்வதற்கு குருக்களும் நிர்வாகமும் பெரும் பிரச்சனைகளை சந்தித்தனர். அதேவேலை அவர்களுடன் இணைந்து நாமும் பல முயற்சிகளை மேற்கொண்டோம்” என்றார்.

இவையெல்லாம் இவ்வாறு இருக்க 2012 ஆம் ஆண்டு மக்களினதும் வரலாற்றுச் சின்னங்களும் இருந்த 29.1 ஏக்கர் நிலத்தை மகிந்த ராஜபக்ச காலத்தில் அபகரித்து கட்டிய இந்த ஜனாதிபதி மாளிகையை மீள மக்களிடமே கையளிக்குமாறு கோரிய போதும் அது இடம்பெறாத நிலையில் 2021-09-09 அன்று 2244/21 இலக்க அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம் அக்கட்டிடத்தினையும் அதனோடு இணைந்த நிலப்பரப்பையும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பாவனைக்கு கையளிப்பதாக பிரகடணப்படுத்தப்பட்ட போதும் அக்கட்டிடம் இன்று வரை கடற்படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

இவ்வாறு அரச வர்த்தமானி அறிவித்தல் விடப்பட்டமை தொடர்பில் தமக்கு அறிவித்தல் வழங்கவோ அல்லது தமது சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளவோ இல்லை என நில உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் இந்த விடயம் தொடர்பில் மேலும் தேடியவேளை 2019ஆம் நில அளவைத் திணைக்களம் வரைந்த ஓர் வரைபடம் கிட்டியது. அந்த வரைபடத்தில் சடையம்மா மடம் என அடையாளம் இடப்பட்டுளதன் மூலம் 2019ஆம் ஆண்டும் சடையம்மா மடம் இருந்தமை உறுதி செய்யப்படுவதனால் தற்போது அங்கே அந்த மடம் உண்டா, இல்லையா என்பதும் மிகப் பெரும் கேள்வியாகவுள்ளது. சிவன் சொத்து குலம் நாசம் என்பதை இலங்கை ஆட்சியாளர்கள் உணர்ந்துள்ளார்களா என்பது அந்த ஈசனிற்கே வெளிச்சம்!

## கடந்தவையும் கடப்பவையும் (49)

**அன்று**

**கால் நனைக்கும் நோக்கோடு கடலிறங்கி**
**மேல் நனைத்துக் காத்திருந்தோம் இரவுக்காய்**

**பொழுதுபடும் வேளையிலும் புத்துணர்ச்சி - அங்கு**
**எழுந்துபோக விருப்பமில்லை நீரினிலே மிதப்பவர்க்கு - ஓரத்திலே**

**யுவதிகள் விளையாடுகிறார் கைப்பந்து ஒருபுறம்**
**சிறுவர்களும் விளையாடுகிறார் அப்பந்தே**

**பார்வையாளர் பலவிடத்தும் பரவிநிற்க - அங்கு**
**வேர்க்கடலை ஆச்சியும் சிரிச்சபடி வந்திருக்க**

**ஆர்க்கும் விருப்பமான குளிர்களி வண்டியும் - எல்லோரும்**
**பார்க்கும் விதத்தில் வந்தங்கு நின்றது**

**சுவர்க்க வாசல் திறக்கும்போது**
**பார்ப்பதற்காய் ஓடிடும் கூட்டமதை - ஸ்ரீரங்கத்தில்**

**கண்ணாரக் கண்ட காட்சி மறுபடியும் - அந்த**
**வண்ணம் தீட்டிய வண்டிக்குள் மூன்று**

**மூடியுள்ள பொட்டிகளைத் திறக்கும் முன்பே**
**கூடியுள்ள கூட்டத்தைப் பார்த்த போது**

**மனக்கண் முன் வந்து போச்சு - இன்னும்**
**மினக்கட்டால் கிடைக்காமல் போகவும்**

**அதிக வாய்ப்பு இருக்குமென்று**
**வேகமாய் செயற்பட்டு வாங்கியாச்சு எல்லோருக்கும்**

**நல்லாகத்தான் இருந்தது எமதிடத்துக் குளிர்களி - ‘முன்னொருநாள்**
**நிற்கவே முடியாத இவ்விடத்தில் நின்றபடி உண்ணுகிறோம்’ என்ற போது**

**தொடங்கி விட்டேன் தொணதொணக்க**
**என்பது**
**விளங்கி விட்டது சிலர் முகத்தைப் பார்த்தபோது**

**ஆனாலும் விடவில்லை எத்தனை அனுபவித்தோம்**
**பேசாமல் இருக்க மனம் வருமா???**

**இன்று**

**அடர்ந்த தென்னை மரங்கள் குறைந்தன - வீடுகள்**
**உடைந்து குவிந்த கற்குவியல்கள் அகன்றன - மீண்டும்**

**எழுந்துள்ளன வீடுகள் அவற்றோடு - புதிய**
**மெருகொடு**
**தெரிந்தது மேரியின் ஆலயம் - அருகில்**

**சக்தியின் கோவிலில் விழாச்**
**சத்தமொடு பலவண்ண விளக்குகள்**

**அத்திசையில் மிக கிட்டவாய் இருந்தது - முன்னர்**
**நித்தம் தேடல் விளக்கொடிருந்த ஊரிக்காட்டு முகாம்**

**அன்று இந்நேரம் இவ்விடத்தில் ஏதேனும்**
**சின்னனாய் அசைந்தாற் போதும்**

**ஆட்டிலறிக் கணைகள் வந்து**
**கேட்கும் சக்தியைக் கெடுத்துவிடும் - அதை**

**இன்று நினைத்தாலும் முதுகு கூசும்**
**என்று சொன்னவாறு புறப்பட ஆயத்தமானவர் பின் - இவர்களுக்கு**

**இன்னும் சொல்ல நிறைய இருக்கு**
**என்றவாறே - பின் தொடர்ந்தேன்...**

**(தொடரும்)**

**-- உமா மோகன் - Montreal- Canada --**

(19 பக்கத் தொடர்ச்சி)

## ஒன்றிணைந்த தேசம்? தென்னிலங்கையர் ஒருவரின் வடக்குப் பயணம்

பிரபலமான மத வழிபாட்டு இடமொன்றிற்குச் சென்ற போது, தமிழ் மக்களின் உரித்துக்கள் குறித்து இராணுவம் எதுவும் கவலைப்படுவதில்லை என்பதை நான் அவதானித்தேன். அதேவேளை கடலிற்கு நேர் எதிராக உள்ள மற்றுமொரு கோவிலில் அரச மரம் ஊன்றப்பட்டு பௌத்த கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது தெரிகிறது. அந்த கோவிலிற்கு பொறுப்பான பிக்கு அங்கு அமர்ந்துள்ளார். அந்த இந்து கோவிலில் இருந்த தெய்வச்சிலைகள் அதன் பூசகரின் அனுமதியின்றி அங்கிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இந்து கோவிலிருந்து கடவுளின் விக்ரகம் ஒன்று அகற்றப்படும் போது செய்யப்படும் வழக்கமான மதச்சடங்குகளும் இடம்பெறவில்லை. இந்த குறிப்பிட்ட இடத்தில் சிங்கள பௌத்த சின்னங்கள் ஏதும் இல்லாத நிலையிலும், அது அவ்வாறு இருந்தது என்று கோரும் வகையில் சிங்கள பௌத்தர்கள் அங்கு வர முடிவு செய்தனர் என்ற கதை ஒன்று கூறப்படுகிறது.

நன்றி கூறி விடைபெறுவதில் நான் சிறந்தவன் இல்லையென்றாலும், புறப்படும் போது எனக்குள் மனவருத்தம் ஏற்பட்டது. எனினும் விரைவாக இப்படியான சந்திப்புகள் மீண்டும் இடம்பெறும் என்ற நம்பிக்கையும், அந்த நட்பு பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு சாட்சியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இன்று வடக்கில் தமிழர்கள் எதிர்கொள்வது கலாச்சாரம் மற்றும் உடல்ரீதியாக முற்றானதும் திட்டமிட்ட இனப்படுகொலையாகும். போரின் இறுதியில் இனப்படுகொலை ஒன்று இடம்பெற்றது என்று நான் நம்பவில்லையென்றாலும், அந்த இனப்படுகொலை இப்போது நடைபெறுவதாக நம்புகிறேன். “இனப்படுகொலை நடைபெறவில்லை” என்ற வாதம் வடக்கை கொடூரமான வகையில் வலிந்து ஆக்கிரமிப்பதை நியாயப்படுத்துவதற்கு வழி செய்துள்ளது. அங்குள்ள ஒவ்வொரு தமிழரும் மரபணு ரீதியாக பயங்கரவாத சந்தேக நபர்கள், அவர்கள் விடுதலைப் புலிகளை மீண்டும் உயிர்ப்பிப்பார்கள் என்று இராணுவம் முத்திரை குத்தியுள்ளது. அதுவே சர்வதேசக் குழுக்களும் பரப்புரையாளர்களால் முன்னெடுக்கப்படுவதால் அங்குள்ள மிகவும் முக்கியமானதும் மற்றும் தொடர்ச்சியான விஷயங்கள் கவனத்தை சிதறடித்துள்ளன. வடக்கில் முக்கியமான பிரச்சனை இராணுவமயமாக்கலும், அதன் மூலம் வடக்கில் வாழும் தமிழர்கள் மீது முன்னெடுக்கப்படும் கலாச்சார மற்றும் உடல்ரீதியான இனப்படுகொலையே. அங்கு விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்வதற்கான உண்மையாக எந்த ஆதாரத்தையோ ஒரு சிறு துளிகூட என்னால் காண முடியவில்லை.

அவ்வளவு பெரிய இராணுவப் பிரசன்னம் இருக்கையில் அங்கிருக்கக் கூடிய தமிழர்கள் எப்படியாவது வாழ வேண்டும் என்று எண்ணுவார்களே தவிர தமக்குப் பிரச்சனைகளை ஏற்படுத்திக்கொள்ள விரும்பமாட்டார்கள் என்று நீங்கள் முன்கூட்டியே கணிக்கக் கூடும். ஆனால் இராணுவம் தொடர்ச்சியாக வடக்குப் பகுதியில் மறைமுகமாக பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ளது என்று சித்தரிப்பதும், யுத்த காலத்தில் இடம்பெற்ற தீவிரமான பிரச்சாரமும் இந்த போலி தேசியவாத முழக்கத்தை முன்னெடுக்க வழிவகுக்கிறது.

ஆனால் உண்மையில் வடக்கில் வலிந்து சிங்கள மக்களை மறைமுகமாக குடியமர்த்தும் நோக்கத்தின் மூலம் மக்கள் மக்கள் தொகை நிலையை பித்தலாட்டத்தின் மூலம்-வெளியேறுங்கள், ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளுங்கள் அல்லது செத்து மடியுங்கள் என்கிற வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

புராண காரணங்கள் அல்லது வேறு எந்த நோக்கமாக இருந்தாலும் சரி அல்லது அரசு உண்மையாக வடக்கின் பொருளாதார நிலையை மீண்டும் புத்துணர்ச்சி செய்ய விரும்புகிறதா என்பது இன்னும் தெரியாத நிலையில், வடக்கை இராணுவம் மட்டுமே ஆட்சி செய்கிறது தெற்கை மட்டுமே அரசு ஆட்சி செய்கிறது என்பதைக் கூட அரசு ஒப்புக்கொள்வது கூட இல்லை. இந்த தீவில் தெற்கும் வடக்கும் நிலத்தின் மூலமே தொடர்பிலுள்ளது என்கிற காத்திரமான உண்மை நிலவும் போது, “ஒரே நாடு, ஒரே சட்டம்” என்ற மாயத்தோற்றத்தின் மூலம் அதை இணைக்கப்படுகிறது என்ற வாதம் வைக்கப்படுகிறது. ஆனால் இந்த உண்மை ஒப்புக்கொள்ளப்படுவதில்ல.

புவியியல் ரீதியாக அவை ஒரே நிலப்பரப்பில் இருந்தாலும், சட்டரீதியாக இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தெற்கே நீங்கள் மேற்கத்திய உல்லாச கலாச்சாரம், கேளிக்கைகள், சிறந்த ஹொட்டல்கள் ஆகியவற்றை அனுபவிக்கலாம். ஆனால் வடக்கிலோ “மனிதாபிமான நடவடிக்கை” என்று கூறப்பட்ட நடவடிக்கையில், இராணுவம் மட்டுமே வெற்றிபெற்ற நிலையில் போரின் வடுக்கள் மற்றும் போர்க்காலத்தில் நிகழ்ந்த கொடூரங்களின் காட்சிகளை மட்டுமே நகைமுரணாக பார்க்க இயலும். அவையே நல்லெண்ணத்தின் சமிஞ்கைகள் என்று எமக்குச் சரியாக நினைவூட்டப்படுகிறது.

இன்று வடக்கைப் பார்த்துவிட்டு, அங்கிருந்து திரும்பிய பிறகு அதை இஸ்ரேல் மற்றும் பாலஸ்த்தீன சூழலுடனேயே என்னால் ஒப்பிட முடிகிறது. சூழல்கள் தனித்துவமாக இருந்தாலும், இராணுவ வர்க்கம் மற்றும் சாதாரண பொதுமக்கள் ஆகிய இருவருக்குமிடையிலான கலாச்சார பரிமாற்றத்தில் பொதிந்துள்ள கருத்துக்கள் மற்றும் எண்ணங்கள் வடக்கில் நிகழும் நிகழ்வுகளுக்கு உண்மையாக மிகவும் ஒத்ததாக உள்ளது. “இராணுவம்” மற்றும் “தமிழர்கள்” என்கிற வார்த்தைகளை “யூதபேரினவாத” மற்றும் “ஹமாஸ்” என்று மாற்றிப்பாருங்கள், ஒரு பிளவுபட்ட தேசத்தை அடைவதற்கான நிகழ்வுகளை வரிசைப்படுத்த முடியும். ஆனால் அது பரவாயில்லை போர்க்காலத்திற்கு பிறகு நாம் இறுதியாக முழு அளவில் ஒன்றுபடுத்தப்பட்டுள்ளோம் மேலும் அதனால் தான் மில்லியன் கணக்கான ரூபாய்களை செலவுசெய்து சுதந்திரதினம் கொண்டாடப்படுகிறது - ஏனென்றால் நாடு முழுவதும் இணைக்கப்பட்டு சுதந்திரமாக உள்ளது மற்றும் அந்த உண்மையை நாம் ஏற்க வேண்டும் என்று எமது அரசால் தொடர்ச்சியாகக் கூறப்படுகிறோம். நீங்கள் இப்போது ஒரு பிரிவினைவாதி என்று அழைக்கப்பட விரும்பமாட்டீர்கள் தானே?

*இந்த எழுத்தாளர் சட்டம் படித்த ஒரு பட்டதாரி. அவர் சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சமகால நடப்புகள், புவிசார் அரசியல், புலனாய்வு ஊடகத்துறை மற்றும் ஆவணப்படத் தயாரிப்பில் ஆரவமுள்ளவர்.*

---

*இந்த கட்டுரையில் இருக்கும் கருத்துக்களும் எண்ணங்களும் இதை எழுதியவருடையது, மேலும் அது இந்த வெளியீட்டாளரின் கருத்துக்களைப் பிரதிபலிக்கிறது என்பதாக புரிந்துகொள்ளப்படக் கூடாது.*



# தமிழகத்தில் ஆன்லைன் ரம்மி தடை மசோதா மீண்டும் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும்: அமைச்சர் ரகுபதி



ஆன்லைன் ரம்மி தடை மசோதா மீண்டும் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் என்று தமிழக சட்டத் துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.ஆன்லைன் ரம்மி உள்ளிட்ட விளையாட்டுகளை தடை செய்வதற்கான மசோதாவை தமிழக அரசுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி திருப்பி அனுப்பினார். அதில், மத்திய அரசின் கீழ் வரும் விவகாரத்தில் மாநில அரசு எந்த அடிப்படையில் சட்டம் இயற்றலாம் என்பது உட்பட 8 கேள்விகளை எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக பேசிய சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, "ஆன்லைன் ரம்மி தடைச் சட்டத்தை மீண்டும் இயற்றினால் ஆளுநர் ஒப்புதல் தந்தாக வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.இந்நிலையில், இது தொடர்பாக இன்றைய தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இது குறித்து சட்டத்துறை அமைச்சர் ரகுபதி கூறுகையில், "ஆன்லைன் ரம்மி தடை சட்டம் மீண்டும் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்படும். இந்த தடை சட்டத்தை இயற்ற தமிழக சட்டமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று ஆளுநர் திருப்பி அனுப்பி உள்ளார். நாங்கள் சட்டம் இயற்ற அதிகாரம் உள்ளது என்று சட்டத்தை இயற்றி மீண்டும் அனுப்ப உள்ளோம். சட்டத்தில் உள்ளதை, திரும்பத் திரும்ப ஒரே கேள்வியைதான் ஆளுநர் கேட்டுள்ளார்.

ஆன்லைன் ரம்மி தடை சட்டம் தொடர்பாக நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. நீதிமன்றம் சட்டம் இயற்றும் அதிகாரத்தை எங்களுக்கு கொடுத்துள்ளது. அதன்பிறகு ஒய்வு பெற்ற நீதிபதி தலைமையில் குழு அமைக்கப்பட்டு, அனைத்து தரப்பினரின் கேட்டுதான் இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. 95 சதவீத பேருடன் ஆதரவுடன் இந்த சட்டம் இயற்றப்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாக்க கொண்டு வரப்பட்ட சட்டம் இது. இந்த சட்டம் ஆளுநரிடம் இருந்த காலத்தில் 12 பேர் மரணம் அடைந்துள்ளனர்" என்று அவர் தெரிவித்தார்.பின்புலம் என்ன? தமிழகத்தில் ஆன்லைன் ரம்மி உள்ளிட்ட இணைய விளையாட்டுகளில் ஈடுபட்டு லட்சக்கணக்கில் பணத்தை இழந்த பலரும் தற்கொலை செய்து கொண்டனர்.

இதையடுத்து, ஆன்லைன் ரம்மி உள்ளிட்ட சூதாட்டங்களை தடை செய்ய வேண்டும் என்று தமிழக அரசுக்கு அரசியல் கட்சித் தலைவர்களும், சமூக ஆர்வலர்களும் தொடர்ந்து கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து, கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் ஆன்லைன் ரம்மியை தடை செய்வதற்கான சட்டம் கொண்டு வரப்பட்டு, சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட நிலையில், இச்சட்டத்தை உயர் நீதிமன்றம் ரத்து செய்தது.

பின்னர், சட்டப்பேரவை தேர்தலில் திமுக வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. ஆன்லைன் ரம்மி விளையாட்டுகளால் உயிரிழப்போர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்ததால், ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்வது மற்றும் ஆன்லைன் விளையாட்டுகளை முறைப்படுத்துவது தொடர்பாக ஆய்வு செய்ய, சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.சந்துரு தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இந்த குழு பல்வேறு தரப்பினரின் கருத்துகளை கேட்டு, ஏற்கெனவே உள்ள விதிகளின்படி இதை கட்டுப்படுத்த இயலாது என்பதால், புதிய சட்டம் இயற்ற வேண்டும் என்று பரிந்துரைத்தது.

இதன் அடிப்படையில், 'தமிழ்நாடு ஆன்லைன் சூதாட்ட தடை மற்றும் ஆன்லைன் விளையாட்டு ஒழுங்குபடுத்துதல் அவசர சட்ட மசோதா' உருவாக்கப்பட்டு, அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டது. பிறகு, இந்த மசோதா கடந்த அக.1ம் தேதி ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு அனுப்பப்பட்டு, ஆளுநரும் ஒப்புதல் அளித்து சட்டம் அமலானது. இந்த சட்டப்படி, தமிழகத்தில் பணத்தையோ, வேறு ஏதேனும் பொருளையோ வைத்து, ஆன்லைன் மூலம் நடைபெறும் சூதாட்டங்கள், விளையாட்டுகளுக்கு தடை விதிக்கப்படுகிறது. பணம் வைத்து ஆன்லைன் சூதாட்டம், ஆன்லைன் விளையாட்டு விளையாடினால் 3 மாதங்கள் வரை சிறை அல்லது ரூ.5 ஆயிரம் வரை அபராதம் அல்லது இவை இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

இதையடுத்து, அக்டோபரில் நடந்த சட்டப்பேரவை குளிர்கால கூட்டத்தொடரில், ஆன்லைன் சூதாட்ட தடைக்கான அவசர சட்டத்துக்கு மாற்றாக, அக்.19ம் தேதி சட்ட மசோதாவை அமைச்சர் எஸ்.ரகுபதி தாக்கல் செய்தார். அந்த சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. இதையடுத்து, அந்த மசோதாவில் பல்வேறு விளக்கங்களை ஆளுநர் கோரியிருந்தார். அதற்கு, 24 மணி நேரத்தில் விளக்கங்களை தமிழக அரசு அளித்தது. பிறகு, மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்குமாறு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கடந்த டிச.2ம் தேதி ஆளுநரை சந்தித்து, வலியுறுத்தினார். இதற்கிடையே, ஆன்லைன் ரம்மி உள்ளிட்ட விளையாட்டுகளை நடத்தும் நிறுவனங்களின் பிரதிநிதிகளை ஆளுநர் ரவி, சந்தித்துப் பேசியது விமர்சனத்துக்கு உள்ளானது.சட்டம் இயற்றி 5 மாதங்கள் ஆகும் நிலையில், அதன் மீது ஆளுநர் எவ்வித முடிவும் எடுக்காமல் இருந்தார்.

இந்நிலையில், தற்போது ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவை தமிழக அரசுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி திருப்பி அனுப்பியுள்ளார். மத்திய அரசின் கீழ் வரும் விவகாரத்தில் மாநில அரசு எந்த அடிப்படையில் சட்டம் இயற்றலாம் என்பது உட்பட 8 கேள்விகளை எழுப்பியுள்ள ஆளுநர், மசோதாவில் போதிய தரவுகளை சேர்த்தும், சில திருத்தங்களை செய்தும் அனுப்புமாறு தெரிவித்துள்ளதாக அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

# சென்னையில் மகளிர் தின கொண்டாட்டம்



சென்னையில் பல்வேறு இடங்களில் நேற்று உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. தமிழக அரசு சார்பில், காமராஜர் சாலையில் உள்ள அவ்வையாரின் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த படத்துக்கு அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், பி.கீதாஜீவன், என்.கயல்விழி செல்வராஜ், சென்னை மேயர்பிரியா, மாநில மகளிர் ஆணைய தலைவர் ஏ.எஸ்.குமரி, துணை மேயர் மு.மகேஷ்குமார், செய்தித் துறைச் செயலாளர் இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், தமிழ்வளர்ச்சித் துறை இயக்குநர் அவ்வை அருள் ஆகியோர் மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், மகளிருக்கான போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன. ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கட்சியின் இடைக்காலப் பொதுச் செயலாளர் பழனிசாமி கேக் வெட்டி, மகளிரணி நிர்வாகிகள், தொண்டர்களுக்கு வழங்கினார். தொடர்ந்து, மிக்ஸி, கிரைண்டர், தையல் இயந்திரங்கள் மற்றும் 1,000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.நிகழ்ச்சியில், அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன், முன்னாள் அமைச்சர்கள் சரோஜா, டி.ஜெயக்குமார், நத்தம் விஸ்வநாதன், திண்டுக்கல் சீனிவாசன், ஆர்.பி.உதயகுமார், ஆர்.காமராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். ஏற்பாடுகளை மகளிரணிச் செயலாளர் பா.வளர்மதி செய்திருந்தார்.

தமாகா சார்பில் சேப்பாக்கத்தில் நடைபெற்ற விழாவில், கட்சித் தலைவர் ஜி.கே. வாசன் பங்கேற்று, சாதனை மகளிருக்கு விருது வழங்கினார். தியாகராய நகரில் உள்ள மார்க்சிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநிலச்செயலர் கே.பாலகிருஷ்ணன் முன்னிலையில், மகளிர் முன்னேற்றம், பாலின சமத்துவம் தொடர்பான உறுதிமொழி ஏற்கப்பட்டது. எழும்பூரில் உள்ள மதிமுக தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பொதுச் செயலாளர் துரை வைகோ, தலைமை நிலையச் செயலாளர் துரை வைகோ உள்ளிட்டோர் பங்கேற்று, தற்காப்புக் கலையில் சிறந்து விளங்கும், மகளிரணி நிர்வாகியின் மகள்கள் இருவருக்கு ஊக்கத்தொகை வழங்கினர்.

ராயப்பேட்டையில் உள்ள அமுமுக தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பொதுச் செயலாளர் டிடிவி தினகரன், ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.சிறைத் துறை தலைமை இயக்குநர் அமரேஷ் புஜாரி அறிவுறுத்தலின்படி, அனைத்து மகளிர் சிறைகளிலும் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன. தென்னிந்திய மகப்பேறு மருத்துவர்கள் சங்கம், ஜனநாயக மாதர் சங்கம் மற்றும் மருத்துவ அமைப்புகள் சார்பில் எலியட்ஸ் கடற்கரையில் வாக்கத்தான் நடைபெற்றது. இதில், முன்னாள் சர்வதேச ஓட்டப் பந்தய வீராங்கனை சைனி வில்சன், தென்னிந்திய மகப்பேறு மருத்துவர்கள் சங்கத் தலைவர் ஜெயராணி காமராஜ், செயலாளர் குந்தவை சங்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தலைவர்கள் வாழ்த்து: திக தலைவர் கி.வீரமணி, தேமுதிக தலைவர் விஜயகாந்த், விசிக தலைவர் திருமாவளவன், பாரிவேந்தர் எம்.பி. நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், ஐஜேகே தலைவர் ரவி பச்சமுத்து உள்ளிட்டோர் மகளிர் தின வாழ்த்து கூறினர்.இலவச மருத்துவ முகாம்: சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி, சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலகம் சார்பில், இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. விழாவில், சென்னை மண்டல பாஸ்போர்ட் அதிகாரி எஸ்.கோவேந்தன் வரவேற்புரை ஆற்றினார்.

தமிழக அரசின் டிட்கோ மற்றும் சிட்கோ நிறுவனங்களில் மேலாண்மை இயக்குனர் ஜெயஸ்ரீ முரளிதரன், சென்னை நகர வடக்கு மண்டல காவல்துறை டிஐஜி ஆர்.வி.ரம்யா பாரதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று, பாஸ்போர்ட் அலுவலக பெண் ஊழியர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் வகையில் உரையாற்றினர்.மேலும், தனியார் மருத்துவமனையுடன் இணைந்து பெண் ஊழியர்கள், பாஸ்போர்ட் விண்ணப்பதாரர்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை நடைபெற்றது. சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலக செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் இரட்டை இலக்கத்தில் தொற்று பாதிப்பு மீண்டும் வேகமெடுக்கிறதா கரோனா?

தமிழகத்தில் கடந்த 2 வாரங்களாக இரட்டை இலக்கத்தில் தினசரி கரோனா தொற்று பதிவாகி வருகிறது. இதனால் மீண்டும் கரோனா பரவத் தொடங்கியுள்ளதா என்ற அச்சம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது.தமிழகத்தில் 2020 மார்ச் மாதம் தொடங்கிய கரோனா தொற்றால், இதுவரை 35.95 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 38,049 பேர் இறந்துள்ளனர். கரோனா தொற்றுடன் இணை நோய்கள், பிந்தைய பாதிப்புகளால் ஏராளமானோர் இறந்துள்ளனர்.

தொற்றின் முதல் மற்றும் 3வது அலையைவிட 2வது அலையில் பாதிப்பும், உயிரிழப்பும் அதிகமாக இருந்தது. கடந்த ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பின்னர் தினசரி தொற்று பாதிப்பு எண்ணிக்கை படிப்படியாக குறையத் தொடங்கியது. ஒற்றை இலக்கத்தில் பதிவாகி வந்த தினசரி தொற்று பாதிப்பு, கடந்த 2 வாரங்களாக இரட்டை இலக்கத்தில் பதிவாகி வருகிறது.அதன்படி, நேற்று முன்தினம் தமிழகத்தில் தினசரி தொற்று பாதிப்பு 28 ஆக பதிவானது. தமிழகம் மட்டுமின்றி கேரளா, ஆந்திரா, மகாராஷ்டிரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் தினசரி பாதிப்பு சற்று அதிகரித்துள்ளது. இதனால் கரோனா தொற்று மீண்டும் பரவத் தொடங்கியுள்ளதா? என்ற அச்சம் பொதுமக்களிடம் ஏற்பட்டுள்ளது.

# அனைத்துலக மகளிர் தினம் (எண்சீர் ஆசிரிய விருத்தம்)

-----------------------------------

அனைத்துலக அணங்குகளின் ஆனந்தத் தினத்தை
அகிலம் முழுவதும் கொண்டாடும் அரிவையரே!
வினைத்திறன் மிக்க வனிதைகளாய் வாழவேண்டி
விமலியை வினயமாய் வேண்டி நிற்கிறேன்.
பேதை மங்கை பெதும்பை மடந்தை
பேரிளம்பெண் அரிவை தெரிவை உன்பருவம்
போதைப் பொருளல்ல பெண்ணென புரியும்படி
புரிய வைப்பாய் புவியில் உள்ளோர்க்கே!.

பெண்ணுக்கு அறிவைப் படைத்தான் இறைவன்
பண்படாச் சிலமூடர் அறிவைக் கெடுத்தார்
விண்ணை முட்ட விவேகம் வளர்த்தே
வீரம் விளைந்த வனிதையாய் வாழ்ந்திடு
மலரென மருட்டியே மாதரை மடக்கினார்
மறக்குடி மகளென்று மறந்திடாக் காட்டு
பலருனைப் பாராட்டப் பண்பொடு வாழ்ந்து
பாரினில் உன்புகழ் பதியச் செய்வாயே!

பட்டம் படித்துப் பதவிகள் பெற்று
பாமர மக்களின் பாதுகாப் பளிப்பீர்
திட்டம் தீட்டும் திறமையை வளர்த்தே!
தீமையை ஒழிக்கும் திடத்தை வளர்ப்பீர்
பாட்டும் பரதமும் பழுதறக் கற்றே!
பாரினில் நீரும் புதுமைகள் படைப்பீர்
பாட்டுக்கொரு புலவன் பாரதி கண்ட
புதுமைப் பெண்ணாய்ப் பூமியில் வாழ்வீரே!

கப்பலைத் துறையில் காத்திருக்கக் கட்டவில்லை
கப்பலாய் இருக்கக் கடப்பைக் கடந்துவா
இப்படி எத்தனைநாள் ஏமாந்து இருப்பாய்
இப்போதே கூடுவிட்டு வெளியே வந்துவிடு
பெண்ணொரு அழகிய புல்லாங்குழல் போன்றவள்
பொறுமையாய் வாசிக்கத் தெரிய வேண்டும்
பெண்ணெனும் தெய்வத்தைப் போற்றி நிற்போம்
பெண்மையை மதித்து வாழ்த்துச் சொல்வோமே!

சாதிக்குத் துடிக்காமல் சாதிக்கத் துடியுங்கள்
சரித்திரம் உங்களை நிச்சயம் பதியும்
சாதித்துச் சென்ற சகோதரிகள் பட்டியல்
தாராளம் உண்டு தரணியில் எங்கும்
காலனிடம் கணவனைக் கவர்ந்த சாவித்திரி
கணவனுக்காய் மதுரையில் நீதிகேட்ட கண்ணகி
காலநேரம் பார்க்காமல் களமாடிய காரிகைகள்
கதைகளைக் கவனமாய்ப் படித்துப் பார்ப்பீரே!

வரலாற்றைப் படிக்காமல் வரலாறு தெரியாது
வானத்தை வில்லாய் வளைக்க வேண்டாம்
வருங்காலச் சந்ததிக்கு வழிகாட்டிச் செல்லுங்கள்
வரலாறு உங்களுக்கு வாழ்த்துச் சொல்லும்
வானத்து விண்மீனாய் விளங்க வேண்டாம்
வீட்டில் ஒளிவிடும் விளக்காய் இருங்கள்
வானம் பாடிபோல் வட்டமிட்டு வலம்வருவீர்
வானவரும் வந்து வணங்கி வாழ்த்துவரே!

(விமலி----சரஸ்வதி, பார்வதி)




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# இவ்வார ராசிபலன்

**10-03-2023 வெள்ளி தொடக்கம் 16-03-2023 வியாழன் வரையும்**



**மேஷம்:** வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும் வாரம். அலைச்சல் அதிகரிக்கும். உடல்சோர்வு ஏற்படும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். இடமாற்றம் ஏற்படும். நிதி பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். வழக்கு சாதகமாகும். சிறப்புகள் சேரும். வெறுப்புகள் அகலும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும். தேவைகள் பூர்த்தியாகும். தொல்லைகளில் இருந்து விடுபடுவீர்கள். நாவடக்கம் தேவை. அற்புத வாய்ப்பு கிட்டும். பெண்களின் ஆலோசனைப் பலன் தரும். அணி-கலன் சேரும். சுபகாரியம் கைகூடும். உறவினரால் பணவிரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். விவாக முயற்சி வெற்றி தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். பணவரவு உண்டு. பயணம் அனுகூலம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. காரியங்களில் வெற்றி காண்பீர்கள். இக்கட்டான சூழ்நிலைகளில் இருந்து விடுபடுவீர்கள். எண்ணங்கள் நிறைவேறும். சுயநலம் கூடும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திர சொத்து சேரும். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ எல்லையம்மன், அதிர்ஷ்ட எண்: 5,2,3,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,K



**ரிஷபம்:** தொல்லைகள் ஒழியும் வாரம். வீண் வம்பு விலகும். நோய், நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை. உறவினர் வருகை தொல்லைத் தரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். தாய்வழி உறவில் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பழையக் கடன் வசூலாகும். கணவன் மனைவி அன்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் கூடும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். தன வரவில் மேன்மை கூடும். நிதி நிலைமை சீராகும். பணவரவு உண்டு. பிரச்சனைகள் குறையும். உடல்நலனில் கவனம் தேவை. உடன்பிறப்புக்களால் சலசலப்பு ஏற்படும். கணவன், மனைவி கருத்து வேறுபாடு ஏற்படும். தனவரவு ஏற்படும். பொறுமையை கையாள வேண்டும். குழப்பங்கள் அகலும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கைகூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழில் லாபம் உண்டு. குடும்பம் மேன்மை தரும். ஆரோக்கியம் சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. பயணம் அனுகூலம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 4,2,1,8
அதிர்ஷ்ட நிறம்: மரகதப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,T



**மிதுனம்:** மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும் வாரம். பதவி உயர்வு ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். மன உற்சாகம் கூடும். பணவரவு சேரும். உடல் உபாதை தோன்றும். சுபச்செய்தி வரும். வியாபார விரயம் கூடும். உத்தியோகம் கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன்பிறந்தோரால் ஆதாயம் உண்டு. தொழில் மோசடி ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பாக்கிகள் வசூலாகும் குடும்பத்தில் அமைதி ஏற்படும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கை கூடும். நீண்ட நாளைய நோய் தீரும். இல்லத்தல் மகிழ்ச்சி கூடும். தேகப் பலன் கூடும். வாகன யோகம் உண்டு. தடைகள் விலகும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். பொருளாதார நிலை உயரும். தொட்ட காரியம் ஜெயமாகும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். ஆபரணங்கள் சேர்க்கை ஏற்படும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். மாணவர்களுக்கு சாதகமான காலம். வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது. சொத்துக்கள் சேரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். பணத்தேவைகள் அதிகரிக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வழக்குகள் சாதகமாகும். வீடு, மனை யோகம் உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஊக்கம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K



**கடகம்:** சந்தோஷமான நிகழ்வு அமையும் வாரம். பொன்னான தருணம். தொழில் ஒப்பந்தங்கள் குவியும். அன்னிய தேச பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். உயர் அதிகாரி பாராட்டு கிட்டும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். இல்லத்தில் ஆனந்தம் குடிக்கொள்ளும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். நன்மைகள் அதிகமாகும். குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். எதிரிகள் விலகி செல்வார்கள். ஏற்றம் தரும் நாளாக அமையும். கோதுமை தானம் தாய் நலம் சேர்க்கும். பொருள் சேதம் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து உயரும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத்திறமை அதிகரிக்கும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. கலைத்தொழில் திருப்பம் தரும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச்செலவு உண்டு. வாய்ச்சொல் பலன் தரும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். இன்றைய பிரார்த்தனை நன்மையை கூட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,F



**சிம்மம்:** புத்துணர்வோடு செயல்படும் வாரம். கடன் சுமை தீரும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகளால் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. எதிலும் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டு பெருகும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். துன்பங்கள் விலகும். கடன் சுமையிலிருந்து விடுபடுவீர்கள். இனிய தகவல் வந்து சேரும். கல்வி செலவு உண்டு. மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். வசந்தம் தேடி வரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். உறவினரால் பாதகம் உண்டு. பழைய பாக்கி வசூலாகும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவர். நிர்வாகச் செலவுகள் கூடும்.



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377

வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். பொதுப்பிரச்சனைகள் விலகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். போட்டிகள் அதிகமாகும். பெண்களுக்கு நாவடக்கம் தேவை. பொறுமையை கையாள வேண்டும். பொதுப்பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்க்கவும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பங்குச்சந்தையில் லாபம் தரும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 2,9,7,4
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z



**கன்னி:** மேன்மைகளை சந்திக்கும் வாரம். உள்ளம் மகிழும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். வாய்ப்புகள் தேடி வரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். இடமாற்றம் ஏற்படும். அன்பு அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். ஆசைகள் நிறைவேறும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். பெரியோர்களின் வாழ்த்துக்கள் கிடைக்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மங்களச்செய்தி வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். ஆரோக்கியம் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புகள் கூடும். சோம்பல் அதிகரிக்கும். வியாபாரம் செழிக்கும். கணவன், மனைவி அன்பு கூடும். வருத்தங்கள் மறையும். தடுமாற்றம் ஏற்படும். காதல் கசக்கும். உடல்சோர்வு ஏற்பட்டு மறையும். வழக்கு சாதகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காலபைரவர், அதிர்ஷ்ட எண்: 1,5,3,9
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,I



**துலாம்:** எண்ணங்கள் நிறைவேறும் வாரம். சுயநலம் கூடும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். காதல் கை கூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர். குடும்பம் ஒற்றுமை அதிகரிக்கும். முயற்சிகள் வெற்றி தரும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் தேவை. உன்னதமான காலம். நிதி நிலைமை சீராகும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலடுகளை தவிர்க்கவும். சுபச்செலவு கூடும். பொறுப்புக்கள் கூடும். வேலைப்பளு அதிகரிக்கும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கடன்சுமை குறையும். பூர்வீக சொத்து சேரும். தொல்லைகள் விலகும். வீண் வம்பு விலகும். நோய், நொடிகள் அகலும். சேமிப்பு உயரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். தாய்வழி உறவில் நன்மை உண்டு. கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் கூடும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். குழப்பங்கள் அகலும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கைகூடும். வாகன அபிவிருத்தி உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. ஆரோக்கியம் சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காமதேனு, அதிஷ்ட எண்: 7,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,J



**விருச்சிகம்:** தன்னடக்கத்தோடு செயல்படும் வாரம். செயல்களில் கவனம் தேவை. மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். பதவி உயர்வு ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். மன உற்சாகம் கூடும். பணவரவு அதிகரிக்கும். உடல் உபாதை தோன்றும். சுபச்செய்தி வரும். வியாபாரம் விரயம் கூடும். உத்தியோக கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன் பிறந்தோரால் ஆதாயம் உண்டு. தொழில் மோசடி ஏற்படும். கூட்டுத்தொழிலை தவிர்க்கவும். இடையூறுகள் அதிகமாகும். பால் தானம் பாவம் போக்கும். செல்வாக்கு பெருகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். பயணம் ஆதாயம் தரும். தொழில் வழி தொல்லை குறையும். சுய பலம் கூடும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். கையிருப்பு கரையும். பணிவான பேச்சுகள் தேவை. புகழும், பொருளும் பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். பித்தளைத் தொழில் லாபம் தரும். தோல்விகள் நிறைவேறும். தனவரவு உண்டு. உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். வாழ்க்கை வசதி கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 3,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C



**தனுசு:** தனம் சேரும் வாரம். இல்லத்தில் அமைதி கூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். வாழ்வு நிலை உயரும். பங்குச்சந்தை மாற்றம் தரும். ஆடம்பரம் அதிகரிக்கும். கௌரவமான காலம். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகமாகும். முன் கோபத்தினை குறைக்க வேண்டும். மேன்மையாக செயல்படுவீர்கள். எதிலும் கவனம் வேண்டும். தன்னம்பிக்கை கூடும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும். நட்பு பெருகும். வராத கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆலோசனை பலன் தரும். பெரியோர்களின் ஆசி கிடைக்கும். கலைஞர்களுக்கு இல்லம் தேடி வாய்ப்பு வரும். தோஷங்கள் ஒதுங்கும். நன்மைகள் நாடி வரும். குடும்ப கௌரவம் உயரும். பயணத்தால் பலன் உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். சீரான வாழ்வமையும். சிந்தனைகள் மேலோங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். திறமைகள் வெளிப்படும். அன்றாட நாட்கள் மன மகிழ்ச்சியைத் தரும். மனதில் அளவில்லா சந்தோஷம் உண்டாகும். பங்குச்சந்தை தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வினைதீர்க்கும் விநாயகர், அதிர்ஷ்ட எண்: 5,9,8,7
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,D

**(தொடர்ச்சி 30 பக்கம்)**

# அன்பின் தொனி - 683

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**ஒரே தேவனை அறிந்து அவரையே வழிபடு**

படைப்புகளை வணங்காமல் படைத்தவரை மட்டுமே வணங்க வேண்டும் என்பதை பரிசுத்த வேதாகமத்திலிருந்து எடுத்து விபரித்துக் காண்பித்ததை மேலே கொடுக்கப்பட்ட பல பகுதிகளிலிருந்து இதுவரை வாசித்து அறிந்தீர்கள், மேலும் படைத்தவரைக் குறித்த முழுமையான அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பரிசுத்த வேதாகமத்தை (Holy Bible) அவதானமாக திறந்த உள்ளத்தோடு படித்து, உங்களைப் படைத்தவரை சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டு அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்கள்.

**இலவசமான இரட்சிப்பைப் பெற்றுக்கொள்**

உங்களைப் படைத்தவரான மெய்யான தேவனையும், அவருடைய சத்தியத்தையும் வேதாகமதின் மூலமாக இப்போசரிவர அறிந்த நீங்கள் மனந்திரும்பி, பாவ அறிக்கை செய்து, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தேவகுமாரன் என்பதையும், அவர் சகலமனிதருடைய பாவங்களுக்காகவும் கல்வாரிச் சிலுவையில் இரத்தம் சிந்திமரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து பரலோகத்தில் பிதாவான தேவனுடைய வலதுபார்சத்தில் உட்கார்ந்து, எமக்காகப் பரிந்து பேசுபவராய் இருக்கிறார் என்பதையும், இருதயத்திலே விசுவாசித்து, வாயினாலே அறிக்கையிட்டு, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கல்வாரிச் சிலுவையில் எமக்குப் பெற்றுத் தந்த அந்த இரட்சிப்பை, இன்றே இலகுவாகவும், இலவசமாகவும் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் தேவ நீதியின்படி முழுக்கு ஞானஸ்நானம் பெற்று தேவ ஆவியானவரின் நிறைவோடு ஒருபரிசுத்த வாழ்க்கை வாழ்வதற்கு உங்களை இன்றே ஒப்புக்கொடுங்கள்.

கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். ஆவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. - **ரோமர் 10: 9-11**

தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். ஆவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான், விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று. - **யோவான் 3: 16-18**

**இரட்சிப்பிற்கான அறிக்கை**

**ஆண்டவராகிய இயேசுவே!**

நான் பாவிஎன்பதை அறிக்கை செய்கிறேன். என் பாவங்களை தயவாக மன்னித்து, என்னைச் சுத்திகரித்து என் இருதயத்தில் வாசஞ்செய்து என் வாழ்க்கையைச் சீர்படுத்த எனக்குள் வாரும். இயேசுவே, நீங்கள் தேவனுடைய குமாரன் என்பதையும், என்னுடைய பாவங்களுக்காகவும் சிலுவையிலே மரித்தீர்கள் என்பதையும், மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தீர்கள் என்பதையும் நான் விசுவாசிக்கிறேன். உங்களை என் சொந்த இரட்சகரும் மீட்பருமாக ஏற்றுக்கொள்கிறேன். நான் உங்களை நேசிக்கிறேன், நீங்களே என்னை வழிநடத்துங்கள். நான் இப்போ உமது நேசமகன்/மகள் என்பதை அறிக்கை செய்கிறேன்.

நீங்கள் உங்கள் இருதயத்தில் விசுவாசித்து இப்போ செய்த ,ந்தஅறிக்கையின் நிமித்தம் கிருபையாக இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டீர்கள். மேலும் நீங்கள் தேவநீதியின்படியும், தேவ கட்டளைக்கும் அமைய முழுக்கு ஞானஸ்நானம் பெற்று ஒருகிறிஸ்தவ ஜீவியம் ஜீவக்க ஒரு தேவஊழியரிடம் சென்று வேத ஆலோசனையோடும், ஜெபத்தோடு அதைப் பெற்று, பரிசுத்தஆவியின் வழி நடத்துதலோடு ஆவிக்குரிய ஒருதேவ சபை அங்கத்தவராய் பரிசுத்த வாழ்க்கை வாழும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கர்த்தர்தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

**கிறிஸ்து இயேசுவிற்குள் அன்பான சகோதர சகோதரிகளே!**

நீங்கள் வாசித்துமுடித்தவை படைப்புகளையல்ல, படைத்தவரையே வணங்க வேண்டும் என்பதை விளக்கியதோடு, உங்கள் ஆன்மீக வாழ்க்கைக்கும், பரிசுத்த ஜீவியத்திற்கும் உறுதியையும், உற்சாகத்தையும் தந்து உங்களைத் திடப்படுத்தி இருக்குமென்று அடியேன் விசுவாசிக்கிறேன். மேலும், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், பிதாவான தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியானவருடைய அன்னியொன்னிய அக்கியமும் இன்றும் என்றும், அவருடைய வருகைமட்டும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக, ஆமென்.

பாஸ்டர் அல்பிரட் செருபிம்
மீட்பர் கிறிஸ்து பிரம்டன், கனடா.



# ஈழத்துத் திருக்கோவில்கள் 1039



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில் – மட்டக்களப்பு

" வாழும் படியொன்றும் கண்டுகொண்டேன் மனத்தேயொருவர்
வீழும்படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே"

கண்ணகி கோயில்களில் நடைபெறும் வருடாந்த சடங்கிற்காக வைகாசியில் கதவுதிக்கப்படுவதையே கதவு திறத்தல் என்னும் சடங்காகக் கொண்டாடுவர். ஞாயிற்றுக்கிழமை பகலில் நடைபெறும் இச்சடங்கில் மூலத்தானத்துள் வைக்கப்படும் 13 கும்பங்களையும், ஞாயிற்றுக்கிழமை இரவு கலியாணக்காலின் முன்பு வைக்கப்படும் 5 கும்பங்களையும் சிலம்புகளின்மீது வைத்து உருக்கொடுத்து, பின்பு உரிய இடங்களுக்கு எழுந்தருளப்பண்ணுவர். அப்பொழுது கட்டாடியார் உருவேறிய நிலையிலே காணப்படுவார். குளிர்த்தி ஆடுவதற்கு கண்ணகி அம்மனை அழகாக எழுந்தருளப்பண்ணுவர். வயது முதிர்ந்த கண்ணகை அம்மனாக கட்டாடியார் வேடந்தாங்கி, கண்ணகை அம்மனை மாராப்புச்சீலையுள் வைத்துக் கட்டிக்கொண்டு வருவார். கொம்புமுறி விளையாட்டு நடைபெற்ற பின்னர், செட்டிபாளையத்துக் கண்ணகை அம்மனை களுதாவளைக்கு எழுந்தருளப்பண்ணி, பள்ளியங்கட்டிலில் பொங்கி, குளிர்த்தி ஆடுவர். செட்டிபாளையத்திலிருந்து கட்டாடிமார் கண்ணகை அம்மனை எழுந்தருளப்பண்ணி வரும்போது தேவாதிகள் ஆடிவர, பூசாரிமார் காவியம்பாடி உடுக்கு அடித்துவர வழிநெடுகிலும் மங்கல விளக்கேற்றிப் பூரண கும்பம் வைத்து வழிபடுவது வழக்கம்.

குளிர்த்தி ஏடுபடித்தல் நிகழ்வும் மிகவும் பக்திபூர்வமாக நடைபெறும். மூலத்தானத்துள் வீற்றிருக்கும் கண்ணகி அம்மனை குளிர்த்தி மண்டபத்துள் எழுந்தருளச் செய்யும் நிகழ்வு பார்ப்போரைப் பக்திப் பரவசத்துக்குள்ளாக்கும். வருடத்தில் ஒரு முறை நடைபெறும் இச்சடங்கில், குளிர்த்திச் சடங்கினைச் செய்பவர்களே குளிர்த்தி ஏடு படிக்கின்ற பொறுப்பையும் ஏற்பர். செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில் ஆண்டு உற்சவம் வைகாசிச் சடங்கு திருக்குளிர்த்தியுடன் நிறைவுபெறமாட்டாது. எட்டாம்நாள் திங்கட்கிழமை நடைபெறும் எட்டாம் சடங்குடனேயே சடங்கு நிறைவுபெறும்.

இவ்வாறு நடைபெறும் எட்டாம் சடங்கினை தெளிவு சடங்கு என அழைப்பர். திருக்குளிர்த்தி நிறைவு பெற்ற பின்னர், ஆலயத்திலே செய்ய வேண்டிய சகல வேலைகளையும் செய்து முடித்தபின்னர், மூலத்தானத்துள் இருக்கும் தூண்டாமணி விளக்கிற்கு நிறைய எண்ணெய் ஊற்றி, அம்மனை வழிபட்டு மூலத்தானத்துக் கதவைப் பூட்டுவர். இவ்வேளையில் கதவைப்பூட்டியவரும், அவர் உதவியாளரும் மட்டுமே அவ்விடத்திலே நிற்பர். ஏனையோர் அவ்விடத்திலிருந்து அகன்று சென்றுவிடுவர். விளக்கேற்றிய பின் எட்டுநாள்வரையும் எவரும் கோயில்பக்கம் செல்லமாட்டார்கள். எட்டாம் நாள் திங்கட்கிழமை மீண்டும் கதவு திறக்கப்படும். ஏற்றிவைத்த சுடர் விளக்கு எரிந்துகொண்டிருந்தால், உலகத்திற்கு நன்மை எனவும், தீபம் அணைந்திருந்தால் தீமை எனவும் நம்புவர். இச்சடங்கிலன்று நாகதம்பிரானுக்குப் பொங்கல் நடைபெறும்.

அத்தோடு அன்னதானமும் நடைபெறும். எட்டாம் சடங்கன்று செட்டிபாளையம் கண்ணகை அம்மன் கோவில் பூட்டப்பட்டு, மீண்டும் அடுத்த வருடமே மேற்கூறிய சடங்குகளோடு கோயில் கதவு திறக்கப்படும் என்னும் பாரம்பரியம் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. அண்மைக்காலத்தில் இப் பாரம்பரிய முறையிலே மாற்றம் ஏற்பட்டுள்ளது. சித்திரை புதுவருடப்பிறப்பு, கார்த்திகை விளக்கீடு, மற்றும் தைக்குளிர்த்தி போன்ற திருநாட்களில் கதவு திறக்கப்பட்டு இச்சடங்குகள் நடைபெறுவதான நடைமுறை மாற்றம் இக்கோயிலில் காணப்படுகின்றது. ஆரம்பகாலங்களில் இவ்வாறான திரு நாட்களில், கோயில் மூலத்தானக்கதவு திறக்கப்படாமலே நடைபெற்று வந்துள்ளது. செட்டிபாளையம் கண்ணகை அம்மன் ஆலயத்திலே பல கும்பாபிஷேகங்களை சைவக்குருமார் முன்னின்று சிறப்பாக நிறைவேற்றியுள்ளனர். 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் பின்னர் தினப்பூசையும் இடம்பெற்றுள்ளது.

செட்டிபாளையம் கண்ணகி அம்மன் ஆண்டுச் சடங்கின்போது, விநாயகர் பானையைத் தவிர வேறு பொங்கல் இடம்பெறுவதில்லை. திங்கட்கிழமை திருக்குளிர்த்திக்காக விநாயகர்பானை பொங்கப்படும். இப்பொங்கலுக்குரிய மூன்று பானையை மண்பானை வனைவோரிடம் சொல்லி, சித்திரவேலைப்பாடுகளுடன் பிரத்தியேகமாகச் செய்வர். தமது நேர்த்திகள் நிறைவேற மடிப்பிச்சை பெறுவது வழக்கம். இவ்வாறு கண்ணகைஅம்மனுக்கு மடிப்பிச்சையாக வந்த நெல்லை மூன்று பானைகளிலும் நிரப்புவர். இம்மூன்று பானைகளையும் தலையில் தாங்கி மேளதாளத்துடன் கோயிலை வலம் வந்து, ஆலய முன்றலிலே வெள்ளை விரித்து. உரலில் குற்றிப் பச்சைஅரிசி எடுக்கப்படும். நேர்த்திக்கடன் வைத்த பெண்களேநெல்குற்றி அரிசி எடுப்பர். மூன்று பானைகளுள் பெரிதான பானையை நடுவில் வைத்து சிறிய பானைகள் இரண்டையும் பெரிய பானையின் இருபுறமும் வைப்பர். பின்னர் ஆலய முகப்பிலே அடுப்புமூட்டி பொங்கல் நடைபெறும். நடுப்பானையில் பால்பொங்கி வரும்போது, கட்டாடியார் கொட்டுவம் கட்டிப் பால் எடுத்து அம்மனுடைய முந்தானை மடையிலே பத்திரப்படுத்துவார். குளிர்த்தி முடிவுற்ற பின்னர் முட்டி கூறுதல் நிகழ்கின்றது. தேசம், வன்னிமை, குடி, கோத்திரம், வண்ணக்கர். கடக்கண்டவர், தலைமைக்காரர் முதலியோரைக் கௌரவப்படுத்தும் நோக்கில் இச்செயல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயிலில் சடங்கு செய்யும் பூசாரியாரைக் கட்டாடியார் என்பர். செட்டிபாளையம் கண்ணகி அம்மன்கோயில் தோன்றிய காலம் முதல், பரம்பரை பரம்பரையாக இவர்களது சேவை இக்கோயிலிலே இடம்பெற்று வருகின்றது. ஆரம்பகாலத்திலே வளர்ச்சியடையாதநிலையில் இக்கோயில் இருந்தபொழுது, கண்ணகி அம்மன் சிலை, மற்றும் கோயிலுக்குரிய பொருட்களைப் பாதுகாக்கும்பொறுப்பை இவர்களே ஏற்றுள்ளனர்.

**- வளரும்...**





# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**மகரம்:** சிறப்புக்கள் சேரும் வாரம். தேவையில்லா பயங்கள் விலகும். இறை விழிப்புணர்வு கூடும். அன்பாக மற்றவர்களிடத்தில் நடந்து கொள்வீர்கள். சமூக செயலில் ஈடுபடுவீர்கள். புதுத்தொழிலை ஆரம்பிக்க முன் வருவீர்கள். உடல்நிலையில் கவனம் தேவை. குதூகலம் தாண்டவமாடும். கடன் தொல்லை தீரும். வீடு வாங்கும் யோகம் உண்டு. அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உற்சாகம் கூடும். மன தைரியம் அதிகமாகும். வேலை பளு அதிகரிக்கும். அடுத்தவர்கள் பிரச்சனையில் தலையிடுவதை தவிர்க்கவும். மனதில் உற்சாகம் அலைமோதும். மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். தன வரவுகள் தடைப்படும். திடீர் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. கவனமுடன் செயல்பட வேண்டும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பெற்றோர் சொல்படி நடக்கவும். வெற்றியை எட்டும் காலம். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். கருத்து வேறுபாடு மறையும். தொல்லை தருபவர்கள் விலகி செல்வர். வயிறு உபாதை வந்துசேரும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 1,5,3,2
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,T



**கும்பம்:** வீடு, மனை யோகம் கிடைக்கும் வாரம். ஆதாயம் பெருகும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. பிறருக்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். உதவிகள் கிடைக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். பதவி வாய்ப்பு வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். வெளியூர் பயணம் பயன் தரும் வகையில் அமையும். கிருபைகள் சேரும். கல்வியில் ஆர்வம் கூடும். விருப்பமான வாய்ப்பு கூடி வரும். குதூகலம் சேரும். பழையக்கடன் தீரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். காதல் எண்ணம் ஏற்படும். திருமண வாய்ப்புகள் கூடி வரும். மனகுறைகள் அகலும். மன விரக்தியில் இருந்து விடுபடுவீர்கள். பகைவர் பணிந்து நிற்பர். பணவரவு உயரும். பொருளாதாரம் உயரும், பொன், பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டு. வாகனச் செலவு ஏற்படும். முயற்சி பலன் தரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. குடும்ப வளம் கூடும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். சுபிட்ஷங்கள் பெருகும். வளமான வாழ்வு அமையும். கடன் பிரச்சனை தீரும். வழக்குகள் சாதகமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 2,9,8,6
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,T



**மீனம்:** சுதந்திரமாக செயல்படும் வாரம். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். விரும்பியது நிறைவேறும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர்விடும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கை துணையால் வளம் பெருகும். ஏற்றமான தருணம். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகம் உண்டு. ஆபரணச் சேர்க்கையுண்டு. அதிகாரம் குவியும். ஆபத்துக்கள் விலகும். சகோதர வழியில் கவனம் தேவை. பயண முயற்சி பலன் தரும். நினைத்த விஷயம் நிறைவேறும். கட்டிடத் தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கும், கலைஞர்களுக்கும் ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் பெருகும். அன்னிய தேச பயணம் உண்டு. வாழ்க்கை துணையால் வளம் பெருகும். விரக்திகள் மறையும். வங்கி சேமிப்பு உயரும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். கர்ம வினைகள் அகலும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். இல்லத்தில் அமைதி பெருகும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தட்சிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 4,8,2,3
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,Y


SUBRA
SUBRA MORTGAGE FINANCIAL
MORTGAGE SOLUTIONS
✦ RESIDENTIAL ✦ COMMERCIAL ✦ INDUSTRIAL
✦ VACANT LAND ✦ CONSTRUCTION
Know the basic things on Mortgage to find a better way for your Future!
CONTACT US TODAY
NESAN
416-908-5656
1st & 2nd Mortgages
Purchase
Refinance
Renewal
Switches
Equity lind of Credit
Pre-approvals
Self-employed
Multi-rental properties
New immigrants
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406, Toronto, M1B 2W1
www.subra.com
WE DEAL WITH ALL BANKS
Brokerage #10330
Powered By
MORTGAGE ALLIANCE
Scotiabank
radius financial
EQUITABLE BANK
RMG mortgages
Canada Trust
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
HOME TRUST
MCAP

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Lanka Salon & Spa
லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
Men's Hair Cut
Beard Lineup
Kid's Hair Cut
Hair Oil Massage
Baby Shave
Hair Colouring
Facial
BARBER SHOP
905-808-9930
5 MCMURCHY AVE N. UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
905-783-1895
3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1405 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 10, 2023

# இலங்கையில் 100 வது இருதய சத்திர சிகிச்சைகளைச் செய்து அவர்கள் உயிர்களைக் காப்பாற்றியு கனடா நிவாரணம் அமைப்பின் ஸ்தாபகர் செந்தில் குமரன்

### கொழும்பு லங்கா வைத்தியசாலையில் இடம்பெற்ற சிறப்பு வைபவத்தில் இலங்கைக்கான கனடிய தூதரகத்தின் உயர் அதிகாரி

## Canada's Senthil Kumaran from 'Nivaranam' had crossed 100 life-saving Heart surgeries in Sri Lanka

***Grand celebrations at the Lanka Hospital in Colombo with the Senior Officer of the Canadian Embassy in Sri Lanka***




கடந்த 04-03-2023 அன்று கொழும்பில் அமைந்துள்ள 'லங்கா வைத்தியசாலையில்' கனடா 'நிவாரணம்' அமைப்பின் ஸ்தாபகர் செந்தில் குமரன் கலந்து சிறப்பித்த வைபவம் ஒன்றில் அவரது நிவாரணம் அமைப்பின் உதவியோடு அந்த லங்கா வைபத்தியசாலையில் மேற்கொள்ளப்பெற்ற 100 வது இருதய சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பெற்றது தொடர்பான கொண்டாட்டம் இடம்பெற்றது. இதில் இலங்கைக்கான கனடிய தூதரகத்தின் உயர்அதிகாரி ஒருவரும் கலந்து சிறப்பித்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.
(உள்ளே 21ம் பக்கத்தில் தொடர்ச்சி)



# உரையரங்கு மேடையில் கனடா வாழ் எழுத்தாளர் அ. முத்துலிங்கத்தை பல தடவைகள் பாராட்டிய தமிழகத்தின் பட்டிமன்றத் தாரகை பாரதி பாஸ்கர்

கனடாவில் இயங்கிய வண்ணம் எமது தாயகத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு நோயாளிகளுக்கு தேவையான பல மருத்துவ உதவிகளை வழங்கிவரும் "சர்தேச மருத்துவ மற்றும் சுகாதார அமைப்பினர் நடத்திய வருடாந்த விழாவிற்கு தமிழகத்தின் பட்டிமன்றத் தாரகை பாரதி பாஸ்கர் அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தனர்.
(உள்ளே 9ம் பக்கத்தில் தொடர்ச்சி)

# ஸ்காபுறோவில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் ஆன்மீகக் குரு பங்காரு அடிகளாரின் 83வது பிறந்த தின வைபவம்





கனடா ஸ்காபுறோவில் நடைபெற்ற மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் அதிபரும் ஆன்மீகக் குருவுமாகிய பங்காரு அடிகளாரின் 83வது பிறந்த தின வைபவத்தை ஸ்காபுறோ ஆதிபராசக்தி குரு மன்றத்தின் ஸ்தாபகர் சக்தி ஞானம்மா அவர்கள் தனது ஆலயத்தின் தொண்டர்கள் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் சகிதம் ஏற்பாடு செய்திருந்தார். கடந்த 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற இந்த விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன பங்காரு அடிகளாரை பாராட்டும் வகையில் ஒன்றாரியோ மாகாண அரசாங்கத்தின் சார்பில் உறுப்பினர் லோகன் கணபதி மற்றும் அரிஸ் பாபிகியன் ஆகியோரின் பாராட்டுப் பத்திரங்கள் நேரடியாக சக்தி ஞானம்மா அவர்களிடம் வழங்கப்பெற்றன. நிகழ்ச்சிகளை இசைக் கலைஞர் அருட்சோதி அவர்கள் தொகுத்து வழங்கினார்.

இங்கே காணப்படும் படங்கள் விழாவில் எடுக்கப்பட்டவையாகும்.

# கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நடத்திய சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம்



கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நடத்திய சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம் கடந்த புதன்கிழமையன்று ஸ்காபு-றோ கொன்வென்சன் சென்றர் விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உற்ப்பினர் லோகன் கணபதி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். சிறப்பு பேச்சாளராக தமிழகத்தின் பட்டிமன்றப் பேச்சாளர் திருமதி பாரதி பாஸ்கர் கலந்து கொண்டு சபை-யோரைக் கவரும் வகையில் பெண்களின் முன்னேற்றம் தொடர்பாக உரையாற்றினார்.
(உள்ளே 17ம் பக்கத்தில் தொடர்ச்சி)

இலவச கனடா விசா ஆலோசனை யாழ்ப்பாணத்தில்
மார்ச் 19 2023
JETWING HOTEL JAFFNA
37, Mahatma Gandhi Road.
நேரம்: காலை 10:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை
STUDENT VISA
SCHOOLING VISA WITH PARENTS
Kids Age 6 to 17 Years | No Interview, No IELTS
VISIT VISA FAMILY / TOURIST BUSINESS
REJECTION VISA APPEAL & MANY MORE...
For inquires Call on 0777 761 346
flex Institute
Level 12, Parkland Building, 33 Park St, Colombo 2.
P. Jegan

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136